www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
டிச.01–07,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 181

## கிழக்கில் விரியும் அரசியல் – இராணுவ இரகசியத் தந்திரம்

## வலை

எக்ஸ்ரே ரிப்போர்ட்



## நக்மாவின் மனம் கவர் நாயகன்



படிப்பகம்

# முரசம்

## கடன்பட்டார் களிப்புற்றால்...?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

"சென்றோம், வென்றோம்,
திரும்பிவந்தோம்"
என்று பூரித்துப்போயிருக்கிறார்கள்
கடன் வழங்கும் நாடுகளின்
கூட்டத்துக்குச் சென்று வந்தவர்கள்!

கடன் கேட்டு செல்வதும்
வருடா வருடம்
கடன் தொகையை அதிகரித்துக்
கேட்டுப் பெறுவதும்
அத்தனை பூரிப்பான விஷயமா?

அவர்களிடமே கடன்வாங்கி
அந்தப் பணத்தில்
அவர்களிடமே ஆயுதம் வாங்கி
யாருக்கு லாபம் சேர்க்கப்படுகிறது?

'சுண்டைக்காய் காற்பணம்
சுமைகூலி முக்காற் பணம்.'
போர் தொடரும்வரை
நாட்டின் வரவு-செலவிலும்
அதே கதைதான்.

கடன் தருகிறவர்களுக்கு
கட்டாயம் நன்றி சொல்ல வேண்டும்!
கடன்பட்டதை நினைத்து
கலங்கியும் ஆகவேண்டும்!

"கடன்வாங்குவதில் நாம்தான்
முன்னணியில் நிற்கிறோம்" என்பது
முகம் மலர்ந்து, முச்சந்தியில் நின்று
கூவிச் சொல்லத்தக்க விஷயமா?

'கடன் பட்டார் நெஞ்சம்போல்
கலங்கினான் இலங்கை வேந்தன்.'
இணையற்ற சோகத்துக்கு
எடுத்துக்காட்டாகச் சொல்ல
கடன்பட்டார் நெஞ்சம்தான்
கம்பனுக்கு உதாரணமாகக் கிடைத்தது!

இன்றைய வேந்தர்கள்
மகிழ்ச்சியாகச் சொல்வதற்கு
கடன்பட்ட செய்திதான்
கச்சிதமாகக் கிடைத்திருக்கிறது!

86 கோடி டொலர் என்பது
இன்றைய யுத்த நிலவரப்படி
மிகக் குறைவான தொகைதான்.

வாங்கிய கடனை வைத்து
வறுமையை ஒழிக்க முடியாது.
யுத்தப் பசிக்கு
தீனிபோடுவதில்
கடன் உதவி கரைந்துவிடும்!

எந்த ஆட்சி
பதவிக்கு வந்தாலும்
விரலுக்கு மிஞ்சிய வீக்கத்தை
கட்டுப்படுத்துவது கஷ்டம்தான்!

வீக்கத்தைத் தணிக்கும்
மருந்து இங்கேயே இருக்கிறது.
மருந்தைத்தேடாமல்,
விரலுக்கு சுற்றிக் கொள்ள
வெளிநாடுகளில் போய்
துணிவாங்கிக் கொண்டிருக்கிறோம்.
வீக்கம் அப்படியேதான் இருக்கிறது.

அரசியல் தீர்வுதான்
அருமருந்து!
இங்குள்ள மருத்துவர்களுக்கு
மருந்து கொடுக்கும் மார்க்கம்
தெரியாமல் போனால்
வெளிநாட்டு மருத்துவர்களை
விரும்பி அழைக்கலாம்!

கடன் வாங்குவது மட்டும்
கௌரவமாகத் தெரிகிறது.
உடன் நின்று உதவுங்கள்
என்று அழைப்பது மட்டும்
அகௌரவமாக ஏன் தெரியவேண்டும்?

வெளிநாட்டு மத்தியஸ்தம்
வேண்டாம் என்கிறார்
அமைச்சர் கதிர்காமர்.

அவரேதான் கடன் உதவியை
வியந்து பாராட்டியிருக்கிறார்.

மத்தியஸ்தம் என்பதும் உதவிதான்;
கடன் என்பதும் உதவிதான்.
ஒன்றை மறுப்பதும்
மற்றொன்றை ஏற்பதும்
முரண்பாடாகத் தெரிகிறது!

நமது பிரச்சனையை
நமக்குள் தீர்ப்பதுதான்
கௌரவம் என்று நினைத்தால்
வறுமையும், பற்றாக்குறைகளும்
நமது நாட்டுப் பிரச்சனைகள்தானே!

வயிற்றுக்கு உணவு கேட்கலாம்,
வீடு பற்றியெரியும்போது
உதவி கேட்கக்கூடாதா?
முன்னுக்குப் பின் முரணில்லாமல்
சிந்தித்தால் தெளிவு பிறக்கும்.
விரலுக்கு மிஞ்சிய
வீக்கமும் பறக்கும்!

❑ ❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## துயரப்படுகிறவர்கள்

மத் 5:4:- துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.

மத் 5:10:- நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

மத் 5:11:- என்னிமித்தம் உங்களை துன்பப்படுத்தி பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்!

எனவே எமக்கு ஏற்படும் துயரங்கள், துன்பங்களை சகித்துக் கொள்வோம். இறைவன் நிமித்தம் குற்றவாளிகளாக தீர்க்கப்படும் போது நாம் தான் பாக்கியவான்களாயிருப்போம். எனவே சந்தோஷப்பட்டு களிகூருவோம்.

ஜே.புளொரன்ஸ், அம்பக்கோட்டை, கெங்கல்ல.



## அறிவூட்டும் உபதேசம்

அரசு துறந்த ஆத்மஞானி இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரழி) அவர்கள் 'ஜபல்லுப்னா' என்ற மலையில் பல இறைநேசர்களைச் சந்தித்தார்கள். அப்போது அந்த மகான்கள் "ஓ! இப்ராஹீமே! நீர் மக்களுடன் உரையாட நேர்ந்தால் பின்வரும் நான்கு அறிவுரைகளையும் அவர்களுக்குக் கூறுவீராக," என்று இயம்பினார்கள்.

* அதிகமாக உணவு உண்பதில் இன்பம் காண்பவன் இறை வணக்கத்தில் இன்பம் காணமாட்டான்.
* அதிகமாகத் தூங்குபவன் வாழ்க்கையில் வளம் பெற மாட்டான்.
* மனிதர்களின் பொருத்தத்தை நாடுபவன் இறைவனின் பொருத்தத்தைப் பெற்றுக் கொள்ளமாட்டான்.
* வீணான பேச்சுக்களிலும், புறம் பேசுவதிலும் ஈடுபாடு கொண்டவன் இவ்வுலகை விட்டுப் பிரியும்போது இஸ்லாத்தில் நிலைத்திருக்கமாட்டான்

திஹாரிய-ஹாரித்

## கவிதைப் போட்டி இல.178

### பரிசுக்குரிய கவிதை

### சுதந்திரம்?

**விளையாடப் பந்திருக்கு-ஆனால்**
**வெளியில் செல்லப் பயமிருக்கு!**
**யுத்தம் சூழ்ந்த பூமியிலே-எமக்கு**
**சுதந்திரந்தான் எதுக் கிருக்கு?**

சி.வி. மாணிக்கம்- சாகாமம்,
தம்பிலுவில்.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



### ஏக்கம்

மணல் வீடு கட்டிய
இடமெல்லாம்
புதை மேடுகள்!
வழிதவறிய நிலையில்
இவனின்
வாழ்க்கைப் பந்து!

இ. யோகநாதன்-
சின்னப்புதுக்குளம்,
வவுனியா.

### சொந்தமிலாப் பந்தங்கள்

சொந்தங்கள் சிதறிப்போக சோகங்கள்
சொந்தமாச்சு;
பந்தங்கள் அறுந்து போக பாவங்கள்
பந்தமாச்சு;
பந்தம் பிடித்து வாழ்வோர் பெருகிப் போக
அப்பாவியர் மூச்செல்லாம் நின்று போச்சு;
பந்தடித்தல் விளையாட்டும் வியாபாரமாச்சு;
பாலர் எம்மோடு பந்து விளையாட
தோழர்கள் யாருமில்லை வந்து கூட!

சிவ. ஹரேந்திரன்- மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல-181



### 'நிசப்தம்'

பந்துக்குள் டிக்...டிக்...சத்தம்;
இதயத்தில் லப்...டப்...சத்தம்;
உலகெங்கும் டும்...டும்.....சத்தம்;
உதித்திடுமா? உலகில் நிசப்தம்!

ஏ.எல். லோறன்ஸ்- பூந்தோட்டம், வவுனியா.

கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 07.12.1996

முகவரி: கவிதைப் போட்டி இல.181
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

### வீசியெறி வெகுதூரம்

பந்து, பொம்மை யெல்லாம்
உயிர் பறிக்கும் பொறி வெடியாம்;
வீண் வம்பு விலைக் கெதற்கு?
வேண்டாம் விபரீதம்
வீசி யெறி வெகுதூரம்...!

நிஜந்திக்கா கனகசிங்கம்- கல்லடி,
மட்டக்களப்பு.

### ஏக்கப்பார்வை

வண்ணமான பந்தொன்றை
வடிவாய் கையில் ஏந்திநிற்கும்
வன்னி நோக்கி இடம்பெயர்ந்த
வடிவேற்கரசன் இவன்தானோ?
வளர்த்த தாயை இழந்ததினால்
வாட்டம் முகத்தில் தெரிகின்றதோ?

வே. மோகன்-ஆரியபுர, பொகவந்தலாவ.

### எங்கே?

அன்புத் தங்காய் பந்தோடு
யாரைப் பார்த்து நிற்கின்றாய்?
உன்னைக் கவர்ந்த தோழி எங்கே?
ஒளிந்து கோபம் மூட்டினாளோ?

பசறையூர்-மல்லிகா பத்மநாதன்.

### ஏக்கத்தின் விழிகள்

சொந்த உறவுகள் மண்ணில் மடிந்திட
சோக விழிகளில் ஏக்கம் நிறைந்திட
அள்ளி அணைத்த அன்னை தொலைந்திட
ஆகாரமில்லாது அழிவுகள் வந்திட
பந்தை அணைத்திட தீர்ந்திடுமோ....
பாச உறவுகள் மீண்டும் வந்திடுமோ...
போர்த்தேசம் அதை கொடுத்திடுமோ?

தெ. லோஜனா-கொழும்பு-15.





### நாம் யார்?

உன் கைகளிலே
கனமிருக்கு
உன் கண்ணழகில்
என்
மனமிருக்கு
எமக்கென்று
என்ன இருக்கு?

சுபா வரன்- கண்டி.

### யாருளரோ?

சாவின் கர்ப்பத்திலே
சங்கமித்துப் போன
சமாதானப் பந்துபோல,
விரைந்தெடுத்த உன் பந்தும்
விளையாட யாருமின்றி...
விரல்களிற்குள் அடைக்கலமோ?

தெ. றஞ்ஜனா, சின்னபுதுக்குளம்-
வவுனியா.

கடல் கொந்தளிப்பும், வன்னி நெருக்கடியும் முரசின் கணிப்புக்களை உறுதி செய்துவிட்டனவே. நிற்க: மலையகத்திலும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள்மீது சந்தேகப் பார்வைகள் திரும்பியுள்ளன. தமிழ் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் கெடுபிடி தான் அவர்களைத் துரத்துகிறது. அரசியல்வாதிகளிடம் கேட்டால், "பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறோம்" என்று சொல்கிறார்கள். பேசுவதால் புண்ணியம் என்ன? கெடுபிடிகளை தீரச் செய்ய எடுக்கப்படும் நடவடிக்கைதான் முக்கியமானது. முரசு இதனை சுட்டிக்காட்ட வேண்டும்.

எம். மயில்சாமி, நுவரெலியா.

அன்பின் முரசே! கிட்டுவின் துணைவியார் நேர்சாக பணியாற்றுவதாக குறிப்பிட்டிருந்தாய். அவர் வைத்தியராகத்தான் கடமையாற்றிவருகிறார். இது ஒரு சிறிய தவறாக இருக்கலாம். நமது முரசில் தவறு இடம்பெறுவதை என் மனம் ஏற்க மறுக்கின்றது. இதனைத் திருத்துவீர்களா?

எஸ். மோகன், யாழ்ப்பாணம்.

உங்கள் தகவல் மிகச் சரியானதே. கிட்டுவின் துணைவியார் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் பயின்றவர். இப்போது வைத்தியராகத்தான் பணிபுரிகிறார். தவறுக்கு வருந்துகிறோம். -ஆ.ர்.

'தூக்கு மேடைக் குறிப்பு' ஒரு போராளியின் வாக்குமூலமாக அமைகிறது. 'பூலான்' தொடர் ஒரு புயலாகிய பரிணாமத்தைக் காட்டுகிறது. இரண்டு தொடர்களுமே காலத்தை ஒட்டி முரசு தரும் முத்துக்கள் என்றால் மிகையல்ல.

வி. பேரின்பராஜ், திருகோணமலை.

கணவனைக் கண்டுபிடிக்க மனைவியை கைது செய்வது அங்கேயுமா? தூக்குமேடைக் குறிப்பைத்தான் சொல்கிறேன். காலங்கள் மாறினாலும் சில கோலங்கள் மாறாதோ?

சி. முகுந்தன், பசறை.

'அனிதா இளம் மனைவி' விறுவிறுப்பாகச் செல்கிறது. பட்டுச்சேலைப் பரிசுத் திட்டத்தில் 'கமல் மாமியின்' படம் சிரிப்பூட்டுகிறது.

எஸ். அபிராமி, வாழைச்சேனை.

'அம்மையார்-பிரபா திடீர் பேச்சுவார்த்தை' மூலம் காதில பூ கந்தசாமியார் தந்தது கற்பனை மட்டுமல்ல. "உங்களுக்குத் தேவை தேர்தலில் வெற்றி, எங்களுக்கு அது தேவையே இல்லை. பேச்சு நடந்தால் நீங்கள் தருவதற்கும் எதுவுமில்லை. நாங்கள் பெறுவதற்கும் எதுவுமில்லை. தமிழீழமே எங்கள் கொள்கை. அதைத் தரமறுப்பதே உங்கள் கொள்கை. இதில் மத்தியஸ்தம் எதற்கு, மறுதரப்பு எதற்கு?" என பிரபா சொல்வது போல அமைந்த பகுதி கற்பனைதானா? அதுதானே நிஜம். கந்தசாமியாருக்கு பாராட்டுக்கள்.

ஆ. நித்தியானந்தன், மட்டக்களப்பு.

ஒருவர் மறைந்துவிட்டார் என்பதற்காக வரலாற்றை மறக்காமல், போற்றுவதையும், புகழாரம் சூட்டுவதையும் தவிர்த்த முரசின் செயல் நியாயமானதே.

எம். நிசாம், புத்தளம்.

## வாசக(ர்) சாலை

அரசியல் தொடர் மூலம் நாம் கடந்துவந்த காலங்களில் அறியத் தவறிய தகவல்கள் வியப்பூட்டுகின்றன. வேதனையும் தருகின்றன. உரிய தருணத்தில் இந்தியா உதவிக்கு வந்ததை நன்றியுடன் நினைவு கூரவேண்டும். அதே இந்தியா போராளிகளின் கருத்துக்களை அவசர கோலத்தில் அலட்சியம் செய்ததுதான் ஏற்கமுடியாதது.

கே. விஜயகுமார், கொழும்பு-12.

இலக்கிய நயத்தில் ' விடிந்தால்தான் தீபாவளி' வித்தியாச கோணம். எப்போது விடியப் போகிறது என்பதுதானே எல்லோர் இதயங்களிலும் எதிரொலிக்கும் கேள்விக்குறி. நரகாசுரன் ஒழிந்தான் என்றால் நம்பவா முடிகிறது? போர் அரசன் ஆட்சியில் நாடெங்கும் சூழ்ந்த இருள் விலகுமா?

செல்வி ஜி. கௌரி, கண்டி.

'இனவாத மனிதாபிமானத்தை' சாடிய முரசுக்கு பாராட்டு. மன்னம்பேரிக்கு கதிர்காமத்தில் சிலைவைக்குமளவுக்கு அனுதாபம் திரண்டது. கிருஷாந்தி ராஜினி....என்று தொடரும் துயரங்களை பெரும்பான்மை இனமக்களிடம் கொண்டு செல்வதற்கும், அவர்கள் குரலும் கண்டனமாய் எழுவதற்கும் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் கவனம் செலுத்தலாமே! அதுதான் பத்திரிகைத் தர்மம்.

தா. குணசீலன், கொழும்பு-06.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:

* து.விஜயசீலன், திகன-கண்டி.
* எம்.ஐ.நியாஸ், ஓட்டமாவடி.
* க.பிறேமலதன், அக்கரைப்பற்று.
* சுபாஷினி கமலப்பா, மட்டக்களப்பு.
* எம்.ஏ.எம்.கைதர், மருதமுனை.
* திருமதி எஸ்.பவானி, வத்தளை.
* எம்.முத்து, கொழும்பு-04.
* செல்வி.ப்ரியநேசி, களுத்துறை (தெற்கு)
* ஏ.ஜே.எம்.ஜஃபர், கொழும்பு-15.
* பே.கிறிஸ்ரி அன்ரனி, கொழும்பு-06
* என்.ர்.அம்னுதீன், அக்கரைப்பற்று-06.
* செல்வி றானியா ஜெலீல், காலி.
* சித்திரவேல் சிவகுமார், தேத்தாத்தீவு-01
* எஸ்.சுபாஷன், கல்முனை.
* செல்வி.ஒஸ்லி க்யூர், அநுராதபுரம்.

நான் முரசின் தீவிர வாசகன். சினிவிசிட் பகுதியில் தயவு செய்து ஹொலிவூட் சம்பந்தமான தகவல்களை தரவும். என்னைப் போன்ற வாசகர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறோம்.

என். பிரபா, கொழும்பு-12.

வெண்கலக் கடையில் யானை புகுந்தாற்போன்ற கலகலப்பான விஷயங்கள் தரும் "காதில பூ கந்தசாமி"யாருக்கு நன்றிங்க! கவனம் மாட்டிக்கொள்ளாதீங்க!

எஸ்.பத்மா, உமாஜினி, நவ்சாத்,
கொழும்பு-10.

www.padippakam.com

# கிழக்கில் விரியும் அரசியல் – இராணுவ வலை!

# போர்க்கோலம் பூண்டுள்ள புலிகளின் படையணிகள்

## நெருக்கடியை எதிர்நோக்கும் திருமலை நிலவரம்!

❑ கிழக்கு மாகாண நிலவரங்கள் மேலும் சிக்கலாகும் அறிகுறிகள் தோன்றியுள்ளன.
❑ 'மூன்றாம் கட்ட ஈழப்போர்' என்று புலிகள் இயக்கத்தினரால் அழைக்கப்படும் இக் காலகட்டத்தில் கடற்தாக்குதல்கள், தற்கொலைத் தாக்குதல்கள் என்பவை கிழக்கிலும் மேற்கொள்ளப்படத் தொடங்கியுள்ளன.
❑ அரசியற் துறை, இராணுவத்துறை என்னும் இரு வழிகளிலும் கிழக்கில் புலிகள் இயக்க நடவடிக்கைகள் முன்னைய காலங்களைவிட தற்போது துரிதமடைந்துள்ளன.

தமது அரசியல் ரீதியான அணுகுமுறைகளையும் கிழக்கில் புலிகள் மாற்றிக் கொண்டுள்ளனர். முஸ்லிம் மக்களை பகைத்துக் கொள்ளாமல் செயற்படும் அணுகுமுறைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை தனிமைப்படுத்தும் விதமாக அப்பகுதிகளுக்கு பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. மின்சாரம், தொலைபேசி வசதிகள் போன்றவையும் இல்லாமல் வைக்கப்பட்டன.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைவிட அடிப்படை வசதிகளில் உயர்வாக இருப்பதாகக் காட்டுவதே அரசாங்கத்தின் நோக்கம்.

அதன்மூலம் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள மக்கள் புலிகளின்மீது வெறுப்புக் கொள்வார்கள்; தமது பகுதிகளும் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தால் வசதிகள் கிடைக்கும் என்று நினைப்பார்கள் என படைத்தரப்பினர் நினைத்தனர்.

ஆனால் புலிகள் பதிலடித் தந்திரமாக படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் மின்சாரம், தொலைபேசி வசதிகள் இல்லாமல் செய்ய ஆரம்பித்தனர்.

சமீபத்தில் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் இருளில் மூழ்கியது. இறுதியாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் சிலவற்றுக்கும் மின்சாரம் வழங்கப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்டதை அடுத்தே மீண்டும் மின்சாரம் கொண்டுவர முடிந்தது.

வாக்குறுதி மீறப்பட்டால் புலிகள் மீண்டும் மின்மாற்றிகளை தகர்த்துவிடுவர்.

"மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கு நாம் தடையாக இருக்க மாட்டோம். ஆனால் அபிவிருத்திப் பணிகள் நமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் நடைபெற வேண்டும்," என்பதே புலிகளின் நிலைப்பாடாக இருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் புலிகள் ஓர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அபிவிருத்தி மற்றும் வேலை வாய்ப்புக்களில் இடமளிக்க வேண்டும், என்பதுதான் அந்த உத்தரவு.

### சிபாரிசுப்பட்டியல்

சமீபத்தில் சமுர்த்தி வேலை வாய்ப்புக்கு தமிழ் கட்சியொன்றால் சிபாரிசு செய்யப்பட்டவர்களின் பட்டியலில் புலிகள் இயக்கத்தால் சிபாரிசு செய்யப்பட்டவர்களது பெயர்களும் இருந்தன.

வேலை வாய்ப்பு வழங்கப்பட்ட பட்டியலில் புலிகளால் சிபாரிசு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் பல விடுபட்டிருந்தனவாம். அதனால் அச்சமடைந்த குறிப்பிட்ட தமிழ் கட்சியினர் சமுர்த்தி வேலைவாய்ப்பில் தமக்கு தரப்பட்ட கோட்டா போதாது என்று சமுர்த்தி அமைச்சிடம் புகார் செய்துள்ளனர்.

கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளிலும் புலிகள் இயக்கத்தினரின் உத்தரவுகள் செல்லுபடியாகின்றன.

மட்டக்களப்பு நகரிலும், திருமலை நகரிலும் புலிகள் இயக்கத்தினர் நடமாடுகின்றனர். படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்களை தமது பகுதிக்கு வருமாறு அழைத்து நிதிதிரட்டலிலும் புலிகள் இயக்கத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசியல் நடவடிக்கைகள் ஒருபுறமிருக்க படையினருக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளும் தீவிரமாகவருகின்றன. கிழக்கில் தமது பலம் மேலோங்கி இருக்கிறது என்பதைக் காட்ட படையினரும் விமானக் குண்டுவீச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

### புதிய உறுப்பினர்கள்

ஆனால் புலிகளோ படையினரின் நடவடிக்கைகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். படையினரின் தேடுதல் நடவடிக்கைகள் அடிக்கடி நடைபெறும் பகுதிகளில் இருந்து இளைஞர்களும், யுவதிகளும் புலிகள் இயக்கத்தில் புதிதாகச் சேர்ந்துள்ளனர். புதிய உறுப்பினர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு போர்க்கோலம் பூண்டு நிற்கின்றனர்.

கிழக்கில் புலிகளுக்கு எதிரான அரசாங்கத்தின் அரசியல், இராணுவத் தந்திரம் அரசாங்கத்திற்கு பாதகமாகவே செல்லத்தக்க நிலைதான் ஏற்பட்டுவருகிறது.

வடக்கில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவங்களை கண்டித்து மட்டக்களப்பு–அம்பாறை மாவட்டங்களில் மாணவர்களால் போராட்டங்கள் நடத்தப்பட்டன. மாணவர் ஒன்றியம் என்னும் பெயரில் நடைபெற்ற போராட்டத்தின் பின்னணியில் புலிகள் இயக்கத்தினரே இருந்தனர்.

பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் வடக்கு-கிழக்கு ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதன் நோக்கமும், மாணவர்களிடம் எழுச்சியை ஏற்படுத்தி உள்வாங்கிக் கொண்டு இயக்க அணிகளை பலப்படுத்துவதும் கிழக்கில் புலிகள் இயக்கத்தின் அரசியல் துறையின் நோக்கமாக இருக்கிறது.

### போட்டி

இதேவேளை கிழக்கில் வெற்றிகரமான தாக்குதல்களை அதிகளவில் நடத்துவது யார் என்ற போட்டி புலிகளின் அணிகளுக்குள் ஏற்பட்டுள்ளது. திருமலை பிராந்திய அணியும், மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட அணியும் போட்டி போடுகின்றன.

மட்டக்களப்பு நகரைவிட திருமலை நகருக்குள் படையினரின் கட்டுப்பாட்டுக்கு சவால்விடுவதில் கூடிய கவனம் செலுத்தப்படுகிறது.

திருமலை நகருக்குள் ஒரு தற்கொலைத் தாக்குதல் தோல்வியில் முடிந்துள்ளது. அதனால் மறுதாக்குதல் ஒன்றுக்கு புலிகள் திட்டமிடலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

வடக்கில் வவுனியாவிலும், கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள நகர்களில் திருமலையிலும்தான் புலிகளின் சிவில் நிர்வாக சீர்குலைப்பு நடவடிக்கைகள் அதிகமாக இருக்கும் என்று தெரியவருகிறது.

## "புலிகள் மீது அனுதாபம் போய்விட்டது" ஜெயின் கமிஷன் முன் கருணாநிதி

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் ஜெயின் கமிஷன் முன்பாக ஆஜராகி தமிழக முதல்வர் கருணாநிதி சாட்சியம் அளித்துள்ளார். வை.கோபாலசாமியின் சட்டத்தரணி முதல்வர் கருணாநிதியை குறுக்கு விசாரணை செய்தார். அப்போது தமிழக முதல்வர் பின்வருமாறு கூறினார்:

"ஈழத் தமிழர்களின் தந்தை, ஈழத்துக் காந்தி என்று அழைக்கப்பட்ட செல்வநாயகம் தமிழகத்திற்கு வந்து என்னைச் சந்தித்தார். உடல்நிலை காரணமாக அவர் மெதுவாகப் பேசுவார். அதனை ஒலிபெருக்கிபோல அவர் பக்கத்தில் அமர்ந்துகொண்டு அமிர்தலிங்கம் பேசுவார். அமைதியான முறையில் ஈழம் பெறவேண்டும் என்பதே அவரது கொள்கை.

விடுதலைப் புலிகள் உட்பட ஈழப் போராளிகள் அனைவரிடமும் எனக்கு அனுதாபம் இருந்தது. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை சகோதர யுத்தம் வேண்டாம் என நான் சொல்லிக்கொண்டிருந்தபோதும் ரெலோ தலைவர் சிறீசபாரத்தினத்தை கொன்றார்கள். அமிர்தலிங்கம் போன்ற அமைதியான தலைவர்களைக் கொன்றார்கள்.

அதனால் கொஞ்சம், கொஞ்சமாக அவர்கள்மீதுள்ள எனது அனுதாபம் குறைய ஆரம்பித்தது. பத்மநாபாவை கொலை செய்த பிறகு அனுதாபம் முழுவதும் என்னை விட்டுப் போய்விட்டது.

இந்திய அமைதிப்படை எந்த அமைதியைக் காக்கச் சென்றதோ அந்த அமைதி காக்கப்படாமல் அங்கே களத்தில் இறங்கி போரிட்டபோது நான் அதனை எதிர்த்திருக்கிறேன். அமைதிப்படை அமைதியைக் காக்க வேண்டுமே தவிர, அமைதியைக் கொல்லும் படையாக இருக்கக்கூடாது. அந்த காரணத்தால்தான் எதிர்த்தேன்!" என்று கருணாநிதி தெரிவித்துள்ளார்.

## சீவப்பட்ட தலை

கிளிநொச்சிப் பகுதியில் விமானப்படை விமானங்கள் அடிக்கடி குண்டுவீச்சு நடத்தி வருகின்றன.

புதுக்குடியிருப்புப் பகுதியில் 'கிபீர்' விமானங்கள் நடத்திய குண்டுவீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள் படுகாயமடைந்தனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவர் பலியானார். சிவபாதலிங்கம் பங்கையச்செல்வன் என்னும் 16 வயது இளைஞரே பலியானவராவார்.

முல்லைத்தீவு தண்ணீருற்றுப் பகுதியில் காட்டுக்குள் விறகுவெட்டச் சென்ற பொதுமகன் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் பலியானார். அவரது தலையும் வெட்டி வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வெளிநாடுகளில் மாவீரர் தினம்

புலிகள் இயக்கத்தினரின் மாவீரர்தின நிகழ்ச்சிகள் வெளிநாடுகளிலும் அனுஷ்டிக்கப்பட்டன.

ஜெர்மனியில் நடைபெற்ற மாவீரர் தினக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்துசென்ற தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

சுவிஸில் நடைபெற்ற மாவீரர்தின நிகழ்ச்சியில் தமிழ்நாட்டில் இருந்து சென்ற பாட்டாளி மக்கள்கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் கலந்துகொண்டார். இந்நிகழ்ச்சியில் ஒரு இலட்சம் சுவிஸ் ஃபிராங்குகள் புலிகள் இயக்கத்தினரால் திரட்டப்பட்டன.

பிரிட்டன், கனடா, ஃபிரான்ஸ், டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளிலும் மாவீரர்தின நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## "அப்படியா சொன்னார் பீரிஸ்?" எதிர்க்கட்சித் தலைவர் ரணில் வியப்பு

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக பொதுஜன முன்னணி முன்வைத்துள்ள ஆலோசனைகளைப் . பொறுத்தமட்டில் அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சிக்குமிடையில் ஒரு நெருக்கம் ஏற்பட்டிருப்பதாக நீதி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இக்கருத்தினை அமைச்சர் பீரிஸ் வெளியிட்டார்.

இது தொடர்பாக ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிடம் ஆங்கில வார ஏடு ஒன்று வினவியபோது, அவர் தனக்கு இச்செய்தி வியப்பூட்டுவதாக இருக்கிறது என்றார்.

தீர்வுத்திட்டம் தொடர்பாக ஆளும் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறதா? என்று நிருபர் கேட்டபோது, ரணில் விக்கிரமசிங்கா, "நான் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருக்கிறேன். என்னைப் பொறுத்தமட்டில் அத்தகைய சம்பவம் எதுவும் இடம் பெறவில்லை. இது எனக்கு வியப்பூட்டும் செய்தியாக இருக்கிறது." என்று கூறியுள்ளார்.

## வன்னியில் குண்டுவெடிப்பு!

மாவீரர் தினத்தை முன்னிட்டு தாக்குதல் திட்டம் ஒன்றுக்காக குண்டு தயாரிப்பதில் ஈடுபட்ட புலிகள் இயக்க உறுப்பினர்கள் நால்வர் பலியாகியுள்ளனர்.

வன்னியில் குண்டு தயாரித்துக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறால் குண்டு வெடித்துவிட்டது.

அக் குண்டுவெடிப்பில் புலிகள் இயக்க உறுப்பினர்களான, கலை (கே.யோகராணி, மன்னார்), கதிரவன் (ந.பாலகுமார், யாழ்ப்பாணம்), தும்பன் (ஜெகசோதி பார்த்திபன், வட்டக்கச்சி), பாலன் (ஜெயசுதன் ரமேஷ், யாழ்ப்பாணம்) ஆகியோரே பலியானவர்கள் ஆவர்.

கடற்தாக்குதல் ஒன்றுக்காகவே இவர்கள் குண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டனர் என்று தெரியவருகிறது.

## கனடாவில் சூடு-கத்திக்குத்து! தமிழ் வர்த்தகர்களிடம் கொள்ளை!

யாழ்ப்பாணம் இடைக்காட்டை சேர்ந்தவரும் கனடா ஸ்காபுறோவில் ஜவுளிக்கடை, நகைக்கடை வைத்திருப்பவருமான பேரின்பநாயகம் நடராஜா (வயது 39) துப்பாக்கியால் சுடப்பட்டும் கத்தியால் குத்தப்பட்டும் உள்ளார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது: இரண்டு பிள்ளைகளின் தந்தையான நடராஜா, ஸ்காபுறோ நகரில் 'நடாஸ் ரெக்ஸ்ரைல், ஜூவலறி' என்ற வர்த்தக ஸ்தாபனத்தை நடாத்தி வந்தார். சம்பவம் நடைபெற்ற இரண்டு மாதங்களுக்குமுன் சில தமிழ் இளைஞர்களினால் இவரது கடையின் முன் கண்ணாடிகள் சேதமாக்கப்பட்டுள்ளன. அந்தச் சம்பவத்தை பற்றி பொலிஸாருக்கு முறையிட்டால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதால்தான் பொலிஸாருக்கு அது பற்றி முறையிடவில்லை, என பொலிஸாருக்கு வாக்குமூலம் கொடுத்த பெண்மணி ஒருவர் கூறினார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: இரவு 11 மணியளவில் கடையை பூட்டும் நேரம் கடைக்குள் துப்பாக்கியுடன் புகுந்த இளைஞர்கள் நடராஜாவை ஐந்து தடவைகள் சுட்டும் கத்தியால் குத்தியும் நகைகளை கொள்ளையடித்தும் சென்றுள்ளனர். குற்றுயிரான நிலையில் இரத்தம் சொட்டச் சொட்ட தவழ்ந்து சென்று அருகில் உள்ள உணவு விடுதியில் இருந்த தமிழ் நண்பர் மூலம் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டு, வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

"இலங்கையில் தமிழரின் சுதந்திரத்துக்காகப் போராடும் ஒரு குழுவினரே இந்தச் செயலை செய்திருக்கிறார்கள்" என மற்றொருவர் பொலிஸாருக்கு வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார்.

ஏற்கனவே மூன்று இலங்கைத்தமிழ் வர்த்தகர்களிடம் பெருந்தொகைப் பணமும் நகையும் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. இது நாலாவது சம்பவமாகும். யார் இவர்கள்? எதற்காக கொள்ளைகளைப் புரிகிறார்கள்? அதுவும் மிகவும் திட்டமிட்டு– இவ்வளவு பாதுகாப்பு வசதிகள் உள்ள இடங்களில் கொள்ளையடித்துவிட்டு இன்று வரை கைதாகாமல் இருக்கிறார்கள் என்பது ஒரு ஆச்சரியமான விடயமாகும். இக் கொள்ளை, துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக ரொரன்ரோ பொலிஸார் ரொரன்ரோ வாழ் தமிழ் சமூகத்தின் உதவியையும் ஒத்துழைப்பையும் கோரி இருக்கிறார்கள்.

## தாயும், மகனும் கைது

யாழ்ப்பாணத்தில் எழுதுமட்டுவாளில் உள்ள இடுகாட்டில் புதைகுழிகளில் இருந்து ஆறு உடல்கள் 17.11.96 அன்று மீட்கப்பட்டன. படையினரால் கைதுசெய்யப்பட்டவர்களே அவ்வாறு கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மூன்று பிள்ளைகளின் தந்தையான கந்தையா அழகரத்தினம் (வயது 38), 4 பிள்ளைகளின் தந்தையான கந்தையா தியாகராஜா (வயது 45), ஸ்ரீகணேசா மகா வித்தியாலய மாணவன் கந்தையா குலேந்திரராஜா (வயது 16), 5 பிள்ளைகளின் தந்தையான தம்பு மாணிக்கம் (வயது 43) ஆகியோரது சடலங்களே அடையாளம் காணப்பட்டன.

இவர்கள் நால்வரும் எழுதுமட்டுவாளைச் சேர்ந்தவர்கள். மிருசுவிலைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பெரியதம்பி தேவராசா (வயது 32), கம்பர்மலையைச் சேர்ந்த வியாபாரியான பசுபதி தியாகராஜா (வயது 38) ஆகியோரே மற்றைய இருவருமாவர்.

இதேவேளையில் சடலங்கள் மீட்கப்பட்ட இடுகாட்டில் இருந்து ஒருமைல் தூரத்தில் உள்ள வீடொன்றில் இருந்த தாயும், மகனும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சுந்தரி சேதுப்பிள்ளை (வயது 47), சுந்தர் ஜெயரஞ்சன் (வயது 25) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். 19.11.96 அன்று அவர்கள் இருவரும் கைதாகியுள்ளனர்.

## விடுதலை செய்ய சிறை அதிகாரிகள் மறுப்பு! மட்டக்களப்பு சிறைக் கைதிகள் புகார்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் தடுப்புக் காவலிலுள்ள 2 பெண்கள் உட்பட தமிழ், முஸ்லிம் கைதிகளான 52 பேரும் கையெழுத்திட்டு, தம்மை நேரில் வந்து சந்தித்து உதவுமாறு வேண்டுகோள் விடுத்ததையடுத்து கடந்த 24.11.96 அன்று மட்டக்களப்பு ஆயர் பிதா கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, 'எகெட்' நிறுவன இயக்குநர் பிதா சி.வி. அன்னதாஸ் மற்றும் திட்ட அதிகாரி என்.பரமானந்தம் ஆகியோர் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடி குறைகளைக் கேட்டறிந்தனர்.

இச்சந்திப்பின்போது சிறைச்சாலை உயரதிகாரி ஏ.கந்தராஜ், பிரதம தடுப்புக் காவலர் ஆர்.ஸ்ரீனிவாசன் ஆகியோரும் உடனிருந்தனர்.

சிறைக் கைதிகள் 52 பேருக்கும் அவர்களது உடனடித் தேவைகளுக்காக ரூபா 25 ஆயிரம் பெறுமதியான அத்தியாவசியப் பொருட்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. தாம் விடுதலை பெறும் சமயம், சமூக வாழ்வில் இணைந்து கொள்வதற்காக சுய தொழிலுக்கான மூலதன உதவிகளையும், உடல் உளரீதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வைத்திய வசதிகளையும் செய்து தருமாறும் தம்மைச் சந்தித்த பிரதிநிதிகளிடம் சிறைக் கைதிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

இக் கைதிகளில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகி, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, ஒத்திவைப்புச் சிறைத் தண்டனை உத்தரவு வழங்கப்பட்டு விடுவிக்கப்படாதுள்ள சந்தேக நபர்களும் அடங்குவர். இவ்விடயம் குறித்தும் கைதிகள் எடுத்துக் கூறினர்.

சமீபத்தில் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, ஒத்திவைப்புச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டோரை சிறைச்சாலை அதிகாரிகள் விடுதலை செய்ய மறுப்பது குறித்த விடயம் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஜனாப் யூ.எல்.மஜீத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. சட்டத்தரணிகள் பூ.பத்மநாதன், கே.தங்கவடிவேல் ஆகியோர் இது பற்றி எடுத்துக் கூறினர். இந்த விடயத்தைக் கவனத்திலெடுத்து, ஒத்திவைப்புச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

## "கிழக்கு வாழ் மக்கள் எதிர்ப்புக் காட்ட வேண்டும்!" படையினர் மக்களுக்கு வேண்டுகோள்!

"யாழ்ப்பாணத்தில் படையினரின் நடவடிக்கையின் பின்பு எல்.ரி.ரி.ஈ.யின் பிடியில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை நோக்கி மீண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தருவதை நிறுத்த முடியாமல், துணையின்றி மிகவும் தனிமையாகி உள்ள எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினர், தற்போது வடக்கில் உள்ள தமிழ் பொதுமக்கள் தங்களின் எதிரிகள் எனக்கணிப்பிட ஆரம்பித்துள்ளனர் என்பது புலனாகின்றது.

அதேபோன்று வடக்கிலே பத்து வருடங்களுக்கும் மேலாக பொதுமக்கள் அளவற்ற இன்னல் துன்பங்களுக்கு ஆளாகக் காரணமாகவிருந்தது, எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் மனிதாபிமானமற்ற நடைமுறைச் செயலினால் என்பதை வடபகுதி மக்கள் விளங்கிக் கொண்டுள்ளனர்.

வடக்கிலே உள்ள மக்கள் எல்.ரி.ரி.ஈ.இயக்கத்தினரை நிராகரித்துள்ளனர். தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்துள்ள முதலமைச்சர் கருணாநிதியின் அரசு எல்.ரி.ரி.ஈ.இயக்கத்தின் நடவடிக்கைக்காக எந்தவொரு முறையிலும் ஒத்தாசை புரிய மாட்டோம் என உறுதிமொழி அளித்துள்ளது.

சுவிட்ஸர்லாந்தில் எல்.ரி.ரி.ஈ. தலைவர்கள் கைதாகியுள்ளனர். மேற்கத்திய நாடுகள் தங்களின் நாடுகளில் எல்.ரி.ரி.ஈ.இயக்கத்தின் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன.

எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தை எந்தவொரு நல்லொழுக்கமுள்ள சமூகமும் அனுமதிக்காது. கொடூரமான, மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளினால் தினமும் தமிழ் மக்களையும் சர்வதேச சமூகத்தினையும் வசப்படுத்தி வைத்துக்கொள்ள முடியாது.

கிழக்குப் பிரதேச தமிழ் முஸ்லிம் மக்களின் இலகுவான போக்குவரத்து முறையைத் துண்டிக்கும் நோக்குடன் புகையிரதத்தை கண்ணிவெடி வைத்து நாசப்படுத்துகின்றனர்.

நூற்றுக்கணக்கான மின்மாற்றிகளை வெடிக்க வைத்துள்ளனர். அவர்கள் அழிப்பது சகோதர தமிழ்மக்களின் பிரயோசனத்திற்காகவுள்ள மக்களின் சொத்தாகும். அவர்கள் படுகொலைசெய்வது தங்களின் சகோதர தமிழ் மக்களையேயாகும்.

அவர்களின் துப்பாக்கிகளுக்கும், எச்சரிக்கைகளுக்கும் நீங்கள் அடிபணியாமல் எதிர்ப்பைத் தெரிவிக்க சிரேஷ்ட, புராதன வரலாறொன்று உள்ள கிழக்கு வாழ் மக்களாகிய உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. வெளிப்படையாகவே அவர்களுக்கு எதிர்ப்பைத் தெரிவியுங்கள். அது எமது நிரந்தர வெற்றியை உறுதிப்படுத்துவதாகும்."

இவ்வாறு பாதுகாப்புப் படையினர் கிழக்குப் பகுதியெங்கும் விநியோகித்துள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# தேச வழமையைச் சட்டபூர்வமாக்க 'சூரியா' நடவடிக்கை

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பில் பணியாற்றிவரும் 'சூரியா' பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் பெண்களது விழிப்புணர்விலும் பொருளாதார மேம்பாட்டிலும் கவனஞ்செலுத்தி வருகிறது.

தேச வழமையாகக் கூறப்படும் பதிவு செய்யப்படாத பாரம்பரியத் திருமணங்களைப் பதிவு செய்து சட்ட பூர்வமாக்குவதும் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ள பணிகளில் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகப் பின்தங்கிய பகுதிகளிலிருந்து 180 க்கும் மேற்பட்ட இளம் மற்றும் 50 வயதைத் தாண்டிய, தேச வழமைப்படி திருமணம் செய்த தம்பதிகள் பதிவுத் திருமணம் செய்து சட்ட பூர்வ திருமணச் சான்றிதழைப் பெற்றுள்ளார்கள்.

இந்நிறுவனத்தின் மேற்படி திட்டத்தினை ஏற்று மாவட்ட அரசாங்க அதிபர், மற்றும் மாவட்டப் பதிவாளர் ஆகியோர் சிலமாதங்களுக்கு முன்னர் இத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தனர். 203 குடும்பங்களுக்குப் பதிவுத் திருமணம் செய்து வைக்கும் 'சூரியா' நிறுவனத்தின் முதல் இலக்கில் கடைசியாக கடந்த வாரம் சத்துருக்கொண்டானைச் சேர்ந்த 70 தம்பதிகளுக்கு மாவட்டப்பதிவாளரால் பதிவுத் திருமணம் செய்து வைக்கப் பட்டது.

மிகப் பின்தங்கிய பகுதிகளில் நடைபெறும் திருமணங்கள் தேச வழமைப்படியே நடத்தி வைக்கப்படுகின்றன, சட்டபூர்வமில்லாத இத்திருமண நடவடிக்கைகளால் பலகுடும்பங்களில் பெண்களின் வாழ்வு சீரழிந்துள்ளதாக 'சூரியா' நிறுவனம் தெரிவிக்கிறது. கணவன் மனைவிக்கிடையில் பிணக்குகள் தோன்றி, குடும்பங்கள் பிரியும் போது பல பெண்கள் தமது பிள்ளைகளை வளர்ப்பதற்காக கணவனிடமிருந்து பராமரிப்புப் பணம் கூடப் பெறமுடியாமல் தத்தளிக்கிறார்கள்.

பின்தங்கிய கிராமப் புறங்களில் இத்தகைய சட்டபூர்வ நடைமுறைகளின் முக்கியத்துவத்தை உணரவைக்க வேண்டும். பெற்றோர் தம் பிள்ளைகளுக்குப் பிறப்புப் பதிவு வைப்பதில்லை. வாக்காளர் இடாப்பில் பெயர் பதிவதில்லை. அடையாள அட்டை பெறுவதில்லை. இத்தகைய நடைமுறைகளினால் ஒட்டுமொத்தமாகப் பெண்களே பெரும் பாதிப்பிற்குள்ளாகிறார்கள். எனவே இவை பற்றிய அடிப்படை விழிப்புணர்வை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும் என்று மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

# தொலைபேசி தேடி மக்கள் அலைச்சல்!

## இடம்பெயர்ந்த தொலைபேசி திரும்புமா?

அம்பாறை மாவட்டத்தில் மீள் குடியேற்றப்பட்ட மல்வத்தைப்பிரதேச மக்கள் தமது அவசர தேவைகளுக்கெனத் தொலைபேசி அழைப்புக்களைப் பெறுவதற்கு பல மைல்கள் அலைய வேண்டிய அவலம் நீடித்துவருகின்றது.

மல்வத்தை உபதபாலகத்திற்கு ஏற்கனவே அம்பாறை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தினூடாக தொலைபேசி இணைப்பு (063-2248) வழங்கப்பட்டிருந்தும் 1990ம் ஆண்டு இப்பிரதேச மக்கள் அகதிகளாக வெளியேறியதோடு, உபதபாலக தொலைபேசியும் இடம்பெயர்ந்தது!

ஆனால் இப்பிரதேச மக்கள் மீளக் குடியேறி உபதபாலகமும் இயங்கத் தொடங்கி வருடங்கள் கடந்து கொண்டிருப்பினும் மீண்டும் தொலைபேசி இணைப்பு இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் மல்வத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த மல்வத்தை, மஜீத்புரம், கணபதிபுரம், தம்பிநாயகபுரம், வள்ளுவர் நகர், புதுநகரம், வளத்தாப்பிட்டி முதலான கிராம மக்கள் தொலைபேசி அழைப்புக்களைப்பெற பல மைல்கள் தொலைவிலுள்ள அம்பாறை, கல்முனை போன்ற பகுதிகளை நாடவேண்டிய அவலம் நீடித்துவருகின்றது.

எனவே இங்கிருந்த ஒரேயொரு பொதுத் தொலைபேசியான மல்வத்தை உபதபாலக தொலைபேசியை இன்னும் தாமதியாது உடனடியாக வழங்கி இப்பிரதேச மக்களின் பெரும் குறைதீர்க்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டுமெனக் கோரப்படுகின்றது.

அதிகாரிகளின் கவனம் திரும்புமா? மீண்டும் தொலைபேசி இணைப்புக் கிடைக்குமா? கேட்கிறார்கள் மக்கள்!

# வாகரை மக்களின் மேம்பாட்டிற்கு

## வெளிநாட்டு உதவி

மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகப் பின்தங்கிய பகுதிகளில் ஒன்றான வாகரைப் பிரதேச மக்களின் தொழில் மேம்பாட்டிற்காக பெருமளவு உதவிகளை வெளிநாட்டு உதவி நிறுவனமான "ஹெல்-விற்றாஸ்" வழங்கிவருகிறது.

படையினரின் கட்டுப்பாட்டிலில்லாத அப்பகுதியில், வறிய விவசாயிகளையும், ஏழை மீனவர்களையும் இனம் கண்டு இந்நிறுவனம் உதவி வருகிறது.

சமீபத்தில் 319 விவசாயக்குடும்பங்களுக்கு நெற்செய்கைக்கான பொருளுதவிகள் வழங்கப்பட்டன. 319 அந்தர் அமோனியம் கலவைப் பசளை, களைநாசினி, சிபார்சு செய்யப்பட்ட சிறந்தரக விதை நெல் என்பன மட்டக்களப்பிலிருந்து மூன்று லொறிகளில் வாகரைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள வறிய விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

வாகரைப் பகுதி படையினரின் கட்டுப்பாட்டிலில்லாததால் அங்கு பொருட்களை எடுத்துச்செல்ல தடை விதிக்கப்பட்டிருக்கின்றபோதிலும் பல வருடங்களுக்குப் பின்னர் இவ்விதம் பெருந்தொகையாக உரம் கொண்டு செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டிருப்பது இதுவே முதற் தடவையாகும்.

இதுபோலவே குறை போஷாக்குள்ள வாகரைப் பகுதி மக்களின் போஷாக்கு நிலைமையைக் கருத்திற்கு கொண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) மேட்டு நில விவசாய உற்பத்திக்காக பயிர் விதைகளை கொடுத்துதவி வருகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நேரடியாக தொழில் முயற்சிகளுக்கு உதவியிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

# "மலையக மக்களுக்கும் இடமளிக்கப்படும்"

## தொண்டாவின் கோரிக்கைக்கு பௌஸி செவிசாய்ப்பு!

(கண்டி நிருபர்)

இலங்கை வரலாற்றில் முதன் முதலாக ஈராண்டு சமூகக் கல்வி டிப்ளோமா கற்கை நெறியைத் தொடர அகில இலங்கை ரீதியாக 35 தமிழ்பேசும் மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். 1952ஆம் ஆண்டு ஆங்கில மொழியில் ஆரம்பிக்கப்பட்ட இக்கற்கை நெறி 1975 ஆம் ஆண்டில் சிங்கள மொழி மூலமும் இற்றைவரை இடம்பெற்று வருகின்றது. சுகாதார, நெடுஞ்சாலைகள் சமூக சேவைகள் அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.பௌஸியின் அயராத முயற்சியின் விளைவாக முதன் முறையாக தமிழ் மொழியிலும் இக்கற்கை நெறி கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டது. அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌஸி, எஸ்.தொண்டமான் உட்பட பிரதி அமைச்சர்களும் மற்றும் எம்.பீக்களும், கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற தொடக்க விழாவில் கலந்து கொண்டனர். 35 பேர் இக்கற்கை நெறியைத் தொடர போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவாகினர்.

இக்கற்கை நெறிக்கு மலையக இந்திய வம்சாவளி சார்பில் மாணவர்கள் தெரிவு செய்யப்படாததை அமைச்சர் தொண்டமான் அன்றைய வைபவத்தில் பகிரங்கமாக தமது உரையில் சுட்டிக்காட்டியதை அடுத்து இருமாணவர்களை இதன் பொருட்டு சேர்த்துக் கொள்வதாக அமைச்சர் பௌஸி அங்கு தெரிவித்தார். ஜே.ஆர்.ஜயவர்த்தனா கலாசார நிலையத்தைச் சேர்ந்த கட்டிடத்தில் சமூக சேவைகள் பயிற்சிக் கல்லூரி இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்ச்சங்க புதிய நிர்வாகிகள்

கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில், வளாகப் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் 1996-1997ம் ஆண்டுக்கான நடப்பு வருட நிர்வாகக் குழுவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்:பேராசிரியர் எஃப்.எக்ஸ். இராஜேந்திரம் (துணை வேந்தர்)
பெருந்தலைவர்-கலாநிதி சி.மௌனகுரு. பீடாதிபதி கலை-கலாசார பீடம்.
பெரும் பொருளாளர்- கலாநிதி எஸ்.ரவீந்திரநாத். (சிரேஷ்ட விரிவுரையாளர்-விவசாயபீடம்)
பொதுச் செயலாளர்- வி.மைக்கல் கொலின்.
தலைவர்-மா.உதயதாசன்
உபதலைவர்- எஸ்.சிவகுமார்.
உபசெயலாளர்-அ.கிருபானந்தன்.
இளம் பொருளாளர்-வே.ஜெகதீசன்.
பத்திராதிபர்கள்-பா.சுரேஷ், எஸ்.மலர்ச்செல்வன், ச.ராஜீசன்.
நிகழ்ச்சிப் பொறுப்பாளர்:- கே.வானதி. சி.இளங்கோவன்.
நிர்வாகக்குழு உறுப்பினர்கள்: சோ.துளசிநாதன், கு.சுதர்சினி, ஆ.கருணாமூர்த்தி, ஜெயபாலன், செ.செல்வமலர், அ.அ.அனஸ், ப.பிரதீபன்.

# வானொலி நேயர் மன்றம்

இலங்கை வானொலி தமிழ்ச் சேவை அதன் நேயர்களை ஓர் அமைப்பின் கீழ் கொண்டு வரும் முயற்சியில் வானொலி நேயர் மன்றங்களைப் பதிவு செய்யவுள்ளது.

அதன் அடிப்படையில் புத்தளம் மாவட்டத்திலும் இம்மன்றம் இயங்க உள்ளது. கலையில் ஆர்வம் உள்ள புத்தளம் மாவட்ட கலைஞர்கள் தங்களின் பெயரையும், முகவரியையும், ஈடுபாடுள்ள துறையையும் குறிப்பிட்டு, பின்வரும் முகவரிக்கு அறிவிக்கவும்.

எம்.ஏ.ஏ. யுனூத், கொத்தாந்தீவு,புத்தளம்.

# பொன்விழா ஏற்பாடுகள் துரிதம்

(நிந்தவூர் நிருபர்)

நிந்தவூர் அல்-அஷ்றக் தேசியப் பாடசாலையின் ஐம்பதாண்டு நிறைவையொட்டிய பொன்விழா வெகுகோலாகலமாக நடைபெறவிருக்கின்றது.

நிந்தவூரின் கல்வி வளர்ச்சியில் கடந்த 50 ஆண்டுகாலமாக அளப்பரிய சேவையாற்றிவரும் இந்தப்பாடசாலையின் பொன்விழா ஏற்பாடுகள் தற்பொழுது விரிவான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் பொன்விழாவை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுவருவதாக பாடசாலை அதிபர் அல்-ஹாஜ் எம்.எஸ்.ஹமீட் தெரிவித்தார்.

பொன்விழா தொடர்பான சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவிருக்கின்றது.

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு ~ 11.02.1960
மறைவு ~ 05.12.1995

**திருமதி. சுந்தரலிங்கம் ஹரிச்சந்திரா**

அன்னப்பிள்ளை சிவப்பிரகாசம்
அன்புக்கினிய ஆசைமகளே
அன்புக் கணவன் சுந்தரலிங்கம்
வாழ்க்கைத் துணையாய் மகிழ்ந்திருந்தாயே!
ரஜனி,ரஜீவ்,பேமானந்தி
இன்பக் குழந்தைச் செல்வம் மூன்றும்
ஈன்று வளர்த்த இதயக்கனியே
மாண்டோர் ஆண்டு மறைந்ததே அம்மா.
தெய்வ விநாயகத் தேவை வழிபடச்
சென்றாய் மகனுடன்; திரும்பினாய் இல்லை
கோரப் போரில் சிக்கி மாண்டாய்
குமரன் ரஜனிகாந்த் எங்கே அம்மா?
எங்கள் குடும்ப உயர்வினுக்காக
என்றும் ஏணிப்படியாய் உழைத்தாய்
கொண்ட இலட்சியக் கனவை நனவாய்
மாற்றிய சோதரர் மகிழ்ந்திட இன்று நீ இல்லை.
கூற்றுக் கென்ன கேளானோ
கொடுமை செய்தல் தான் தொழிலோ
மாற்றம் இதற்கு இலைத்தானோ
வருந்தி அழுதல் மருந்தாமோ?
வீட்டின்பத்தை உடன் அம்மா
விரும்பித் தழுவி மகிழ்ந்திருக்க
மாய உலகில் நாம் கிடந்து
வருந்தி அழுது என்ன பயன்?


உம்மை இழந்து தவிக்கும் கணவன், பிள்ளைகள், பெற்றோர், சகோதர சகோதரிகள், மைத்துனர்மார், மைத்துனிமார், உற்றார் உறவினர்கள்.

திருமதி. அ. சிவப்பிரகாசம்
கடற்கரை வீதி, காரைதீவு-03.


BRIGHTன் தபால் மூலம் கல்வித் திட்டம்
முன்றே மாதங்களில் ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத்தரப்படும்.
விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க
பெயர்:.......................
விலாசம்:.......................
BRIGHT BOOK CENTRE (PVT)LTD
S-27,FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL:434770

UNION
யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு. கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

SPOKEN ENGLISH
BRIGHT ஆசிரியர்
PON. SAKTHIVEL
DIP. IN. ENG (LOND)
அவர்களின் நேரடி வகுப்புகள் நடைபெறுகின்றன
ACA
55 ST. LUCIA'S ST
KOTAHENA.



மலையாள மாந்திரீகம்
நம்பினார் கெடுவதில்லை என்ற நற்பெயரை 33 வருடமாக தன்னகத்தே கொண்டுள்ள எமது நிறுவனம் என்றென்றும் நற்பெயரை பெற்றுள்ளது. என்னையும் எமது நிறுவனத்தையும் நம்பி பணம் அனுப்பி வைப்போருக்கு அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவே செயல்படுகிறோம். வாடிக்கையாளர்களை கண்ட மாத்திரம், "இதுவே உங்கள் பிரச்சினை" என திட்டவட்டமாக என்னால் கூறமுடியும். இதையொட்டியே மக்கள் கூட்டம் குவிந்த வண்ணம் உள்ளது. வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எந்நேரமானாலும் என்னோடு உரையாட அதிக செலவில் T.O.D. CALL ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதன் மூலம் வெளிநாட்டவர் தங்கு தடையின்றி உரையாடலாம்.
தொடர்புகளுக்கு:-
விசேட வெளிநாட்டு தொலைபேசி :-
TEL 0094 1344831 EXT. FRS
FAX 0094 1342464
மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
பி.கே.சாமி (J.D.G.A.N.)JP.
பி.கே.சாமி அஸோசியட் பிரைவேட் லிமிட்.
இல,162, கொட்டாஞ்சேனை வீதி, மேபீல்ட் றோட், கொழும்பு-13.

விளம்பரப்பகுதி

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

Bright ன் புலமைப்பரிசில் பரீட்சை
மாணவர்கட்கு மலிவு விலையில் புத்தகப் போதி

| | |
|---|---|
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 1-6 | 250.00 |
| வெற்றிக்கனிக் களஞ்சியம் 7-12 | 250.00 |
| புலமைப்பரிசில் மாதிரிவினா விடை | 100.00 |
| பொது விவேகமும் பாடநூல் | 75.00 |
| பொது உளச்சார்பு செயல்நூல் | 60.00 |
| மொத்தம் | 735 |
| Brightன் கழிவு | 235 |
| | 500 |

V.P.P.
உண்டு
தபாற் செலவு இலவசம்
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 First Floor P.O.Box - 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P:434770

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை
1997க்கான 20 முன்னோடிப் பரீட்சைகள்
ஆசிரியர் பி. அம்பிகைபாகனால் தொடர்ச்சியாக தயாரிக்கப்படும் 20 முன்னோடிப் பரீட்சைத் தாள்கள் பெறுவதற்கான விபரங்களுக்கு தொடர்பு கொள்க.
P.AMBIGAIBAGAN
77/20, JAMPETTAH LANE,
COLOMBO-13.
T.P. 345 367

1997ம் ஆண்டுக்கான
பொதுக் கலண்டர்கள்.
அழகுக்கும் பாவனைக்கும் !
அழகிகள், வண்ண மலர்கள், வாகனங்கள், வனஜீவ ராசிகள், மற்றும் இயற்கைக் காட்சிகள் என்பவற்றைப் பிரதிபலிக்கும் கலை நயம் மிகுந்த கண்கவர் கலண்டர்களை நாம் உருவாக்குகிறோம்.
ஆண்டு முழுவதும் கண்ணுக்கு விருந்தளிக்கும் வகையில் அற்புதமான புகைப்படங்களுடன், உயர்ந்த தரத்தில் அச்சிடப்பட்டுள்ளன.
ஆகக் குறைந்தது 500 கலண்டர்களை கொள்வனவு செய்து இலண்டனுக்குச் செல்ல இலவச விமான டிக்கெட்டை பரிசாகப் பெறலாம்.
தேர்ந்தெடுக்கப் பலரகங்கள்.
இலவசக் கையேட்டுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

Fast Print Service (Private) Limited
Dawatagahawatta Road, Off Kandawela Road, Ratmalana.
Telephone: 633131/610906




படிப்பகம்

www.padippakam.com

# உறவும்–உளவும்!

# இந்திய உளவுப் பிரிவின் தந்திரம்!

பின்னணி பற்றிய விபரங்கள் இல்லாமல் சில செய்திகள் வெளியாகி பரபரப்பு ஏற்படுத்துவதுண்டு.

புலிகள் இயக்கத்தினரும், ஈ.என்.டி.எல்.எஃப். என்னும் அமைப்பினரும் இணக்கப்பாடு கண்டுவிட்டதாக சமீபத்தில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

இச் செய்தியின் பின்னணி பற்றி ஆராய்வதற்கிடையில், ஈ.என்.டி.எல்.எஃப் தொடர்பான ஒரு சுருக்கமான விளக்கம் தேவை.

முன்னர் புளொட் இயக்கத்தில் இருந்தவரான பரந்தன் ராஜன் என்பவரது தலைமையில் இயங்கும் ஒரு அமைப்புத்தான் ஈ.என்.டி.எல்.எஃப்.

இந்திய அமைதிப்படை காலத்தில் இந்திய உளவு நிறுவனமான றோவின் உதவியுடன் வடக்கு-கிழக்கில் செயற்பட்டனர்.

கிளிநொச்சியில் தலைமை அலுவலகம் வைத்துக்கொண்டு புலிகளை வேட்டையாடுகிறோம் என்ற போர்வையில் மக்களைச் சக்கையாகப் பிழிந்தனர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையிலும் ஈ.என்.டி.எல்.எஃப்புக்கு ஒரு அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கத்தினரால் கொல்லப்பட்டனர். நிதி திரட்டல் என்றரீதியில் பணவசூலும் நடத்தப்பட்டது.

பின்னர் இந்தியப் படையோடு சேர்ந்து மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு இந்தியாவுக்குச் சென்றுவிட்டனர்.

ஈ.என்.டி.எல்.எஃப். பிரமுகரான சீனிவாசன் என்பவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். வடக்கு-கிழக்கை இரண்டாகப் பிரிக்கக்கூடிய யோசனையை முதன்முதலாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு முன்வைத்த பெருமை அவரையே சாரும்.

சீனிவாசன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, கொழும்பு பம்பலப்பிட்டியில் காசில் வீதியில் ஈ.என்.டி.எல்.எஃப். அலுவலகம் இயங்கியது. அதற்கு பொறுப்பாக இருந்தவர் ராமராஜ். முஸ்தபா என்றும் அவரை அழைப்பார்கள்.

கொழும்பில் 'வெள்ளைவேன் கொள்ளையர்கள்' தமிழர் வீடுகளில் கொள்ளையடித்தனர். 'யார் அந்த வெள்ளைவேன் கொள்ளையர்?' என்பது மர்மமாக இருந்தது.

கொழும்பில் தெகிவளை சோதனை அரணில் ஒரு வெள்ளைவானை பொலிசார் மறித்து சோதனையிட்டனர்.

நகைகளும், பணமும் மாட்டுப்பட்டது. "நகைகளில் ஒரு பகுதியைத் தருகிறோம் எங்களை விட்டுவிடுங்கள்" என்று வேனில் இருந்தவர்கள் பொலிசாருடன் பேரம் பேசினார்கள்.

பொலிசார் மசியவில்லை. வேனில் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டனர். வேனில் இருந்தவர்கள் ஈ.என்.டி.எல்.எஃப். உறுப்பினர்கள். ராமராஜின் உத்தரவுப்படி கொள்ளைகளில் ஈடுபட்ட வெள்ளைவேன் கொள்ளையர்கள் அவர்கள்தான்.

காசில் வீதியில் உள்ள ஈ.என்.டி.எல்.எஃப். அலுவலகத்தைப் பொலிசார் சோதனையிட்டனர். கொள்ளையடித்த நகைகளும், இந்திய விசாக்கள் குத்தப்பட்ட ஏராளமான கடவுச் சீட்டுக்களும் சிக்கின. ராமராஜ் கைது செய்யப்பட்டார்.

இந்தியாவுக்கு சார்பானவர்கள் என்ற ரீதியில் இந்திய தூதரகத்தில் விசா பெற்றுக்கொடுத்து பணம் வாங்கும் வேலையிலும் ராமராஜ் ஈடுபட்டிருந்தார்.

பிரேமதாசாவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது சீனிவாசனின் ஆதரவும் பிரேமதாசாவுக்கு தேவைப்பட்டது.

அதனால் ராமராஜும், ஈ.என்.டி.எல்.எஃப். உறுப்பினர்களும் சிறையில் இருந்து விடுதலையாகினர். சீனிவாசனுக்கும் ஐந்து இலட்சம் ரூபா பிரேமதாசாவினால் வழங்கப்பட்டது.

விடுதலையான ராமராஜ் இந்தியா சென்றார். சீனிவாசனுக்கும் பைத்தியம் பிடித்தது. பாராளுமன்ற உறுப்பினர்களின் தங்குவிடுதியில் தனது அறையின் ஜன்னலை உடைத்துக்கொண்டு கீழே பாய்ந்தார் சீனிவாசன்.

பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களில் ஜன்னலை உடைத்து பாயுமளவுக்கு சித்தப்பிரமை பிடித்த ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் அவர்தான். தற்போது அவர் வெளிநாட்டில் ஓய்வுபெற்றுக் கொண்டிருக்கிறார்.

இந்தியா சென்ற ராமராஜ் இயக்கத்தில் இருந்து வெளியேறினார். போதைக் கடத்தல் வியாபாரம் ஒன்றில் ஏற்பட்ட தகராறுதான் பிரச்சனைக்கு காரணம்.

போதை மருந்து வியாபாரத்தில் வந்த பணத்தை ராமராஜ் அமுக்க நினைக்க, பரந்தன்ராஜன் அவரைக் கொல்லத் திட்டமிட்டார்.

ராமராஜ் இலண்டனில் இருந்து வேறு இயக்கங்களின் துணையை நாடினார். ராமராஜின் குணநலன் தெரிந்த எந்தவொரு இயக்கமும் அவரைச்சேர்த்துக்கொள்ளத் துணியவில்லை.

சிலகாலத்தின் பின்னர் ராஜனும், ராமராஜும் சமாதானமாகிவிட்டனர். தமிழ் நாட்டுக்கு வந்த ராமராஜ் ஒரு குழுவோடு கொழும்பு வந்தார்.

> "புலிகளின் தற்போதைய உள்விபரங்கள், அரசியல்–இராணுவப் பலம்- பலவீனம் புலிகளுக்குள்ள வெளிநாட்டுத் தொடர்புகள் என்பவற்றைக் கண்டறிய இந்திய உளவுப் பிரிவுகள் விரும்புகின்றன."

**நாரதர்**

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**



இனப்பிரச்சனைத் தீர்வுக்கு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக அறிக்கை விடுத்தார்கள். அரசாங்கத்துடன் நட்பை ஏற்படுத்த பலத்த முயற்சியில் ஈடுபட்டும் பலன் பூச்சியம்தான்.

அதனால் மீண்டும் தமிழ்நாட்டுக்கு திரும்பிச் சென்ற ஈ.என்.டி.எல்.எஃப். குழுவினர் இலங்கை அரசாங்கத்தைக் கண்டித்து அறிக்கைவிட ஆரம்பித்தனர். சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்ற கதைதான்.

இந்தியா மீண்டும் இலங்கை விவகாரத்தில் தலையிட்டால், தமக்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கிட்டும் என்ற ஒரே நம்பிக்கையில் உள்ள குழுதான் ஈ.என்.டி.எல்.எஃப்.

அதனால் 'இந்தியா தலையிடவேண்டும்' என்று இடைக்கிடையே சென்னையில் இருந்து அறிக்கை விடுவார்கள்.

ஈ.என்.டி.எல்.எஃப். குழுவினருக்கும் புலிகளுக்கும் இடையே இணக்கப்பாடு ஏற்பட்டதாக செய்தி வந்தது எப்படி?

ராமராஜ் 'தொழில்' விஷயமாக இலண்டனில் தங்கியிருந்தபோது அங்குள்ள புலிகள் இயக்.. பிரமுகர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார்.

தமது தொழிலுக்கு இடையூறு இல்லாமல் இருப்பதற்காக ராமராஜ் செய்த தந்திரம் அது.

ஈ.என்.டி.எல்.எஃப். தமிழ்நாட்டில் றோவின் உதவியோடு தங்கியிருப்பதால், சில காரியங்களுக்கு அதனைப் பயன்படுத்தலாம் என்று புலிகளின் இலண்டன் கிளையினரும் நினைத்திருக்கலாம்.

இலண்டனில் புலிகள் இயக்கப் பிரமுகர்களோடு ஏற்பட்ட தொடர்பை வைத்துக்கொண்டு தமக்கும், புலிகள் இயக்கத்தினருக்கும் இடையே நட்பு ஏற்பட்டுவிட்டதாக தமிழ்நாட்டில் பிரசாரம் செய்தது ஈ.என்.டி.எல்.எஃப்.

தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் மத்தியில்தான் அப்பிரசாரம் செய்யப்பட்டது.

'புலிகளோடு இணைந்து போராட ஆட்கள் தேவை' என்றுகூறி அகதிமுகாம்களில் ஆட்திரட்டல்களிலும் ஈடுபட்டனர்.

கச்சதீவுக்கு சென்று புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் சிலரை தாங்கள் சந்தித்துவிட்டு வந்ததாகவும் அகதிமுகாம்களுக்குள் ஒரு செய்தியைப் பரப்பிவிட்டனர்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல சமீபத்தில் செய்தி நிறுவனம் ஒன்றின் மூலமாக ஈ.என்.டி.எல்.எஃப். வெளியாக்கிய தகவல்தான் பரபரப்பை ஏற்படுத்தியது.

"தமிழ்நாட்டிலிருந்து வன்னிக்குச் சென்று புலிகள் இயக்கப் பிரமுகர்களை சந்தித்தது ஈ.என்.டி.எல்.எஃப். தூதுக்குழு" என்பதுதான் செய்தி.

இந்தியாவில் புலிகள் இயக்கத்தினர் எந்த ரூபத்திலும் ஊடுருவிவிடக்கூடாது என்பதில் இந்திய மத்திய அரசும், தமிழக மாநில அரசும் கடும் அக்கறையாக இருக்கின்றன.

புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய தமிழக அரசியல்வாதிகள்கூட உளவுத் துறையினரால் கண்காணிக்கப்படுகின்றனர். அவர்கள் நடத்தும் கூட்டங்களில் ஆற்றப்படும் உரைகள் பொலிசாரால் பதிவு செய்யப்படுகின்றன.

இந்திய அரசின் நலனுக்கு விரோதமில்லாத அமைப்புக்கள் என்று கருதப்படும் இலங்கைத் தமிழர்களும், இயக்கங்களின் உறுப்பினர்களும் மட்டுமே தமிழ்நாட்டில் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய உளவுப் பிரிவுகளில் ஒன்றான றோவின் ஆசிர்வாதத்துடன்தான் ஈ.என்.டி.எல்.எஃப். தமிழ்நாட்டில் சுதந்திரமாகத் தங்கியிருக்க முடிகிறது.

இந்நிலையில் புலிகளுக்கும், தமக்கும் உடன்பாடு இருப்பதாகச் சொல்லும் துணிச்சல் ஈ.என்.டி.எல்.எஃப்புக்கு எப்படி ஏற்பட்டது? என்பதுதான் முக்கியமான கேள்வி.

கொழும்பில் இருந்துகொண்டு, புலிகளுடன் தொடர்பாக இருப்பதாக அறிக்கை விடுவதும், ஒன்றுதான், இந்தியாவிலிருந்து அறிக்கை விடுவதும் ஒன்றுதான். பிடித்து உள்ளே போட்டுவிடுவார்கள்.

ஈ.என்.டி.எல்.எஃப். அறிக்கை விட்டுக் கொண்டு தமிழ்நாட்டில் சுதந்திரமாக இருப்பதென்றால் அதன் மர்மம் என்ன?

அங்குதான் இருக்கிறது விஷயம். இந்திய உளவுப்பிரிவினரின் சம்மதத்தோடுதான் ஈ.என்.டி.எல்.எஃப். புலிகளுக்கு ஆதரவான அமைப்பாக தன்னைக் காட்டிக் கொள்ள ஆரம்பித்தது.

அதாவது, இந்திய உளவுப்பிரிவின் ஒரு ஏஜண்டாகத்தான் ஈ.என்.டி.எல்.எஃப். செயற்பட முன்வந்திருக்கிறது.

இந்திய உளவுப்பிரிவினருக்கு புலிகள் தொடர்பான தகவல்கள் தேவை. இலங்கைப் பிரச்சனையில் நேரடியாக தலையிடாவிட்டாலும், இலங்கை விவகாரத்தில் இந்தியா கண்ணை மூடிக்கொண்டிருக்க முடியாது.

ஏனெனில் இலங்கையின் இனப் பிரச்சனை இந்தியாவின் நலனுடனும் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சனையாகவே இருந்து வருகிறது. புலிகள் இயக்கத்தினரின் நடவடிக்கைகள், திட்டங்கள் தொடர்பாகவும் இந்தியாவின் உளவு நிறுவனங்கள் கூர்ந்து கவனித்துக்கொண்டே இருக்கின்றன.

இந்தியாவுக்குள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய புலிகள் இயக்கத்தின் உள் விபரங்களை கண்டறிவதில் இந்திய உளவு நிறுவனங்கள் அக்கறை காட்டியே வருகின்றன.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நலன் பாதிக்கப்படுமா, இல்லையா என்பதை கண்டறிய வேண்டுமானால் இலங்கை அரசின் வெளிநாட்டுக் கொள்கைகள், உறவுகள் பற்றி மட்டும் அறிந்துவைத்தால் மட்டும் போதாது. புலிகள் இயக்கத்தின் வெளியுலகத் தொடர்புகள், இந்தியா தொடர்பாக புலிகளின் எண்ணங்கள் போன்றவற்றையும் நாடிபிடித்தறிய வேண்டும்.

புலிகள் தொடர்பான உள்விபரங்களைத் திரட்ட இந்திய உளவுப் பிரிவினருக்கு முன்னர் பல வழிகள் இருந்தன. தற்போது அந்த வழிகளில் பல அடைபட்டுவிட்டன.

இந்நிலையில்தான் ஈ.என்.டி.எல்.எஃப். மூலமாக புலிகளின் நாடிபிடித்தறியும் ஒரு உளவுத் தந்திரம் வகுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

தமிழ்நாட்டை விட்டால் ஈ.என்.டி.எல்.எஃப். எங்கே போயும் தஞ்சமடைய முடியாது. இந்திய உளவுப்பிரிவின் உறவை விட்டால் ஈ.என்.டி.எல்.எஃபுக்கு வேறு கதியும் இல்லை.

அதனால் ஈ.என்.டி.எல்.எஃப். தமக்கு விசுவாசமாக இருக்கும் என்று இந்திய உளவு நிறுவனங்கள் நம்புகின்றன.

ஆனாலும், புலிகளை இந்தியாவுக்குள் அனுமதித்தால் ஆபத்தாகிவிடுமோ என்றும் உளவு நிறுவனங்கள் அஞ்சுகின்றன. தாம் எட்டடி பாய்ந்தால் புலிகள் பதினாறடி பாய்ந்துவிடுவார்கள் என்று தெரியும்.

அதனால், இலண்டனிலோ, அல்லது கச்சதீவு போன்ற இடங்களிலோ புலிகளுடன் ஈ.என்.டி.எல்.எஃப். சந்திப்பு நடத்திக் கொள்ளலாம் என்பதுதான் திட்டம்.

ஆனால் ஈ.என்.டி.எல்.எஃப். அவசரப்பட்டு காரியத்தைக் கெடுத்துவிட்டது. தமது இயக்கத்துக்கு பிரபலம் கிடைக்கட்டும் என்று நினைத்து வன்னிக்கு சென்று வந்ததாகச் செய்தியைப் பரப்பிவிட்டார்கள்.

அதனால் எழுந்தது சிக்கல். இந்தியாவில் தங்கியுள்ள ஒரு அமைப்பு எப்படி கள்ளத்தனமாக வன்னிக்கு சென்று வந்தது? என்று இந்தியப் பத்திரிகைகள் கேள்வி எழுப்பின.

புலிகளோடு ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்று நிரூபிப்பதில் கவனமாக உள்ள தமிழக அரசுக்கும் அது அதிர்ச்சியான செய்தியாகிவிட்டது.

அதன் விளைவாக இந்திய உளவு நிறுவனங்கள் பரந்தன் ராஜன் மூலமாக மற்றொரு அறிக்கை விடவைத்தன.

**"புலிகள் இயக்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும். இந்தியாவின் உதவியுடன் தீர்வுகாண முன்வரவேண்டும்"** என்று அறிக்கை விட்டார் பரந்தன் ராஜன் என்றழைக்கப்படும் ஞானசேகரன்.

அதன்மூலம் ஈ.என்.டி.எல்.எஃப். இந்தியாவின் நலனுக்கு விரோதமான அமைப்பல்ல என்பதை சொல்லாமல் சொல்லி விட்டார்.

ஈ.என்.டி.எல்.எஃப்பின் அவசரக் குடுக்கைத்தனத்தால், இந்திய உளவு நிறுவனங்களின் உளவுத் தந்திரம் ஒன்று தோல்வி கண்டுவிட்டது.

ஈ.என்.டி.எல்.எஃப். அமைப்பின் பின்னணியும், அதன் தொடர்புகளும் புலிகளுக்கு தெரியாத விஷயங்களல்ல.

புலிகளின் வெளிநாட்டுக் கிளை உறுப்பினர்கள் சிலர் ஈ.என்.டி.எல்.எஃப்பை பயன்படுத்த நினைத்திருந்தாலும், முடிவு தமக்குச் சாதகமாக அமையும் விதத்தில்தான் புலிகளின் அணுகுமுறை அமைந்திருக்கும்.

தமது பிரதித் தலைவர் மாத்தையா மூலமாக பிரபாவைக் கொல்ல இந்திய உளவு நிறுவனம் திட்டமிட்டது என்பது புலிகளின் குற்றச்சாட்டு. அதன் காரணமாகவே மாத்தையாவுக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டதாக புலிகள் கூறியுள்ளனர்.

அப்படியிருக்கும்போது, பரந்தன் ராஜன் போன்றவர்களையோ, இந்திய உளவு நிறுவனத்தின் ஏஜண்ட்போலவே செயற்படும் ஒரு குழுவையோ புலிகள் நம்பி உறவாடுவார்கள் என்று நினைப்பது கற்பனைக்கும் எட்டாத விஷயம்.

இதேவேளையில், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் கொள்கை காங்கிரஸ் ஆட்சிக்கால கொள்கையில் இருந்து சற்றும்மாறுபடவில்லை.

மத்தியில் ஆட்சி மாறினாலும், வெளிநாட்டு விவகாரங்களை கையாள்பவர்கள் காங்கிரஸ் ஆட்சிக்கால அதிகாரிகள்தான்.

'இந்தியா மத்தியஸ்தம்' செய்ய வேண்டும் என்று தமிழ்கட்சிகள் பல கோரிக்கை விடுத்தாலும், இந்தியா தற்போதைக்கு அதனைப் பற்றி சிந்திக்கவே தயாராக இல்லை.

புலிகள் இயக்கத்தினர் இந்தியாவுக்கும் எதிரானவர்கள் என்ற எண்ணம் ஆழமாகப் பதிந்துள்ள வெளியுறவுத் துறையினர், புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளையிட்டு மௌனம் சாதிக்கவே விரும்புகின்றனர்.

அதுதவிர காங்கிரஸ் கட்சியும், ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தியும் இந்திய அரசியலில் செல்வாக்குள்ள நிலையில்தான் தொடர்ந்தும் இருக்கின்றனர். அதனால் இலங்கை விவகாரத்தில் புலிகளுக்கு சாதகமான ஒரு நிலைப்பாட்டை இந்தியா எடுக்கும் என்பதற்கான அறிகுறி தெரியவில்லை.

இந்திய உளவு நிறுவனங்கள் அறிய விரும்புவதெல்லாம் புலிகள் தற்போது எப்படியான அரசியல், இராணுவ பலத்தோடு இருக்கிறார்கள்? இந்தியாவுக்கு விரோதமான வெளியுலக நாடு ஏதாவது புலிகளுக்கு மறைமுகமாக உதவுகிறதா? என்ற தகவல்கள்தான்.

அந்த தகவல்களை அறிய மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் ஒன்றுதான் ஈ.என்.டி.எல்.எஃப்பை வைத்து உறவாடித் தகவல் அறியப் போட்ட திட்டம்.

## அதிரடி அய்யாத்துரை



ரெண்டு எழுத்தாரின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளைவிட, வெளியில்தான் மாவீரர்தினம் பரபரப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. ரெண்டு எழுத்தாரின் கட்டுப்பாட்டு பகுதிகளில் ஒருவாரம்தான் அனுஷ்டிப்பு. வெளிப்பகுதிகளில் கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாக 'அலேட்டான' அனுஷ்டிப்பல்லோ நடந்து முடிந்திருக்கு.

**வ**வுனியா அகதிகள் விவகாரத்தில் கிழக்கின் தனித்துவத்தலைவரைப் பிடிச்சு முன்னுக்கு தள்ளிவிட்டுப்போட்டினம் அதிகாரத்தரப்பார். வெகுஜன சபையில் அவர்தானே பதில் சொன்னவர். முகாம்களுக்கு நேரில் விஜயம் செய்த அதிகாரத்தரப்பாரில் அவர் இடம்பெறவில்லை. அவருக்கு சம்பந்தம் இல்லாத விடயம் எண்டு நினைச்சு அழைத்துச் செல்லவில்லையாம். சம்பந்தமில்லாத விடயத்தில் பதில்சொல்லும் பொறுப்பை மட்டும் ஏன் அவரிடம் கொடுத்தவை? தமிழ் வெகுஜனப் பிரதிநிதிகளும் அவரும் மோதிக்கொள்ளட்டும் எண்டு நினைச்சுப்போட்டினமாக்கும்.

**பொ**ன்னான தலைவரின் புத்திரரின் சூறாவளி வேகம் கூட்டாவ கட்சி வட்டாரத்தில் கலக்கத்தைக் கொடுத்திருக்குதாம். குமாரருக்கு முன்பாகவே புயல்வேக அறிக்கைவிடும் பொறுப்பு கிழக்கின் சிங்கத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதாம். ஒவ்வொரு ஞாயிறும் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தி வருவதுபோல அறிக்கை கொடுப்பதுதான் சிங்கத்தாரின் ஸ்டைல். வழக்கமான நாட்களைவிட ஞாயிறு அன்று பத்திரிகை விற்பனை அதிகமாக இருக்கும் எண்டு கணக்குப்போட்டு, அதுக்கேத்தமாதிரி ஞாயிறு தோறும் ஒரு அறிக்கை கொடுத்து அசத்துகிறார் சிங்கத்தார். முன்னாள் பத்திரிகையாளர் என்பதால் அனுபவம் கைகொடுக்குதாக்கும்.

**யா**ழ்ப்பாணத்தில் மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டம் செய்தவையல்லோ அப்போது கடைகளையும் மூடச்சொல்லி ரெண்டு எழுத்தார் மறைமுக உத்தரவு போட்டவையாம். இரண்டு மூன்று நாட்களாக கடைகள் மூடிக்கிடந்ததாம். பச்சைத்தரப்பு கப்டன் ஒருவர் பொறுமையிழந்து ஒரு கடையை உடைத்துத் திறக்க உத்தரவிட்டாராம். கடையைத் திறந்து பச்சைத்தரப்பினரே சனத்துக்கு பொருள் விற்பனை செய்யத்தொடங்க, மளமளவென்று சகல கடைகளும் உரிமையாளர்களால் திறக்கப்பட்டதாம். மக்களில் சிலர் பச்சைத்தரப்பாரை பாராட்டினவையாம். "நீங்கள் செய்ததுதான் சரி. இப்படிச் செய்யவேண்டும் எண்டுதான் நாங்களும் ஆவலோடு எதிர்பார்த்தனாங்கள்" எண்டு போட்டினமாம் ஒரு போடு! காற்றடிக்கிற பக்கம் சாயுறதிலை கில்லாடிகள் இல்லாமல் போகினமோ?

**வ**வுனியாவில் கடந்தவாரமும் ஒரு உடல் வீதியில் கிடந்தது. கழுத்தில் ஒரு வெட்டு. ஆள் குனோஸ். ரெண்டு எழுத்தாரின் கடையொன்றில் வேலைசெய்தவராம். வவுனியா வந்த இடத்தில் இனம் தெரியாதோரால் கடத்தப்பட்டாராம். காணாமல் போனவராகக் கருதப்பட்டவர், பிணமாக காணப்பட்டிருக்கிறார்.

ரெண்டு எழுத்துத் தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு அதிகாரமுள்ள 'சக்தி'யானவர் வெளிநாடு சென்றுவிட்டார். போனவருடமும் ரெண்டு எழுத்துத் தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு 'சக்தி'யானவர் வெளிநாடு சென்றதும் நினைவுக்கு வருகிறது. "உங்கள் நாட்டில் பிரச்சனையில்லை. திரும்பிப் போங்கோ" எண்டு வெளிநாடுகளில் நம்மவர்களுக்கு சொல்லப்படுகிறதாம். நம்நாட்டின் அதிகாரமுள்ள சக்தியானவரே பாதுகாப்புக் கருதி வெளிநாடுதான் போய்வரவேண்டியிருக்கிறது எண்ட விஷயம் அந்தநாடுகளுக்கு தெரியாதாக்கும்.

**யா**ழ் குடாநாட்டு சம்பவங்களுக்கு கிழக்கிலும் மாணவர்கள் பரவலான எதிர்ப்புத் தெரிவித்து கரிநாள் அனுஷ்டித்தவையல்லோ. ரெண்டு எழுத்தார்தான் பக்கபலமாக நிண்டவையாம். கிழக்கில் அரசியல் ரீதியான வேலைகளில் ரெண்டு எழுத்தார் புதுவேகத்துடன் செயற்படுறமாதிரித்தான் தெரியுது. கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள பிரமுகர்கள் பலரையும் தமது பகுதிக்கு அழைத்து பக்குவமாகப் பேசிவிட்டு திருப்பி அனுப்புகினமாம். போய் வந்தது தெரிந்தால் இங்காலை பிரச்சனை, போகாமல் இருந்தால் அங்காலை பிரச்சனை. நாங்கள் என்ன செய்யிறது எண்டு பிரமுகர்கள் சிலர் இரு தலைக்கொள்ளி எறும்பின் நிலையில் இருக்கினமாம்.

நவீன குறள் ஒன்று கிடைத்தது. நீங்களும் படித்துப் பாருங்கோ

"பெற்ற பொழுதைவிட
பெரிதுவப்பாள், தன்
பிள்ளைக்கு
வேலை கிடைத்துவிட்டதென
கேட்ட தாய்!"



படிப்பகம்

www.padippakam.com




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

# திலீபனின் உண்ணாவிரதம் நல்லூரில் மக்கள் வெள்ளம்

## ஐந்து கோரிக்கைகள்

13.9.1987ல் புலிகள் அமைப்பினரால் ஐந்து கோரிக்கைகள் இந்தியத் தூதருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

1. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இன்னமும் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படவேண்டும்.
3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை 'புனர்வாழ்வு' என்றழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
4. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.
5. இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவல்படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்படும் ஆயுதங்கள் திரும்பப்பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்களில் நிலைகொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்படவேண்டும்.

இக் கோரிக்கைகளுக்கு சாதகமான பதிலைத் தருமாறு இந்தியத்தூதருக்கு 24 மணிநேர அவகாசம் வழங்கப்பட்டது.




இந்தியத் தூதர் திக்ஷித் புலிகளின் கோரிக்கை தொடர்பாக பதில் எதனையும் சொல்லவில்லை.

புலிகள் இயக்கத்தினர் தன்னை மிரட்டுவதாக நினைத்துவிட்டார் திக்ஷித்.

தாம் அனுப்பிய கோரிக்கைகளுக்கு பதில் தரப்படாவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பது என்று புலிகள் தீர்மானித்திருந்தனர்.

13.9.87 அன்று புலிகள் இயக்க பிரதேசப் பொறுப்பாளர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்தியா தமது கோரிக்கைகளுக்கு சாதகமாக பதிலளிக்கத் தவறினால் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது என்று அக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## இந்தியாவுக்கு கண்டனம்

உண்ணாவிரதப் போராட்டத்துக்கு திட்டமிட முன்பாக, யாழ் குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்கள் முன்பாக பொதுமக்களை நிறுத்தி மறியல் போராட்டங்களை நடத்தினார்கள் புலிகள் இயக்கத்தினர்.

இந்தியப் படையினர் இலங்கைப் படைகளுக்கு ஆதரவாக நடக்கின்றனர் என்று குற்றம்சாட்டியே மறியல் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

யாழ் கோட்டையில் உள்ள இந்திய இராணுவமுகாம் முன்பாக நடத்தப்பட்ட மறியல் போராட்டத்தை முடித்துவைத்து திலீபன் உரையாற்றினார்.

திலீபனின் உரையில் இந்தியா மீதான கண்டனம் பகிரங்கமாக வெளியிடப்பட்டது. திலீபன் அங்கு பேசியது இதுதான்;

"இந்த யாழ்ப்பாணக் கோட்டையிலே சில காலம் முன்பாக தமிழனின் கொடி பறந்தது. அந்தக் கொடியைப் போத்துக்கேயர் பறித்தெடுத்தனர். போத்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தரும், ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயரும் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயரிடமிருந்து சிங்களவர் கைப்பற்றினர். இன்று இந்தியர்கள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தக் கோட்டையிலே தமிழ்க்கொடி புலிக்கொடி பறக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

எங்கள் விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கவே இலங்கை-இந்திய ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டது. இந்தியப் படை வந்து சேர்ந்தது.

விடுதலை கிடைக்கும்வரை நாம் தொடர்ந்து போராடுவோம். இந்தக் கோட்டையிலே தமிழர்களின் சுதந்திரக் கொடி, புலிக்கொடி பறக்க வேண்டும்." என்று உணர்ச்சிகரமாக உரையாற்றினார் திலீபன்.

இந்தியப்படை வெளியேறவேண்டும் என்று புலிகள் இயக்கத்தினரின் தரப்பில் இருந்து வெளிப்படையாகக் கூறப்பட்டது அப்போதுதான்.

15.09.1987 காலை 9.45 மணிக்கு யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள 'கந்தன் கருணை' என்னும் இல்லத்திலிருந்து வோக்கி டோக்கியுடன் புறப்பட்டார் திலீபன்.

வேனில் ஏறுவதற்கு முன்னர் வோக்கி டோக்கி மூலம் பிரபாகரனுடன் சில நிமிடங்கள் பேசிவிட்டு ஏறுகிறார்.

பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கூடி நின்று திலீபனை வழியனுப்பி வைத்தனர்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாகத்தான் 'உண்ணாவிரத மேடை அமைக்கப்பட்டிருந்தது.

வேனில் வந்து திலீபன் இறங்கியதும் பிரதித்தலைவர் மாத்தையா திலீபனை கட்டியணைத்து வரவேற்றார்.

வயதான ஒரு தாயார், கண்களில் கண்ணீருடன் திலீபனின் நெற்றியில் திருநீறு பூசிவிட்டு குங்குமம் இட்டு வாழ்த்தினார்.

## உண்ணாவிரதம் ஆரம்பம்

காலை 9.55 மணிக்கு உண்ணாவிரத மேடைக்கு திலீபனை அழைத்துச் சென்று அமரவைத்தார் மாத்தையா..

உண்ணாவிரத மேடையருகே இன்னுமொரு மேடை அமைக்கப்பட்டிருந்தது.

திலீபனின் உண்ணாவிரதம் ஆரம்பமானதும், அருகேயுள்ள மேடையில் கூட்டம் ஆரம்பமானது.

கவிஞர் காசி ஆனந்தன், நடேசன் ஆகியோர் திலீபனின் உண்ணாவிரதம் ஏன், எதற்காக நடத்தப்படுகிறது என்பதை மக்களுக்கு விளக்கும் வகையில் உரையாற்றுகின்றனர்.

நீராகாரம்கூட அருந்தாமல் உண்ணாவிரதம் இருப்பது என்பதுதான் திலீபனின் முடிவு.

புலிகள் இயக்கத்தின் இரண்டாவது உண்ணாவிரதப் போராட்டம் அது.

1986ம் ஆண்டு நவம்பரில் தமிழ்நாட்டில் பிரபாகரன்- உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். தம்மிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களை திருப்பித் தருமாறு கோரிக்கை விட்டு பிரபாகரன் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

நீராகாரம் அருந்தாமல்தான் பிரபாகரனும் உண்ணாவிரதம் இருந்தார். இரண்டாவது நாளே தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரின் தலையீட்டால் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் திரும்ப ஒப்படைக்கப்பட்டன.

**புலிகள் இயக்கத்தின் வரலாற்றில் இரண்டாவது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் திலீபனால் நடத்தப்பட்டது.**

உண்ணாவிரதமிருந்த திலீபனைப் காண்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் வந்து சென்றனர்.

தாமாக வந்து சென்ற மக்கள் ஒருபுறமிருக்க, புலிகள் இயக்கத்தினரும் கிராமம், கிராமமாகச் சென்று மக்களை மினி பஸ்களில் ஏற்றிவந்து உண்ணாவிரதத்தைக் காணவைத்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் இருந்து மாணவ மாணவிகளை உண்ணாவிரதப் போராட்டத்தைக் காண்பதற்கு அனுப்பிவைக்குமாறும் புலிகள் இயக்கத்தினர் ஏற்பாடு செய்தனர்.

திலீபனுக்கு ஆதரவாக பலர் தாமாகவே முன்வந்து அடையாள உண்ணாவிரதம் இருந்தனர்.

## முகாமுக்குள் மக்கள்

யாழ் குடாநாடெங்கும் துக்கநாள் போலவே நிலைமைகள் காணப்பட்டன. கிளிநொச்சிக்கு அப்பால் ரயில் போக்குவரத்து நடத்த முடியவில்லை.

இந்தியப் படையினருக்கு எதிராக வீதிகளில் மக்கள் கோஷமிட்டனர்.

மன்னாரில், தலைமன்னார் வீதியில் இருந்த இந்தியப்படை முகாமை நோக்கி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

ஊர்வலத்தின் பின்னால் புலிகள் இயக்கத்தினர் வாகனம் ஒன்றில் வந்துகொண்டிருந்தனர். அந்த வாகனத்தில் ஒலிபெருக்கி கட்டப்பட்டிருந்தது.

ஒலிபெருக்கி மூலம் இந்திப்படைக்கு எதிரான கோஷங்களைச் சொல்ல, ஊர்வலத்தினர் அதனை திருப்பிச் சொல்லிக்கொண்டு வந்தனர்.

முகாமை ஊர்வலத்தினர் நெருங்கியதும் "முகாமுக்குள் செல்லுங்கள்" என்று ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது.

முகாமுக்குள் செல்ல முற்பட்ட மக்களை இந்தியப்படை வீரர் ஒருவர் குறுக்கே நின்று வழி மறித்தார்.

"வரவேண்டாம், உள்ளே வரவேண்டாம்" என்று அவர் சொல்லிக் கொண்டிருந்ததை மக்கள் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை.

அந்த வீரரை தள்ளிக்கொண்டு மக்கள் உள்ளே புகுந்தனர்.

முகாமுக்குள் இருந்த வீரர் ஒருவர்

# பொலிஸ் நிலையத்துக்குள் மக்கள்

துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். உள்ளே புகுந்தவர்களில் முன்வரிசையில் நின்றவர் சூடுபட்டுக் கீழே விழ, ஏனையோர் கலைந்து ஓடினார்கள்.

## பொலிசார் ஊர்வலமாக

செப்டம்பர் 18ம் திகதி, வெள்ளிக்கிழமையன்று பருத்தித்துறையில் மற்றொரு சம்பவம்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தை நோக்கி ஆர்ப்பாட்டம் செய்தபடி மக்கள் திரண்டு சென்றனர். புலிகள் இயக்க உறுப்பினர்கள் முன்னணியில் நின்று ஊக்கம் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்த மக்கள் அங்கிருந்து இலங்கைப் பொலிசாரை வெளியேறுமாறு கூறிக்கொண்டே, பொலிஸ் நிலையத் தளபாடங்களை அடித்து நொறுக்கினார்கள்.

திரண்டுவந்த மக்களைக் கண்டதும் பொலிசார் பயந்துவிட்டனர். மறுபேச்சே இல்லாமல் மூட்டை முடிச்சுக்களை கட்டிக்கொண்டு புறப்பட்டனர்.

உடமைகளைத் தலையில் சுமந்துகொண்டு பருத்தித்துறை இராணுவமுகாமுக்கு நடந்து செல்லுமாறு பொலிசாரிடம் கூறப்பட்டது.

அதன்படியே பொலிசார் நடந்து செல்ல அவர்களை கேலிசெய்தபடி பருத்தித்துறை இராணுவ முகாம்வரை ஊர்வலமாக அழைத்துச் சென்று விட்டு வந்தனர். பருத்தித்துறை பொலிஸ் நிலையம் தீயிடப்பட்டது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்ட போதும், பொலிசார் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட போதும் இந்தியப் படையினர் கண்டும் காணாமல் இருந்துவிட்டனர்.

திலீபனின் உண்ணாவிரதம் தொடர்பாக ஆரம்பத்தில் அலட்சியமாக இருந்தபோதும், நிலமை விபரீதமாக மாறுகிறது என்பதை பின்னர் இந்தியப்படை அதிகாரிகள் புரிந்து கொண்டனர்.

தம்மை ஆரவாரமாக வரவேற்ற மக்களை தமக்கு எதிராகத் திருப்பிவிட புலிகள் இயக்கத்தினர் மிகக் கச்சிதமாக காரியமாற்றுகின்றனர் என்பது அவர்களுக்கு புரியத் தொடங்கியது.

திலீபனைப் பார்வையிடவும் இந்தியப் படை அதிகாரிகள் சிலர் சென்றனர்.

செப்டம்பர் 15ம் திகதி திலீபன் உண்ணாவிரதம் ஆரம்பித்த தினத்தன்று இரவு பதினொரு மணிக்கு உண்ணாவிரத மேடைக்கு வந்தார் பிரபாகரன்.

திலீபனின் தலையை வருடி, அவரது நிலையை அறிந்துவிட்டுச் சென்றார்.

## இரண்டாவது நாள்

ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் இருந்தமையால் சிறுநீர் கழிக்க முடியாமல் இரண்டாவதுநாளே சிரமப்பட்டார் திலீபன்.

இரண்டாவது நாள் உண்ணாவிரத மேடையில் இருந்தபடியே மைக்கில் உரையாற்றினார் திலீபன்.

"எனது அன்பிற்கும், மதிப்புக்கும் உரிய மக்கள் அனைவருக்கும் எனது வணக்கம். நின்றுகொண்டு பேசமுடியாத நிலையில் இருப்பதால் இருந்துகொண்டு பேசுகிறேன்.

நாளை நான் சுயநினைவுடன் இருப்பேனா என்பது தெரியாது. அதனால் இன்று உங்களுடன் பேசவேண்டும் என்று விரும்பினேன்.

நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறோம். அறுநூற்று ஐம்பது பேர் இன்றுவரை மரணித்துள்ளோம்.

மில்லர் இறுதியாகப் போகும்போது என்னிடம் ஒருவரி கூறினான். நான் அவனுடன் இறுதிவரை இருந்தேன்.

"நான் எனது தாய்நாட்டிற்காக உயிர் துறப்பதை எண்ணும்போது மகிழ்ச்சியும், திருப்தியும் அடைகிறேன். மக்கள் விடுதலை அடையும் காட்சியை என் கண்ணால் காண முடியாது என்பதே ஒரே ஒரு ஏக்கம்" என்று கூறிவிட்டு, வெடிமருந்து நிரப்பிய லொறியை எடுத்துச் சென்றான்.

மரணித்த அறுநூற்று ஐம்பது பேரும் அநேகமாக எனக்குத் தெரிந்துதான் மரணித்தார்கள். அதனை நான் மறக்கமாட்டேன்.



உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்க தலைவரின் அனுமதியைக் கேட்டேன். அப்போது தலைவர் கூறிய வார்த்தைகள் எனது நினைவில் உள்ளன.

"திலீபா நீ முன்னால் போ, நான் பின்னால் வருகிறேன்" என்று அவர் கூறினார்.

இத்தகைய ஒரு தெளிவான தலைவனை, தனது உயிரைச் சிறிதுகூட மதிக்காத தலைவனை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்.

அந்த மாபெரும் வீரனின் தலைமையில் ஒரு மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாகத் தமிழீழத்தை, தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத்தரும்.

அதனை வானத்தில் இருந்து, அந்த அறுநூற்று ஐம்பது போராளிகளுடன் நானும் பார்த்து மகிழ்வேன்.

உண்மையான, உறுதியான இலட்சியம் எமது இலட்சியம். அந்த இலட்சியத்தை எமது தலைவருடன் சேர்த்து நீங்கள் அடையுங்கள். எனது இறுதி விருப்பமும் இதுதான்"

திலீபன் பேசி முடித்தபோது கூடியிருந்த மக்கள் கண்ணீர்விட்டனர். கதறியழுதனர்.

## மூன்றாம்நாள்

திலீபனின் உடல்நிலை மோசமடையத் தொடங்கியது. கொஞ்சமாவது தண்ணீர் குடித்தால்தான் உடல்நிலை ஓரளவாயினும் தேறும் என்று நினைக்கின்றனர் சிலர்.

அதனை திலீபனிடம் எப்படிச் சொல்வது என்று தயக்கம்.

திலீபனுக்கு அருகே இருந்த மேடையில் கூட்டத்தில் உரையாற்றிய கருணானந்தசிவம் என்னும் ஆசிரியர் தனது பேச்சோடு பேச்சாக அந்தக் கோரிக்கையை முன்வைத்துவிட்டார்.

"திலீபன் புலிகளுக்கு மட்டும் சொந்தமானவரல்ல. தமிழினத்துக்கே சொந்தமானவர்."

கருணானந்தசிவம் அதைச் சொன்னபோது திலீபனின் முகத்தில் புன்னகை அரும்பியது. அடுத்ததாகச் சொன்னார்: "அப்படிப்பட்ட திலீபன் ஒரு சொட்டு நீராவது அருந்தி தன் உடலைக் காப்பாற்ற வேண்டும். இது என் வேண்டுகோள் மட்டுமல்ல, இங்கு வந்துள்ள இலட்சக்கணக்கான மக்களின் வேண்டுகோளுமாகும்."

அதைக் கேட்டதும் திலீபனின் முகம் வாடிவிட்டது. மைக்கை தன்னிடம் வாங்கித்தருமாறு கேட்டார்.

**"இந்த மேடையில் பேசிய ஒரு அன்பர் நீர் உணவு அருந்தும்படி கூறியது என்னை அவமானப்படுத்துவதுபோல இருந்தது. நான் இந்த மேடையில் நீராகாரம் அருந்தாமல்தான் உண்ணாவிரதம் ஆரம்பித்தேன். இறுதிவரை இந்த முடிவில் இருந்து மாறமாட்டேன்.**

நீங்கள் இந்த திலீபனை நேசிப்பது உண்மையானால், என்னை யாரும் நீராகாரம் அருந்தும்படி வற்புறுத்தவேண்டாம்.

என் கோரிக்கைகளை இந்திய அரசு நிறைவேற்றாவிட்டால், இறப்பேனே தவிர, இந்த அற்ப உயிரைக் காப்பாற்றுவதற்காக என் இலட்சியத்தில் இருந்து பின்வாங்கமாட்டேன்."

அதன்பின்னர் நீராகாரம் அருந்தும்படி திலீபனை யாரும் வற்புறுத்தவில்லை.

## நான்காம் நாள்

உண்ணாவிரத மேடையில் இருந்த கட்டிலில் சுருண்டு கிடந்தார் திலீபன். நான்காவது நாள் திலீபன் ஆற்றிய உரை உருக்கமாக இருந்தது.

**"அன்பார்ந்த தமிழீழ மக்களே! விளக்கு அணையும் முன்பாக பிரகாசமாக எரியுமாம். அதுபோல இன்று நானும் உற்சாகமாக இருக்கிறேன். இன்று தாராளமாகப் பேசமுடிகிறது.**

**போராடத் தயாராகுங்கள். எனக்கு விடைதாருங்கள். ஒருவரும் என்னை இந்தப் போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்க வேண்டாம். நானும், தலைவரும் சேர்ந்து எடுத்த முடிவுதான் இது.**

எமது வீரர்கள் கொள்கைக்காக உயிரைக் கொடுப்பவர்கள். கொள்கைக்காக என்னைத் தொடர்ந்து வருவார்கள். அவர்களையும் தடுக்காதீர்கள். நான் மூன்று தடவைகள் பேசியுள்ளேன். மூன்று தடவையும் ஒரே கருத்தைத்தான் பேசியுள்ளேன்."

நான்காம் நாள் இரவு திலீபனின் உடலில் திரவநிலை குறையத்தொடங்கியது. இரண்டு நாட்களாக அவரால் சிறுநீர் கழிக்க முடியவில்லை.

தொடர்ந்து இவ்வாறே இருந்ததால் செல்வி குகசாந்தினி, திருமதி நல்லையா ஆகிய பெண்கள் திலீபனுக்கு ஆதரவாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

திலீபன் உண்ணாவிரதம் ஆரம்பித்து நான்கு நாட்கள் சென்றநிலையிலும் இந்திய அரசோ, இந்தியத் தூதர் திக்ஷித்தோ அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை.

மக்கள் வெள்ளத்தால் நல்லூர் வீதிகள் நிரம்பிவழிந்தன.

எங்கும் ஒரே பதட்டம். திலீபன் பலியானால் புலிகள் சும்மாயிருக்கமாட்டார்கள். போர்தான் தொடங்கப் போகிறது என்று மக்கள் பேசிக் கொள்ள ஆரம்பித்தனர். (தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# தொடரும் யுத்தமும் 86 கோடி டொலர்களும்!

அலசுவது- இராஜதந்திரி

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் பாரிஸ் நகரில் வைத்து 86 கோடி டொலரை இலங்கைக்கு வழங்கியுள்ளன.

பாராளுமன்றத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மூன்றாவது வரவு- செலவுத்திட்டத்தை சமப்பித்ததைத் தொடர்ந்து, பிரான்ஸின் பாரிஸ் மாநகர் சென்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் உதவித் தொகையைப் பெற்றுள்ளார்.

இலங்கையின் வரவு- செலவுத்திட்டத்தில் வழமைபோலவே பெருமளவு பணத்தை பாதுகாப்புச் செலவுகளுக்காக அரசு ஒதுக்கியுள்ளது. இலங்கை அரசைப் பொறுத்தவரை பாதுகாப்புச் செலவுக்கு கோடி, கோடியாகப் பணத்தைத் தாரை வார்க்க வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டுள்ளது.

இன்று, நேற்றல்ல; கடந்த 13 வருட காலமாகவே வரவு- செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவுக்காக நிறையவே ஒதுக்கப்பட்டுவருவது கண்கூடு. இப்பெருந்தொகை ஒதுக்கீட்டை இலங்கையின் ஏனைய துறைகளில் செலவிட்டிருந்தால் இலங்கை பெரும் சுபீட்சத்தையே கொண்டிருக்கும். ஆனால் கொடிய உள்நாட்டு யுத்தம் இச் சுபீட்சத்துக்கு ஒரு தடைக்கல்லாக இருப்பதுடன் நாட்டின் பொருளாதார வளங்களை மட்டுமல்ல; இரத்தத்தைக்கூட உறுஞ்சுவதாகவே இருக்கின்றது.

பாரிஸில் கூடிய இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு உலக வங்கி தலைமை வகித்தது.

இக்கூட்டத்தில் இலங்கை கையை நீட்டிய மறுகணம் உதவி வழங்கும் நாடுகள் மறுபேச்சின்றி உதவித்தொகையை அள்ளிக் கொடுத்துவிடவில்லை.

இலங்கையின் இன்றைய அரசியல் நிலபரம், உள்நாட்டு யுத்தம், மனித உரிமைகள் என்பவை பற்றியெல்லாம் பாரிஸ் கூட்டத்தில் அலசி ஆராயப்பட்டுள்ளன. அதன்பின்னரே இலங்கைக்கான உதவித்தொகையை உதவி வழங்கும் நாடுகள் அங்கீகரித்துள்ளன.

இலங்கைக்கான 86 கோடி டொலர் உதவி வழங்கப்பட்டதையடுத்து உலக வங்கி அறிக்கையொன்றை விடுத்திருந்தது.

அவ்வறிக்கையில் இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் தீர்வொன்றைக் காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கமும் இலங்கையிலுள்ள அரசியல் சக்திகளும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் குறித்து பல்வேறு கருத்துக் கண்ணோட்டங்களையும் கொண்டிருக்கலாம்.

ஆனால் எல்.ரி.ரி.ஈ.யினருடன் ஒரு விரிவான பேச்சுவார்த்தை நடத்தப்படும் பட்சத்திலேயே இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரமுடியுமென்று சர்வதேச சமூகம் கருதுகின்றது. இதன் காரணமாகவே இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள்கூட இலங்கை அரசுக்கும் எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்குமிடையே பேச்சுக்கள் இடம்பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளன.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டியதன் அவசியம் சுட்டிக்காட்டப்பட்ட அதேசமயம், இலங்கையில் நிலவும் மனித உரிமைகளுக்கான பாதுகாப்புக் குறித்தும் பாரிஸில் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பாரிஸ் கூட்டம் இடம்பெறும் தறுவாயிலெல்லாம் மனித உரிமைகள் பேணப்படுவது பற்றியும் பிரஸ்தாபிக்கப்படுவதுண்டு. ஏனெனில் கடந்தகாலங்களில் இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் என்பது அப்பட்டமாகவே மீறப்பட்டுவந்துள்ளன.

இன்றுங்கூட மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு எவ்வித குறைவுமில்லை என்பதை எடுத்துக் காட்டுவதாகவே வடக்கு-கிழக்கில் இடம் பெற்றுவரும் சம்பவங்கள் விளங்குகின்றன.

ஐ.தே.க. ஆட்சியில் தென்னிலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் அளவு கணக்கற்ற விதத்தில் மீறப்பட்டன.

தற்போதைய ஆட்சியிலும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அடிப்படை மனித உரிமை மீறல்கள் என்பது மிகவும் பாரதூரமான முறையில் இடம்பெற்று வருவதையே அவதானிக்க முடிகின்றது.

உள்நாட்டு யுத்தமும், அடிப்படை மனித உரிமை மீறல்களும் மலிந்து போயுள்ள ஒரு நாட்டில் நேர்த்தியான அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ள முடியாதென்பதனை சர்வதேச சமூகம் நன்கறியும்.

கடந்த காலங்களில் இலங்கைக்கு உதவியாகவும், கடனாகவும் வெளிநாடுகள் பலவும் வழங்கிய பண உதவிகள் போருக்கே விரையமாகியிருந்தன. வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் அபிவிருத்திப்பணிகளுக்காக ஒதுக்கப்பட வேண்டிய தொகை அங்குள்ள படையினரின் செலவுகளுக்கும், அகதிகளைப் பராமரிக்கவுமே செலவிடப்பட்டு வருகின்றது.

யுத்தம் நீடித்துச் செல்லும்போது அதற்கான செலவும், அகதிகளுக்கான செலவீனங்களுமே அதிகரித்துச்செல்லும். எனவே இத்தகைய செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசியல் அணுகுமுறைகள் ஆரோக்கியமடைய வேண்டியது அவசியமானதாகின்றது.

ஆனால் இலங்கையில் எந்தவொரு அரசியல் சக்தியும் இந்த அவசியத்தை உணராது ‘எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம்’ என்ற ரீதியில் நடந்து வருகின்றன.

வடக்கே புனரமைப்பு, புனர் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தினால் அதிகாரசபையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரசபை அண்மையில் நெதர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தூதுவர்களை வடக்கே கூட்டிச்சென்று அங்குள்ள நிலைமைகளை அவர்களுக்குக் காண்பித்தது.

வடபகுதி விவசாயிகள் பலருடன் நெதர்லாந்து தூதுவர் உரையாடினார். உலகில் உருளைக்கிழங்கு உற்பத்தியில் முன்னணி வகிக்கும் ஒரு நாடே நெதர்லாந்து.

நெதர்லாந்து தூதுவரே ஆச்சரியப்படத்தக்கவிதத்தில் வடபகுதி விவசாயிகளின் உருளைக்கிழங்கு உற்பத்தி பற்றிய அறிவு விளங்கியிருந்தது. இதன்காரணமாகவே வடக்கிற்கென பெருந்தொகையான விதை உருளைக்கிழங்கையும் நெதர்லாந்துத் தூதுவர் தருவித்துக் கொடுத்துள்ளார்.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியிலும், இந்த ஆண்டின் ஆரம்பத்திலும் வடக்கே இடம்பெற்ற யுத்தங்களினால் விவசாயம், பயிற்செய்கை என்பவை அனைத்துமே பாழாகிப்போயிருந்தன.

ஆனால் தமது இருப்பிடங்களுக்கு மீளவும் திரும்பிய வடபகுதி விவசாயிகள் மிகக் குறுகிய காலத்தில் பயிற்செய்கையில் ஈடுபட்டு அபரிமிதமான உற்பத்தியைக் கண்டுள்ளனர். வடக்கே நிலை கொண்டுள்ள படையினர்கூட வடபகுதி விவசாயிகளிடமிருந்தே விவசாய உற்பத்திகளைப் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் பயிற் செய்கையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியானது அங்குள்ள விவசாயிகளின் கடின உழைப்பின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது. எத்தகைய இக்கட்டான சூழலிலும் மனந்தளராது உழைக்கக் கூடியவர்களாகவே அவர்கள் இருந்து வந்துள்ளனர்.

வடக்கே மண்ணெண்ணெய், உரவகை விவசாய உபகரணங்கள் ஆகியவை கிடைக்காதிருந்த காலத்தில்கூட விவசாய உற்பத்திகள் சீராகவும், நேர்த்தியாகவும் இடம் பெற்றிருந்தன.

ஆனால், அரசாங்கத்தின் வடபகுதி அபிவிருத்திக்கான அதிகாரசபையினர் விவசாயிகளின் கடின முயற்சிகளை வேறுவகையில் சித்தரிக்க முனைவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. வடக்கில் சுமூக நிலை தோற்றியுள்ளதின் வெளிப்பாடாகவே விவசாய உற்பத்திகளின் நிறைவைக் காண்பிக்கத் தலைப்படுகின்றனர்.

எனவே வெளிநாட்டுத் தூதுவர்களையும், தூதுக் குழுக்களையும் வடக்கே கூட்டிச் சென்று அங்குள்ள நிலைமைகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் பண உதவிகளைப் பெறுவதற்கும் ஆட்சியாளர்கள் எத்தனிக்கின்றனர்.

இருந்தபோதிலும் கடந்த 13 வருடகால யுத்தம், அதில் விரயமான பணம் என்பவை பற்றி நன்கு அறிந்துவைத்துள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகள்- அபிவிருத்தி, புனரமைப்பு ஆகியவற்றுக்கு வேண்டிய உதவிகளை தாமே நேரடியாக வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.

இதன்காரணமாகவே வடக்கே விவசாய நடவடிக்கைகளுக்கு நெதர்லாந்து நேரடியாக உதவ முன்வந்திருப்பதைப்போல, வடபகுதியில் மின்சார விநியோகத்தை வழங்குவதற்கு பிரிட்டனும் நேரடியாகத் தலையிட்டு உதவ முன்வந்துள்ளது.



இந்நிலையில் முழு இலங்கைக்குமென 1997ம் ஆண்டுக்காக 86 கோடி டொலர்களை சந்திரிகா அரசாங்கம் எந்தவகையில் செலவிடப்போகின்றது என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்- நீதி, அரசியலமைப்பு ஆகிய அமைச்சுக்களுக்கே பொறுப்பாக இருக்கின்றார். ஆயினும் ஜனாதிபதியின் பொறுப்பிலுள்ள நிதி அமைச்சை பிரதி- நிதி அமைச்சராக இருந்து பேராசிரியர் பீரிஸ் கையாண்டுவருகிறார்.

1994ம் ஆண்டு பதவிக்கு வந்தபோது வெறுமையான திறைசேரியையே தாம் கையேற்றதாக ஜனாதிபதி சந்திரிகா அறிவித்திருந்தார்.

ஐ.தே.க. அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்தின் இறுதிக் காலகட்டத்தில் இருந்தபோது பொருந்தொகையான பணத்தை ஆயுத தளபாடங்களை வாங்குவதற்காக ஒதுக்கியிருந்தது. இந்த ஒதுக்கீடு தவிர திறைசேரியில் எவ்வித பணமும் அன்றிருக்கவில்லை.

ரஷ்யாவின் உக்ரேனின் ஆயுதத்தளபாடங்களையும், விமானங்களையும் வாங்குவதற்கு ஐ.தே.க. அரசு ஒதுக்கியிருந்த பொருந்தொகைப் பணத்தை சந்திரிகா அரசு இடைநிறுத்தியது.

அத்துடன் அழிவு நடவடிக்கைகளுக்கு பண ஒதுக்கீடுகளை மேற்கொள்ளத் தமது அரசாங்கம் தயாராக இல்லை எனவும் ஜனாதிபதி சந்திரிகா அன்று கூறியிருந்தார்.

ஆனால் 1995ம் ஆண்டின் நடுப்பகுதியில் சந்திரிகா அரசின் நிலைப்பாடு மாற்றங்கண்டது. ஆயுதக் கொள்வனவுக்காக இடைநிறுத்தப்பட்ட பணம், மீண்டும் ஆயுதங்களை நோக்கிச் செல்லலாயிற்று.

இன்றுவரை ஆயுதங்களின் கொள்வனவென்பது தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டே வருகிறது.

இந்த ஆயுதக் கொள்வனவிலும், அவற்றுக்கான ஆட்சேர்ப்பிலும் எப்போது பெரும் வெட்டு விழுகின்றதோ, அன்றே இலங்கையில் ஓர் ஆரோக்கியமான வளர்ச்சிக்கான பாதை தென்பட ஆரம்பிக்கும்.

இன்றைய வடக்கு-கிழக்கு யுத்தம் தேவையற்றது; அநாவசியமானதென்பதை பெரும்பாலான சிங்கள மக்களும் உணரத்தலைப்பட்டுள்ளனர். அதன் காரணமாகவே இராணுவத்தில் சேர்ந்துள்ள இளைஞர்கள் பலரும் இராணுவத்திலிருந்து தப்பிச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

இராணுவத்திலிருந்து தப்பிச் செல்ல ஆரம்பித்துள்ளமை என்பது யுத்தத்திலிருந்து அவர்கள் தப்ப விரும்புகிறார்களென்பதையே புலப்படுத்துகின்றது.

எனவே முழுநாடுமே யுத்தத்திலிருந்து தப்பி, அரசியல் தீர்வொன்றைக்காண வேண்டியதற்கான அணுகுமுறைகளைக் கூர்மைப்படுத்த வேண்டியதே ஆட்சியாளரின் தலையாய பணியாக இருக்கின்றது.

## அகதிகளின் பிரச்சனையில் அரசியல் விளையாட்டு

வவுனியா அகதி முகாம்களுக்கு அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கடந்தவாரம் சென்று வந்தனர்.

அமைச்சர்களோடு சென்ற எம்.பிக்களில் கூட்டணி, ஈ.பி.டி.பி., இ.தொ.கா. ஆகிய தமிழ் கட்சி எம்.பிக்களும் அடங்கியிருந்தனர்.

வன்னி மாவட்ட எம்.பிகளை அழைக்கவில்லை. முதல் அழைப்பே அவர்களுக்குத்தான் விடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இன விவகார நல்லிணக்க அமைச்சால்தான் தமிழ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இன விவகார நல்லிணக்க அமைச்சு வன்னி மாவட்ட எம்.பிகளை மட்டும் மறந்துவிட்டது. மறதியா அல்லது அலட்சியமா என்பது தெரியவில்லை.

எதுவாக இருந்தாலும் வவுனியாவில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்காக முதலில் குரல் கொடுத்து, போராட்டம் நடத்தியது புளொட் அமைப்புத்தான்.

அதுதவிர வவுனியா அகதி முகாம் நிலவரங்களை பார்வையிடச் சென்றமையின் நோக்கம்தான் என்ன?

அங்குள்ள பிரச்சனைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதற்காகவா, அல்லது அக்கறைப்படுவது போலக் காட்டிக்கொள்வதா?

பிரச்சனைகளைக் கண்டறிய விரும்பினால் வன்னி மாவட்ட எம்.பிகளையும் நிச்சயம் அழைத்திருக்க வேண்டும். அவர்களுக்குத்தான், இடம் பெயர்ந்த மக்கள் வவுனியா வந்தபின்னர் ஏற்பட்ட நிலவரம் குறித்து அதிகமான விபரங்கள் தெரிந்திருக்கும்.

அமைச்சர்களோடு சென்ற ஏனைய தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களாவது அதனைச் சுட்டிக்காட்டியிருக்கலாம்.

வவுனியாவுக்கு சென்று இறங்கியவுடனேயே அங்கிருந்து கொழும்புப் பத்திரிகைகளுக்கு தொலைபேசியில் செய்தி கொடுத்தார்களாம் எம்.பிக்கள் சிலர்.

“நாங்கள் இங்கே வந்து அகதி முகாம்களை அமைச்சர்களோடு பார்வையிட்டுக் கொண்டிருக்கிறோம். அழகாக செய்திபோட்டு விடுங்கள்,” என்று அன்பாகக் கூறிவிட்டார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உ. நீலன் திருச் செல்வம்தான் முன்னணியில் நின்றது போலவும் செய்திகள் வெளியாகி இருந்தன.

“என்ன இது, தமிழ் எம்.பிகள் பலர் சென்றிருந்தும் நீலன் திருச்செல்வம்தான் முன்னணியில் நின்றதுபோல செய்தி வந்திருக்கிறதே?” என்று மற்றொரு எம்.பியிடம் கேட்டதற்கு: “அவர்கள் வவுனியாவில் இருந்தே செய்தி கொடுத்துவிட்டார்கள். ஏனைய கட்சி எம்.பிகளின் பெயர்களை சொல்லாமல் விட்டுவிட்டார்கள்,” என்று பதில் கிடைத்தது.

இத்தனைக்கும் வவுனியா அகதிகள் நிலை குறித்து அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ பிள்ளேயிடம் முகத்துக்கு நேராக குறைசொன்னவர் இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர் யோகராஜன்தான்.

“இதை அகதிகள் முகாம் என்று எங்களுக்குச் சொல்லாதீர்கள். இது தடுப்பு முகாம்!” என்று தெரிவித்தார் யோகராஜன்.

யோகராஜன் தெரிவித்த கருத்துக்களால் அமைச்சர் பெர்னாண்டோபிள்ளே சூடாகி விட்டார். “இந்த முகாமுக்குள் புலிகளே இல்லை என்று உங்களால் உத்தரவாதம் தர முடியுமா?” என்று கேட்டிருக்கிறார்.

“என்னால் உத்தரவாதம் தரமுடியாமல் இருக்கலாம். ஆனால் இதை அகதிமுகாம் என்று சொல்ல முடியாது. இது ஒரு தடுப்பு முகாம் என்றுதான் சொல்கிறேன்!” என்றாராம் யோகராஜன்.

“சிறைகளில் இருப்பவர்களும் தம்மைக் குற்றவாளிகள் என்று சொல்வதில்லை. அதற்காக சிறைகளையெல்லாம் திறந்துவிடமுடியுமா?” என்று கேட்டாராம் அமைச்சர் பெர்னாண்டோ பிள்ளே.

அமைச்சர்களின் முகத்தை முறித்துக் கொள்வானேன், என்று ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அடக்கி வாசித்தார்கள்.

பிரச்சனைப்பட்டது யோகராஜன் எம்.பி. பத்திரிகைகள் மூலம் பெயரெடுத்தது வேறு யாரோ! இதுதான் அரசியல். சாதாரண பொதுமக்களுக்கு இதெல்லாம் புரியுமா என்ன?

வவுனியா அகதிகள் விடயமாக பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதமும் அரசியல் விளம்பரம் தேடும் முயற்சியாகவே முடிந்து போனது.



ஒரு மணி நேர விவாதம் கேட்டிருந்தது கூட்டணி. ஆனால் அரைமணிநேரம்தான் ஒதுக்கப்பட்டது. கூட்டணியினர் மீண்டும் வலியுறுத்தி கேட்காமல் இருந்து விட்டதால்தான் ஒரு மணி நேரம் அரைமணி நேரமாக குறைக்கப்பட்டதாம்.

ஒரு மணி நேர விவாதம் என்றால் ஏனைய தமிழ் கட்சி எம்.பிக்களும் உரையாற்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும். கூட்டணி மட்டுமே குரல் கொடுத்தது என்று உரிமைபாராட்ட முடியாது. எனவே அரைமணிநேர விவாதம் நடத்தப்பட்டமையும் கூட்டணிக்கு ஒருவகையில் இலாபம்தான்.

விவாதத்துக்கு பதில் அளித்தவர் அமைச்சர் அஷ்ரப்.

வவுனியா அகதிகள் எதிர்நோக்குவது உணவுப் பிரச்சனையல்ல; முகாம்களில் அடைபட்டுக் கிடக்கும் பிரச்சனை. அகதி முகாம்கள் தடுப்பு முகாம்களாக மாறிவிட்டதுதான் முக்கியமான பிரச்சனை.

அந்தப் பிரச்சனைக்கு பதில் சொல்ல வேண்டியவர் பிரதி பாதுகாப்பு அமைச்சர். ஆனால் அமைச்சர் அஷ்ரப்பை பதில் சொல்ல வைத்துவிட்டார்கள்.

கூட்டணியினர் அதனை ஆட்சேபித்திருக்கலாம். மூச்சே விடவில்லை. ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் எழுந்து “இது அமைச்சர் அஷ்ரப்புடன் தொடர்புடைய பிரச்சனையல்ல..” என்று சுட்டிக்காட்ட, அவருக்கு பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்படாமையால் “நீங்கள் அமருங்கள்!” என்றுவிட்டார் அவைத் தலைவர்.

மறுநாள் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தி- ‘ஜோசப் பரராஜசிங்கம் முழக்கம்!’ விவாதத்தின் பயன் அதுமட்டும்தான்!

‘எரிகிற வீட்டில் பிடுங்குவது இலாபம்’ என்ற நிலையில் அரசியல் கட்சிகள். நெருப்பு மட்டும் பற்றி எரிந்து கொண்டுதான் இருக்கிறது. அணைக்கப்போகிறோம் என்று சொல்லிக் கொண்டு செல்பவர்கள் நெருப்புக்கு முன்னால் நின்று புகைப்படம் எடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்பிவிட்டு வீட்டுக்குப் போய் விடுகிறார்கள்.



படிப்பகம்

# கொள்ளை ராணி

## பூலான்தேவி

தருவது 20 ரசிகன்

அம்மாவின் குரல் சட்டென்று அடங்கிவிட்டது. அய்யோ... அம்மாவுக்கு என்னாகியது? என்னால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை.

நான் குப்புறவிழுந்து கிடக்க என் முதுகின்மீது அந்த அதிகாரி ஏறிநின்று கொண்டிருந்தான்.

என் வேதனை, வலிகள் யாவும் கோபமாக ஒன்றுதிரள, என் உடலில் புதுப்பலம் வருவதை உணர்ந்தேன். நான் நம்பிக்கை இழக்கும்போதெல்லாம் எனக்குள் கேட்கும் அதே குரல் ஒலித்தது.

'பூலான் எழடி. பூலான் எழடி'.

அதன்பின்னர் நடந்ததெல்லாம் கனவில் நடப்பதுமாதிரித்தான் இருந்தது. நான் நானாக இல்லை. எனக்குள் இருந்து ஏதோ ஒரு சக்தி என்னை இயக்குவித்தது போலத்தான் இருந்தது.

"டேய்... நாய்மக்களே!" என்று கத்திக்கொண்டே நான் எழுந்த வேகத்தில், என் முதுகின் மேல் ஏறி நின்ற அதிகாரி, தடுமாறிப்போய் பிடரி தரையில் அடிபட மல்லாந்து விழுந்தான்.

"அம்... அம்மா.." என்று கூவிக்கொண்டே அம்மாவுக்கு அருகே ஓடினேன். அம்மா பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தாள். அப்பா தனது துண்டால் அம்மாவுக்கு விசிறிவிட்டுக்கொண்டு இருந்தார்.

அப்பா அழுது- ஒரு குழந்தைபோல விம்மி விம்மி அழுது இன்றுதான் பார்த்திருக்கிறேன்.

"அம்மாவுக்கு என்னாச்சப்பா?" என்று கேட்டுக்கொண்டிருக்க, என் கழுத்தில் கைவைத்து இழுத்தான் இன்ஸ்பெக்டர்.

"விடடா நாயே!"

"என்னடி சொன்னாய் வேசி மகளே?" என்று என் கன்னத்தில் அறைந்தான்.

கன்னத்தில் அறைந்ததும் கண்மண் தெரியாத கோபம் வந்தது எனக்கு.

"யாரடா வேசிமகள்? நீதான்டா வேசி மகன்.." என்று கத்திக்கொண்டே அவன் யூனிபோமை என் இரண்டு கைகளாலும் கொத்தாகப் பிடித்தபடி, என் தலையால் அவன் மார்பில் இடித்தேன்.

அவன் தன் கையால் என் தலை முடியைப் பிடித்து இழுக்க, நான் வலது காலை மடக்கி உயர்த்தி அவனது அடிவற்றின்கீழே "நாய் மவனே" என்று ஆத்திரம்தீரக் கத்தியபடி உதைத்தேன்.

"ய.. யம்மா.. யம்மாடீ!" என்று தனது அடிவற்றின்கீழே இரண்டு கைகளாலும் பொத்தியபடி அவன் மடங்கி அமர்ந்தான். அவனது முகம் வலி காரணமாக கோணல்மாணலாகியதைப் பார்க்க, அந்த வேளையிலும் எனக்கு சந்தோசமாக இருந்தது.

தரையில் விழுந்த அதிகாரி எப்போது எழுந்தான்? என்ன செய்தான் என்பதெல்லம் என் கண்களுக்குத் தெரியவில்லை.

ஆத்திரம் கண்ணை மறைக்கும். எனக்குள் கிளர்ந்தெழுந்து விசிறியடித்தது சாதாரண ஆத்திரமல்லவே; என்னைத் தடுக்க வந்த அப்பாவைக்கூட யார் என்று தெரியாமல் தள்ளிவிழுத்தி விட்டுத்தான் அந்த இன்ஸ்பெக்டருடன் சண்டை போட்டிருக்கிறேன்.

அந்தநேரத்தில் அந்த மேலதிகாரி எழுந்து ஓடிப்போய் நாலைந்து பொலிஸ் காரர்களை உதவிக்கு அழைத்து வந்து விட்டான்.

என்னை நாற்புறமும் சுற்றிவளைத்து நின்று குண்டாந்தடிகளால் அடித்த போதுதான், மேலதிகாரி எழுந்துபோய் பொலிஸ்காரர்களை கூட்டிவந்துவிட்டான் என்று தெரிந்தது.

"அடியுங்கடா.. அந்த சிறுக்கியை நார் நாராக கிழித்துப் போடுங்கடா.." என்று மேலதிகாரி கத்திக்கொண்டிருந்தான்.

என் இருபுறமும் தோள்பட்டைகளில் விண், விண் என்று வலிக்க அடித்துக் கொண்டிருந்தார்கள். முதுகுப்புறமாகவும் சளார் சளார் என்று அடித்தார்கள்.

என் வலதுபுறம் நின்று அடித்துக் கொண்டிருந்த பொலிஸ்காரனை நோக்கிப் பாய்ந்து கட்டிப் பிடித்துக்கொண்டேன்.

அவன் அதை எதிர்பார்க்கவில்லை. அவன் சற்றுக் குள்ளமாக இருந்தான். அதனால் அவனது தோள்பட்டையில் கடித்தேன். "கடிக்கிறாள்" என்று அவன் கத்த, என் முதுகில் அடிவிழுந்தது. என் முதுகுப் புறமாக இடுப்புப்பகுதிக்கு கீழே குண்டாந்தடியால் யாரோ ஒரு பொலிஸ்காரன் மோசமான ஒரு காரியம் செய்தான்.

தோள்பட்டையில் கடிபட்ட கழுதை என் ரவிக்கையை பிடித்துக் கிழித்தான். என்னை அவனிடமிருந்து இரண்டு பொலிஸ்காரர்கள் பிடுங்கி இழுத்தார்கள். அசைய முடியாமல் பிடித்துக் கொண்டார்கள்.

அப்பாவை இரண்டு பொலிஸ்காரர்கள் பிடித்திழுத்துக்கொண்டு வெளியே போனார்கள்.

நான் திமிறினேன். காறித்துப்பினேன். என்னைப் பிடித்துக்கொண்டு நின்றவர்கள் முகங்களில் எல்லாம் துப்பினேன். அருவருப்பால் முகம் சுளித்தாலும், என்னை விடாமல் பிடித்து வைத்திருந்தார்கள்.

"இந்தக் கிழவியை வெளியே தூக்கிப் போங்கடா. முகத்தில் தண்ணிபட்டால் கிழவி முழித்துவிடுவாள். வீட்டுக்கு துரத்திவிடு," என்றான் மேலதிகாரி.

அம்மா உயிரோடுதான் இருக்கிறாள் என்பது ஆறுதலாக இருந்தது. அம்மாவின் கால்களிலும், கைகளிலும் பிடித்து தூக்கிக் கொண்டு போனார்கள்.

**இதுவரை**

**போலிஸ் நிலையத்தில் மேலதிகாரியால் பூலான்தேவி கொடுமைப்படுத்தப்படுகிறாள். பூலானின் தாயும், தந்தையும் அதனைக் கண்டு துடிக்கிறார்கள். பூலானின் தாயார் மன்றாடுகிறாள்.**

**இனி........**

'அய்யோ அம்மா உனக்கா இந்தக் கதி? எல்லாம் என்னால்தானே. என்னை நீ பெற்றதால்தானே!' எனக்கு அழுகை வரும்போல இருந்தது. கட்டுப்படுத்தினேன். அழுதால் இந்த கழிசடைகள் கைகொட்டிச் சிரிப்பார்கள்.

"அவள் வாய்க்குள் துணியைவைத்து அடையடா!" மேலதிகாரியின் கண்கள் வேட்டை நாயின் கண்கள்போல தெரிந்தன. அவன் சொன்னதை செய்தார்கள்.

"இரண்டு கைகளையும் பின்னால் பிணைத்துக் கட்டுங்கடா!" நான் திமிறத் திமிற ஒரு கயிற்றால் கட்டினார்கள்.

ஒரு கெட்ட வார்த்தையைச் சொல்லிவிட்டு, "அவள் கால்களையும்" கட்டுங்கடா என்றான் அந்தப் பன்றி மகன்.

மீசைதான் பெரிதாக வைத்திருக்கிறான். பயந்தாங்கொள்ளி. ஒரு பெண்ணிடம் எப்படியெல்லாம் பயப்படுகிறான்.

எதிர்ப்புக்காட்டவே வழியில்லாமல் செய்துவிட்டுத்தான் என்னிடம் நெருங்கி வந்தான் அந்த மேலதிகாரி. நான் விழுந்துவிடாமல் இருக்க ஒருபுறம் இன்ஸ்பெக்டரும், மறுபுறத்தில் ஒரு பொலிஸ்காரனும் பிடித்துக்கொண்டு நின்றார்கள்.

என் தாடையைத் தொட்டு நிமிர்த்தினான். "இப்போது என்னடி செய்வாய் கண்ணு? துப்புவியா? துள்ளுவியா? கத்துவியா? ஒன்றும் பண்ணமுடியாது!" கிழிந்திருந்த ரவிக்கையை முழுதாகக் கிழித்து கழற்றி வீசினான்.

என் சேலையை இழுத்து ஒரு மூலையில் குப்பையாக வீசினான்.

அய்யோ... அந்த நேரத்தில் என் உடம்பெல்லாம் கூசிக் குறுகி; என்னை அவமானம் பிடுங்கித்தின்றது.

திமிறிப்பார்த்தேன். என் டலமெல்லாம் திரட்டி உடம்பைப்போட்டு உலுக்கினேன்.

'அடியே துர்க்கையம்மா! நீயும் ஒரு பெண்தானே! இந்தப் பாவிகளின் கைகளை இயங்காமல் செய்யக்கூடாதா? எத்தனை தடவை உன்கோவிலுக்கு நடையாய் நடந்து வந்தேனம்மா..'

என் இடுப்புக்கு மேலே பொட்டுத் துணிகூட இல்லாமல் நின்றேன். இவன்- இந்த அதிகாரி ஒரு தாய்க்குப் பிறந்தானோ, நாய்க்குப் பிறந்தானோ நான் அறியேன்.

"கண்களால் முறைக்கிறாள் பார்! எரித்து விடுவாளாக்கும்!" கெக்கட்டம் போட்டுச் சிரித்தான்.

"இன்ஸ்பெக்டருக்கு அடித்தாயல்லவா? இப்போது அதே இடத்தில் உனக்கு நான் அடிக்கிறேன் பார்!"

தன் முழங்காலால் என் கால்களுக்கு இடையே- இடுப்புக்கு கீழே உதைத்தான்.

அய்யோ.. கத்தவும் முடியவில்லை. அழவும் முடியவில்லை. உயிர் போய் வந்தது.

"வலிக்கிறதா கண்ணு! பொலிஸ்காரனுடன் விளையாடக்கூடாது தெரியுமோ? வலிக்கிறதா பார்ப்போம்.." என்று கேட்டுக்கொண்டே தன் கைகளால்... சே.. இவன் மனிதப்பிறவியாய் இருக்கவே முடியாது.

பொலிஸ்காரர்களும், இன்ஸ்பெக்டரும் தமது மேலதிகாரியின் கழிசடைக் காரியங்களை கண்கொட்டாமல் இரசித்துக் கொண்டிருந்தார்கள்.

என் கைகளையும், கால்களையும் மட்டும் கட்டிப்போடாமல் இருந்திருந்தால், உண்மையாகச் சொல்கிறேன், ஒன்றில் நான் அடிபட்டுச் செத்திருப்பேன், அல்லது அந்த மேலதிகாரியின் குரல்வளையை என் கைகளாலும், பற்களாலும் திருகியும், கடித்தும் கொன்றிருப்பேன்.

என் கழுத்தில் தன் கைகளால் தொட்டுத் தடவினான். கழுத்து நரம்பில் விரல்களால் கோடுபோட்டுச் சிரித்தான். மெல்ல மெல்ல தன் கைகளை கீழே இறக்கிக் கொண்டு என்னைப் பார்த்து கண்களைச் சிமிட்டினான். மனதுக்குள் காறி உமிழ்ந்தேன்.

வலி.. வலி பயங்கரவலி. வேண்டுமென்றே வலிக்கச்செய்து, என் கண்கள் வலியால் துடிப்பதை கூர்ந்து பார்த்து ரசித்தான்.

என்னென்ன கீழ்த்தரமான வார்த்தைகள் உண்டோ அத்தனையும் சொல்லிச் சொல்லிச் சிரித்தான். அவனோடு சேர்ந்து அந்த இன்ஸ்பெக்டரும் சிரித்தான்.

பொலிஸ்காரர்கள் சிரிக்கவில்லை. என் துணியில்லாத மேல் உடம்பையே வெட்கம் இல்லாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"நீயும் தொட்டுப் பாரேன்!" என்றான் அந்த இன்ஸ்பெக்டரிடம். இன்ஸ்பெக்டர் இளித்தான். மேலதிகாரி முன்பாக என்னைத் தொடவிரும்பவில்லைப் போலும்! இளிப்பதோடு நிறுத்திக் கொண்டான்.

திடீரென்று வெறிவந்தவன்போல அந்த மேலதிகாரி என் கன்னத்தில் மாறி மாறி அறைந்தான். கழுத்தைப் பிடித்து நெரிக்கத் தொடங்கினான்.

அவன் செய்கை ஒவ்வொன்றும் பைத்தியம் பிடித்தவன் செயல்போல இருந்தது. நாய்க்கு விசர்பிடித்தால் எங்கள் கிராமத்தில் கல்லால் அடித்தே கொன்றுவிடுவார்கள்.

இவனை யார்தான் கொல்லுவது? இவனும் விசர்பிடித்த நாய்தான்! இந்த நாயை நான் ஒருநாள் அடித்தே கொல்லத்தான் போகிறேன்.

கழுத்தைத் திருகியவன் சட்டென்று தன் கைகளை விலக்கிக்கொண்டு, என்னை தன்னோடு சேர்த்து இறுக்கமாக அணைத்துக் கொண்டான். என் கன்னத்தில், கழுத்தில், கழுத்துக்கீழே என்று ஆவேசம் வந்தவன்போல் பற்களால் கடித்தான். சட்டென்று நிமிர்ந்து என் கண்களைப் பார்த்துவிட்டு, ஆவேசம் அடங்கியவனைப் போல என் நெஞ்சில் கைகளை வைத்து பின்னால் தள்ளிவிட்டான்.



பூலான்

அப்படியே மல்லாக்கத் தரையில் விழுந்தேன்.

அவன் ஒரு கையாலாகாத பேடிக் கழுதை. அவனது வெறி அத்தோடு தீர்ந்து போய்விட்டது. அவனது ஆசையெல்லாம் அத்தோடு வடிந்து போனது. அதற்கு மேல் அவனால் எதுவும் செய்ய முடியாது. வேகம் அடங்கிப்போனது.

கீழே விழுந்துகிடந்த என்னைக் குனிந்து பார்த்து, "இது போதுமடி உனக்கு, உன் நெஞ்சைப் பார்க்கும்போதெல்லாம் என் முகம் உனக்கு நினைவுக்கு வரும். காயம் மாறினாலும், தழும்பு போகாதடி.- பற்தழும்பு! நீ சாகும்வரை உன்னோடு இருக்குமடி.. அந்தச் சேலையைக் கொண்டுவந்து கொடுங்கடா. அசிங்கமாய் இருக்கிறாள் கழுதை."

அவன் வேகம், வெறி வடிந்தவுடன் நான் அசிங்கமாகத் தெரிகிறேனாம். சே.. பேடிப் பயல்!

என் கட்டுக்களை அவிழ்க்காமல், சேலையால் என் உம்பைச் சுற்றிமூடிவிட்டு, சிறைக் கூண்டுக்குள் போட்டு பூட்டிவிட்டார்கள்.

பூட்டுவதற்கு முன்னாள் என்வாயில் திணித்திருந்த துணியை இழுத்தெடுத்தார்கள். அதுவரை அடக்கிவைத்த ஆத்திரம் தீர,

"நீங்கள் ஆம்பிளைகளாடா நாய்களே!" என்று கத்தினேன். 'நச்' என்று வயிற்றில் உதைத்தான் ஒருத்தன். எனக்குப் பொறி கலங்கியது. சரிந்து சுவரோடு மடங்கினேன்.

அன்று முழுக்க வாயில் பச்சைத் தண்ணிகூடப் படவில்லை. பசி வயிற்றைக் குடைந்தது. "இதுதான் கடைசித் தடவை. பொலிஸ்காரர்கள் கையில் இனி நான் சிக்கப்போவதில்லை. இங்கே நான் ஒருவாய் சாப்பாடுகூட சாப்பிடப்போவதில்லை. என்ன நடக்கப்போகிறது என்று இரண்டிலொன்று பார்த்துவிட வேண்டியதுதான்." என்று உறுதி செய்துகொண்டேன்.

ஒரு பொலிஸ்காரன் துப்பாக்கியோடு சிறைக்கூண்டைக் கடந்துபோனான்.

'இந்தத் துப்பாக்கி என் கையில் இருந்தால்... இருக்கும், ஒரு நாள் நிச்சயம் இருக்கும்..' நினைக்க நினைக்க மனதில் வன்மம் திரண்டது.

என் கூண்டைக் கடந்து திரும்பிச் செல்லும்போது அந்தப் பொலிஸ்காரன் தாமதித்து நின்று "ஏய் குட்டி உனக்கு ஏதாவது தேவையா?" என்றான்.

நான் கேட்டேன்:

"உன் துப்பாக்கியைத் தருகிறாயா?

அவன் சிரித்துவிட்டான். ஒரு நாள் அவர்களது குடும்பமெல்லாம் என்னால் அழப்போவது தெரியாமல் சிரித்தான்.

(தொடர்ந்து வரும்)

# திருமண வரவேற்பில் கண்டனக் குரல்கள்!

## அசார்-சங்கீதா தம்பதிகள்

இறுதியில் எல்லாம் உண்மையாகி விட்டது. அசாருதீனும், சங்கீதா பிஜ்லானியும் திருமணம் செய்துகொண்டுவிட்டனர்.

நவம்பர் 14ம் திகதி இஸ்லாமிய முறைப்படி திருமணம் நடைபெற்றது. 14ம் திகதி நடந்த திருமணம் இரகசியமாக வைக்கப்பட்டு நவம்பர் 16ம் திகதிதான் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது.

சங்கீதா தனது பெயரை ஆயிஷா என்று மாற்றிக்கொண்டார். திருமணத்திற்கு முன்னர் சங்கீதா முஸ்லிமாக மாறும் சடங்குகள் நடைபெற்றன.

அசாருதீனின் சொந்த இடமான ஐதராபாத்தில்தான் திருமணம் நடைபெற்றது. அங்கேயே திருமண வரவேற்பு விழாவை நடத்தினால் ஏதாவது பிரச்சனையாகிவிடும் என்று மும்பாயில்தான் வரவேற்பு விழா நடந்தது.

மும்பாயில் உள்ள 'தாஜ் சமுத்திரா ஹோட்ட'லில் திருமண வரவேற்பு விழா நடந்துகொண்டிருக்க, ஹோட்டலின் முன்பாக நூற்றுக்கணக்கானோர் திரண்டு கண்டனக் குரல் எழுப்பிக்கொண்டிருந்தனர்.

'முஸ்லிம் சத்ய சோதக் மண்டல்' என்னும் அமைப்பினர் தான்-போராட்டம் நடத்தினார்கள். கண்டனக்குரலை காதில் வாங்கிக் கொண்டே விருந்தினர்களுடன் கைகுலுக்கிக் கொண்டிருந்தார் அசாருதீன்.

பொலிசார் வந்து ஆர்ப்பாட்டக்காரர்களை கைதுசெய்தனர். கிட்டத்தட்ட 45 நிமிஷங்கள் தொண்டைத் தண்ணீர் வற்றும் வரை கண்டனக்குரல் எழுப்பிவிட்டுத்தான் கைதானார்கள்.

திருமண வரவேற்பில் முக்கிய புள்ளிகள் மறக்காமல் ஆஜராகியிருந்தனர்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் துங்கார்பூர், அனில் கும்ளே, ஸ்ரீநாத், ராகுல் திராவிட், ஜடேஜா, மோங்கியா, ரொபின் சிங் ஆகியோர் உட்பட கிரிக்கெட் உலக முன்னணிவீரர்கள் ஆஜராகியிருந்தனர்.

அசாருதீனை கப்டன் பதவியில் இருந்து தூக்கவேண்டும் என்று ஓயாமல் நச்சரித்துக் கொண்டிருந்த முன்னாள் கப்டன் கவாஸ்கரும் வரவேற்பு விழாவில் கலந்துகொண்டார். கப்டன் டெண்டுல்கர் மட்டும் காணப்படவில்லை.

அசாருதீனின் முன்னாள் மனைவி நவ்ரீனுக்கு ஆதரவாகப் பேசிக்கொண்டிருந்த அசாருதீனின் தாயாரும், தந்தையும் இப்போது சமாதானமாகிவிட்டார்கள். திருமண நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தம்பதியினரை வாழ்த்திவிட்டு திரும்பினார்கள்.

இப்போது நவ்ரீனும் அவரது இரண்டு



பிள்ளைகளும்தான் அசாருதீனை விட்டு விலகியிருக்கின்றனர். தனது பெற்றோர் வீட்டுக்குச் சென்றுவிட்டார் நவ்ரீன்.

சங்கீதா வீட்டிலும் பச்சைக்கொடிதான். சங்கீதாவின் அண்ணன் சுனில் பிஜ்லானியும் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

மொடல் அழகியாக ஆரம்பித்து, நடிகையாக மாறியவர் சங்கீதா. திருமணத்தின் பின்னர் நடிப்புக்கு முழுக்குத்தான்.

அசார் வாழ்க்கையில் வீசிய புயல் ஓய்ந்துவிட்டது. இனிமேல் பந்துகளை ஒரு வழி பண்ணி அசத்துகிறாரா பார்க்கலாம்!

# இம்ரான்கானின் புதிய பந்துவீச்சு!

பாகிஸ்தானிலும் முன்னாள் கப்டன் இம்ரான்கான் தன் அதிவேகப் பந்துவீச்சை ஆரம்பித்துவிட்டார் போலத்தான் தெரிகிறது. அவரது குறி எந்த அழகியின் இதயமுமல்ல; பாகிஸ்தானின் பிரதமர் பதவி.

இம்ரான்கான் தனது அரசியல் பந்துவீச்சில் வெற்றி பெற வேண்டுமானால் இரண்டு பேரை 'கிளீன் போல்ட்' டாக்க வேண்டும்.



ஒருவர் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ. இன்னொருவர் எதிர்கட்சித் தலைவர் நவாஸ் செரீப். இந்த ஆட்டத்திற்கு நடுவர் பாகிஸ்தான் ஜனாதிபதிதான்.

இம்ரான்கான் பந்து வீசி அவுட் செய்யும் அவசியமே இல்லாமல், பெனாசிரையும் நவாஸ் ஷெரீப்பையும் களத்தில் இருந்து ஜனாதிபதி- வெளியேற்றி விடலாம்.

'ஊழல் குற்றச்சாட்டு இருப்பவர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதி இல்லை' என்று சட்டம் கொண்டுவருவது மூலம் இம்ரான்கானின் வேலையை ஜனாதிபதி சுலபமாக்கி விடலாம்.

'தெரிக்-இ-இன்சாட்' என்னும் கட்சியை ஆரம்பித்துள்ளார் இம்ரான்கான். தனது கட்சி பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் என்றும் அறிவித்துள்ளார் இம்ரான்கான்.

ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற நிலை இருக்குமானால் 'இம்ரான்கான் படுத்துக்கொண்டே ஜெயிக்கலாம்' என்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள். ஏனெனில் தற்போதுள்ள பாகிஸ்தான் அரசியல் வாதிகளில் 60 வீதமானோர் போட்டியிடவே முடியாமல் போய்விடும்.

அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி பாகிஸ்தான் பொதுத் தேர்தல் நடக்கவிருக்கிறது.

இம்ரான்கான் ஜெயித்தால் பிரதமராகும் முதலாவது கிரிக்கெட் வீரர் என்ற பெருமையும் அவரையே சேரும். தற்போதைய நிலையில் இம்ரான்கான் பக்கம்தான் அதிர்ஷ்டக்காற்று வீசுகிறது. அது தொடர்வதும், திசைமாறுவதும் பாகிஸ்தான் ஜனாதிபதியின் கையில்தான் இருக்கிறது.

# ஜோராக நடந்த அழகிப் போட்டி

மிரட்டல்கள் யாவும் பொசுக்கென்று போய்விட்டன. பெங்களூரில் படு ஜோராக உலக அழகிப்போட்டியை நடத்திமுடித்து விட்டார்கள்.



சமூக சேவைக்கு உதவி என்று கூறப்பட்டாலும், கமலஹாசன் சொன்னது மாதிரி அழகிப்போட்டியும் ஒரு வியாபாரம்தான்.

வியாபாரம் செழிக்க விளம்பரம் தேவை. அழகிப் போட்டிக்கு எதிரான கண்டனங்களும், மிரட்டல்களும் இலவச விளம்பரமாக அமைந்துவிட்டன.

அழகிப்போட்டிக்கு சவாலாக 'அரக்கிகள்' போட்டியெல்லாம் நடத்தப்பட்டது. முகங்களில் கரி அப்பிக்கொண்டு பெண்கள் அமைப்பினர் போராட்டம் நடத்தினார்கள். 'நல்ல கூத்துத்தான்' என்று பொதுமக்கள் வேடிக்கை பார்த்தார்களே தவிர, ஆதரவு காட்டவில்லை.

தற்போதைய சினிமாப் படங்களில் இடம் பெறும் ஒரு காதல் பாடல் காட்சியில் நடிகைகள் வெளிப்படுத்துவதைவிட மேலதிகமாக என்ன காட்டப்போகிறார்கள்? உடம்பைக் காட்டக் கூடாது என்றால் தியேட்டர்களில் படங்கள் காண்பிக்கவும் விடக்கூடாதே என்று சொல்கிறார்கள் அழகிப் போட்டி ஆதரவாளர்கள்.

அது மட்டுமா, இந்தியாவில் நகருக்கு நகர் உள்ளூர் அழகிப் போட்டிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மொடல் அழகிகளின் அணிவகுப்புக்கள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. மும்பாயில் விபச்சாரம் கொடிகட்டிப் பறக்கிறது. இதெல்லாம் பெண்கள் அமைப்புக்களின் கண்களில் படவில்லையாக்கும்.

பெங்களூரில்தான் அழகிப் போட்டி. ஆனால் மதுரையில் ஒரு இளைஞர் தீக்குளித்து செத்து விட்டதாகப் பத்திரிகைகளில் பரபரப்புச் செய்தி வந்தது. இத்தனைக்கும் மதுரையிலும் 'மிஸ் மதுரைப் போட்டி' நடந்தது. அப்போது இந்த இளைஞர் எங்கே போனார்?

விசாரித்ததில் கிடைத்த திடுக்கிடும் தகவல் என்ன தெரியுமா? மதுவெறியில் ஏதோ சொந்தத் தகராறு காரணமாக அவர் தீக்குளித்து செத்துப்போக, யாரோ குறும்பர்கள் கட்டிவிட்ட கதைதான் அது. இந்திய பத்திரிகைகளும் அதனை பரபரப்புச் செய்திக்காக வெளியிட்டுத் தொலைத்து விட்டன.

ஆனால் 'தீக்குளிப்போம்' என்று மிரட்டிய பெண்கள் அமைப்பினர் மட்டும் தீக்குளிக்கவேயில்லை. அழகிகள்தான் பார்வையாளர்களின் ஜொள் மழையில் குளித்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## மொத்தமாய் எத்தனை?

இப் புகைப்படம் எடுக்கப்பட்டது அமெரிக்காவில் உள்ள ஒரு தொலைபேசிக் கூண்டில். அங்கும் தொலைபேசிக்கு அடிபிடிதானா என்று ஆச்சரியமாக இருக்கிறதல்லவா. உங்கள் ஆச்சரியத்தை உதறிப் போடுங்கள். இது ஒரு சாதனை முயற்சி.

ஒரு தொலைபேசிக் கூண்டுக்குள் அதிகபட்சம் எத்தனை பேரை உள்ளே திணிக்க முடியும் என்பதுதான் போட்டி. 22 பேரை மட்டுமே செருக முடிந்தது. அதனால் இந்த சாதனை முயற்சி தோல்வியாகிவிட்டது. ஒரு தொலைபேசிக் கூண்டுக்குள் 34 பேரைச் செருகி ஏற்கனவே ஒரு உலக சாதனை படைக்கப்பட்டிருக்கிறது. அதனை முறியடிக்க இவர்களால் முடியவில்லை.

நம்நாட்டு மினிபஸ்காரர்களிடம் வந்து இவர்கள் ஆலோசனை கேட்டிருந்தால் உதவியாக இருந்திருக்கும். 30 பேர் என்ன 60 பேரையே திணிக்க ஐடியா கொடுத்திருப்பார்கள்.




## செலவில்லாத பிரபலம்

'புன்னகை மன்னன்' படத்தில் கமலும், ரேகாவும் மலை உச்சியில் நின்று முத்தமிட்டுவிட்டுத் தற்கொலைக்குத் தயாராவார்கள். அதுபோல ஒரு காட்சியாக்கும் இதுவும் என்று நினைத்துவிடாதீர்கள்.

அமெரிக்காவைச் சேர்ந்த காதல் ஜோடிகள் இருவருக்கு தங்கள் திருமணச் செய்தியை உலகறியச் செய்யும் ஆசை. ஜெயலலிதா வீட்டுத் திருமணம் போல செய்யுமளவுக்கு பண அருமை தெரியாதவர்களல்ல. அதனால் செலவில்லாத ஆனால் பர பரப்பான திருமணம் செய்ய அட்டகாசமான திட்டம் போட்டார்கள். அமெரிக்காவில் ஒஹையோ என்ற இடத்திலுள்ள உயரமான கொடிக்கம்பத்தில் ஏறி மோதிரம் மாற்றிக்கொண்டார்கள். அது முடிந்ததும் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்க படு தீவிரமாக முத்தமிடத் தொடங்கினார்கள்.

எதிர்பார்த்ததுபோலவே பத்திரிகைகளில் காதல் ஜோடியின் வித்தியாசத் திருமணச் செய்திகள் படத்தோடு வெளியாகின. ஆபூர்வ புகைப்படங்கள் என்னும் தொகுப்பிலும் இப் புகைப்படம் இடம் பெற்றுள்ளது.

திருமணம் மட்டுமல்ல, இருவரது மனங்களும்கூட சந்தோச உச்சியில்தான் இருக்கின்றன என்பது புகைப்படக்காட்சியைப் பார்க்கும்போது தெரிகிறதல்லவா.



## பொய் சொல்வதில் மன்னன்



பொய்களைத் தாராளமாக உபயோகிப்பவர்களை கோயபல்ஸ் என்று அழைக்கிறோம். ஜெர்மனியில் ஹிட்லரின் வலதுகரமாக இருந்தவன் கோயபல்ஸ். ஒரே பொய்யை மீண்டும் மீண்டும் சொன்னால் உண்மையாகிவிடும் என்பதுதான் கோயபல்ஸின் தத்துவம். ஜெர்மன் மக்களிடம் யுத்தவெறியை ஏற்படுத்தியதும் கோயபல்ஸின் பிரசாரம்தான்.

புகைப்படத்திற்கு என்னமாய் போஸ் கொடுக்கிறான் பாருங்கள். விளம்பரம் தேடுவதிலும் பொய்யர்களுக்கு விருப்பம் அதிகம் என்பதற்கும் கோயபல்ஸ் ஒரு உதாரணம். யாரோ ஒரு அதிகாரி ஏதோ கேட்கிறார். ஆனால் கோயபல்ஸ் காதில் அது விழவில்லை. கமராவைத்தான் பார்க்கிறான்.

இன்னொரு விஷயம், கோயபல்ஸின் உண்மைப் பெயர் கெப்பல்ஸ். ஆனால் கோயபல்ஸ் என்று தவறாக உச்சரிக்கப்பட்டு, அதுவே அவன் பெயராக நிலைத்துவிட்டது.

ஒரு பொய்யை பத்து முறை சொன்னால் உண்மையாகி விடும் என்று நம்பினான் கோயபல்ஸ். அவன் பெயரை மற்றவர்கள் பிழையாக பல முறை உச்சரித்து அதனையே அவனது பெயராக்கி விட்டனர். தன் வினை தன்னைச் சுடும் என்பது சரிதானே!

**தகவல் பெட்டி**

## மரணம் அது வானத்து மேலே

நம்நாட்டில் வடக்கு-கிழக்கின் ஏதோ ஒரு பகுதியில் எடுக்கப்பட்ட புகைப்படமல்ல இது. இரண்டாம் உலக யுத்தத்தின்போது இலண்டனில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. ஜெர்மன் யுத்த விமானங்கள் ஈவிரக்கமில்லாமல் பொழிந்த குண்டுமழையில் இலண்டன் நகரமே இடிந்து நொறுங்கியது. பதுங்குகுழியொன்றுக்குள் தஞ்சமடைந்து பயத்தோடு வானத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் சிறுவர் சிறுமியர்.

இப்புகைப்படம் ஜான்டோபாம் என்பவரால் எடுக்கப்பட்டது.

இளம் கன்றுகளின் முகத்தில் பயம் பாதி, என்ன நடக்கிறது என்று பார்க்கும் ஆர்வம் மீதி. இரண்டு உணர்ச்சிகளும் தத்ரூபமாக படமாகியுள்ளன. குண்டுவீச்சக் கொடுமையை விளக்கும் அரிய புகைப்படம் இது. விளக்கி என்ன பயன்? குண்டுவீச்சுக்கள் ஒழிந்தா போயின?



## சிறுவனை விழுங்கிய பாம்பு



காரினும் மகன் டெரெக்கும் தப்பியது தம்பிரான் புண்ணியம்.

அமெரிக்காவில் கலிபோர்னியாவில் நடைபெற்ற சம்பவம் ஒன்று மெய்சிலிர்க்க வைத்துவிட்டது.

காரின் என்னும் பெண்மணி தனது வீட்டில் செல்லமாக நாலு மலைப்பாம்புகளை வளர்த்து வந்தார். காரினுக்கு டெரெக் என்னும் 5 வயது மகன் இருக்கிறான். மலைப்பாம்புகள் இருக்கும் அறைக்குள் அவனைச் செல்லவிடமாட்டார் காரின்.

ஒருநாள் காரின் பாத்ரூமில் குளித்துக்கொண்டிருந்தபோது, டெரெக் நைசாக எழுந்துபோய் மலைப்பாம்பு இருந்த அறையை திறந்துவிட்டான்.



அறைக்குள் இருந்த 12 அடி நீளமான மலைப்பாம்புக்கு குழந்தையைக் கண்டதும் குசி வந்துவிட்டது. குழந்தையை இழுத்து சுற்றிவளைத்து பின்னத் தொடங்கியது.

பாத்ரூமிலிருந்து வெளியே வந்த காரின் குழந்தையைக் காணவில்லையே என்று தேடிப் பார்த்தபோது அந்தக் காட்சி கண்ணில் பட்டது. குழந்தையின் தலையை விழுங்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தது மலைப் பாம்பு.

வேறு யாராவது என்றால் மயக்கம் போட்டு விழுந்திருப்பார்கள். காரின் துணிச்சலாக ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு மலைப் பாம்பு மீது பாய்ந்து சதக் சதக் என்று குத்தினார். வலி தாங்காமல் குழந்தையைப் போட்டு விட்டு, காரின்மீது பாய்ந்து கடித்தது மலைப் பாம்பு. அதற்கிடையே காரின் போட்ட கூச்சலில் அயலவர்கள் வந்து விட்டனர். காரின் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு உயிர்தப்பினார். பொலிசார் வந்து நாலு மலைப் பாம்புகளையும் பிடித்துக் கொண்டு போனார்கள்.

தாயும் குழந்தையும் தப்பியது தம்பிரான் புண்ணியம்தான்.

காரினுக்கு 24 வயது. "இனிமேல் பயங்கரமான பிராணிகளிடம் பரிவே காட்டமாட்டேன்" என்கிறார் காரின்.

தெரியாமலா நம்மூரில் "பாம்புக்கு பால் வார்க்காதே" என்று படித்து படித்துச் சொல்லிவைத்திருக்கிறார்கள்.



## அந்தச் சில நொடிகள்

1948ல் இப் புகைப்படம் எடுக்கப்பட்டது. ஜப்பானில் உள்ள ஃபூகூய் என்ற பகுதியில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தில் ஒரு பெரிய கட்டிடம் மல்லாக்கச் சரிந்துகொண்டிருக்கிறது. எங்கே கட்டிட இடிபாட்டில் சிக்கிவிடுவோமோ என்று எல்லோரும் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்க, கார்ல் மைக்டேன்ஸ் என்னும் புகைப்படப் பிடிப்பாளர் மட்டும், தன் உயிரைப் பற்றிக் கவலையே படவில்லை. தவறவிட்டால் இந்த அரிய காட்சி மீண்டும் கிடைக்காது என்பதால், உயிரைப் பணயம் வைத்து இப் புகைப்படத்தை எடுத்துவிட்டார்.

ஒரு மாபெரும் அழிவின் நொடிகளை காட்டும் இப் புகைப்படம் உலக சாதனைப் புகைப்படமாக அழியாத இடம் பெற்றுவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

## மதுபாலாவை ஓரம் கட்டிய ஷில்பா

'மிஸ்டர் ரோமியோ' வெளியாகிவிட்டது. படத்தில் பிரமாண்டமான சமாச்சாரங்கள் மூன்று. 1.கம்யூட்டர் கிராபிக்ஸ் தொழில் நுட்பம் 2.பிரபுதேவாவின் நடனம். 3.ஷில்பாஷெட்டியின் அழகான உடல்கட்டு.

மதுபாலாவும் துணிக்குறைப்பிலும், தாராளமான நடிப்பிலும் ஷில்பாவுடன் போட்டி நடத்தியிருக்கிறார். ஆனாலும் ஷில்பாதான் ஜொள்ளுப்பிரியர்களின் அமோகமான வாக்குகளை அள்ளிக்கொண்டு போகிறார். ஷில்பாவின் அழகான தொப்புளை அடிக்கடி குளோசப்பில் காட்டி புண்ணியம் சேர்க்கிறார் ஒளிப்பதிவாளர். மதுபாலாதான் படத்தைப் பார்த்துவிட்டு கவலைப் பட்டிருப்பார். "ஒரு தொப்புளை வைத்தே என்னை ஓரம் கட்டிவிட்டாளேபாவி" என்று வருத்தப்பட்டிருப்பார்.

இரட்டை வேடத்தில் பிரபுதேவா. நகைச்சுவை, ஆட்டம், பாட்டம், சண்டை என்று புகுந்துவிளையாடியிருக்கிறார். பாடல் காட்சிகளில் படு துணிச்சலாய் முன்னேறியிருக்கிறார். "பிரபுதேவா கூச்ச சுபாவம் உள்ளவர்" என்று ஷில்பா ஷெட்டி ஒரு பேட்டியில் சொல்லியிருந்தது பச்சைப் பொய் என்பது பளிச், பளிச்.

'காதலன்' படத்தின் பின்னர் பிரபுதேவாவுக்கு மற்றொரு பிரமாண்டமான படம் 'மிஸ்டர் ரோமியோ.'

'மிஸ்டர் ரோமியோ' ஹிட்டானால் 'மின்சாரக் கனவு' விரைவில் திரைக்கு வரும். பிரபுதேவாவின் மார்க்கெட்டும் மின்சார வேகம் பிடிக்கும்.

## 'ஜாலி'யில் குஷ்பு

'புதுவசந்தம்', 'நாட்டாமை', 'சுந்தர புருஷன்', 'மிஸ்டர் ரோமியோ' உட்பட பல பிரமாண்டமான படங்களை தயாரித்தது சூப்பர் குட் பிலிம்ஸ்.

அந்த பட நிறுவனத்தின் புதிய படத்திற்கு 'ஜாலி' என்று பெயர் சூட்டியுள்ளனர். கதாநாயகனாக அப்பாஸ் நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக சாக்ஷி நடிக்கிறார். புதையல் படத்தில் மம்முட்டியின் ஜோடியாக நடிப்பவர் சாக்ஷி. இன்னொரு கதாநாயகியாக புதுமுகம் ஒருவரை நடிக்க வைக்கப்போகிறார்கள்.

லிவிங்ஸ்டன் கவுரவ வேடத்தில் நடிக்க, அவருக்கு ஜோடியாக குஷ்பு நடிக்கிறார். கல்லூரிப் பேராசிரியை வேடம் குஷ்புவுக்கு. ஷிவாஸ் என்னும் புதிய இசையமைப்பாளரும் 'ஜாலி' படம் மூலம் அறிமுகமாகிறார்.

'அபிராமி', 'சின்னமேடம்' ஆகிய படங்களை இயக்கிய திலிப்குமார் 'ஜாலி' படத்தை இயக்குகிறார்.

கல்லூரி வாழ்க்கையில் ஏற்படும் ஜாலியான சம்பவங்கள்தான் கதை.

## காதோடு சொல்...

நடனமாடும் விசித்ர நடிகைக்கு வெளிநா... விசேஷ அழைப்பு வந்ததாம். தனது நட... பறந்து போனாராம் நடிகை. அங்கேயுள்ள பிர... சிலருக்கு அமோகமான கலைச் சேவை வழங்... வோடு காத்திருந்தாராம் நடிகை. வழிச்செல... கொடுத்து அனுப்பிவிட்டார்களாம். பெரும்... பார்த்துப் போனவர்கள் வாடிப்போய் திரும்பின... யார் கூப்பிட்டாலும் நதிமூலம், ரிஷிமூலம் அறிய... என்ற முடிவோடு இருக்கிறார் 'விசித்ர' நடி...

'சுகன்ய' நடிகை புதிதாக பதவிக்கு வந்... கொம்புகளாகப் பார்த்து தூதுவிட்டாராம்... தெரிந்தால் தொலைந்தோம்' என்று ஒரு புது... பதில் சொல்லி அனுப்பினாராம். இறு... செல்வாக்குள்ள சில நடிகர்களின் து... முயற்சியில் இறங்கியிருக்கிறார் நடிகை. வாய்... என்று 'சுகன்ய' நடிகையின் அழைப்பை ஏ... உள்ளாகியுள்ளாராம் முன்னாள் ஹீரோ... துணைநடிகருமான ஒருவர். 'சந்திர' என்று ஆரம்பிக்கும்.

## பாடும் ...

சத்யரா... மாற்றிக் காட்... 47 படங்களை... இப்போது ந... கிறார். நகை... என்று பலவி... கொடிகட்டி... சத்யராஜை... படம் ஒன்றை...

இதற்கிடை... பாடவும் செ... வண்ணன். ... நடிக்கும் '... பாடலையும்... படத்தில் இ... பாடியுள்ளா...

## திடீர்...

முரளியு... நடித்திருக்கி... பிடிப்புக்காக... திரும்பிக் கெ... மற்ற சாலை... சிலர் குறுக்கே... ராம். "என்ன... கண்ணாடி... கேட்டாராம்... தான், ஆள... கன்னத்தில்... விட்டார்களா...

நல்ல கா... தவர்களில் ... எல்லோரும்... தான்.



பிரபுதேவா-அரவிந்தசாமி
படம்:-மின்சாரக் கனவு

## மினி சினி


* 'ஜெண்டில்மேன்', 'காதலன்', 'இந்தியன்' ஆகிய மூன்று படங்களிலும் ஷங்கருக்கு உதவியாளராக இருந்தவர் காந்தி கிருஷ்ணா, இவர் கமல் தயாரிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். இதில் கமல் கதாநாயகனாக நடிக்கலாம்.
* தீபாவளிக்கு வெளியாகிய 'அவ்வை சண்முகி'யை அடுத்து தெலுங்குப்படம் ஒன்றில் நடித்து வருகிறார் மீனா. பாலகிருஷ்ணா கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் ரவளி இரண்டாவது கதாநாயகியாக நடிக்கிறார்.
* 'ஆனந்தம்' படத்தில் மணிரத்னத்திற்கு உதவியாளராக இருக்கும் சுஹாசினி, 'ஆனந்தம்' முடிவடைந்ததும் கன்னடப்படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். இப்படத்தின் பெயர் 'அம்ருதவர்ஷினி'.
* பிரபு, மோகன்லாலுடன் இணைந்து மலையாளத்தில் 'காலாபாணி' (தமிழில் 'சிறைச்சாலை') படத்தில் நடித்ததைத் தொடர்ந்து அர்ஜுனும், மோகன்லாலுடன் இணைந்து மலையாளப் படம் ஒன்றில் நடிக்கவுள்ளார்.
* 'ராமர் படை', 'கோபுரதீபம்', உட்பட நான்கு படங்களில் நடித்து வரும் ராமராஜன், 'பிரியம்' படத்தைத் தயாரித்த அஷோக் சாம்ராஜ் தயாரிக்கும் புதிய படத்தில் நடிக்க இருக்கிறார். இதில் ராமராஜனுக்கு ஜோடியாக சுவாதி நடிக்கிறார்.
* 'ஆசை' படத்திற்குப் பின்னர் படவாய்ப்பின்றி இருந்த சுவலட்சுமி சமீபத்தில் வெளியான 'கோகுலத்தில் சீதை' படத்திற்குப் பின்னர் தமிழில் மூன்று படங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.
* விஜயகாந்த் நடிக்கும் 'தர்மச்சக்கரம்', விக்ரமன் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படம் என இரண்டு படங்களைத் தயாரித்து வரும் லட்சுமி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் அடுத்த ஆண்டில் பிரபு, சரத்குமார், அப்பாஸ் நடிக்கும் மூன்று படங்களைத் தயாரிக்கவுள்ளது.
* 'தலைவாசல்' படத்தில் மடிப்பு அம்சாவாகத் தோன்றி, கவர்ச்சியான வேடங்களில் நடித்து வரும் விசித்ரா, கன்னடத்தில் புதிய படமொன்றில் கதாநாயகியாக நடித்துவருகிறார்.
* 'காதல் கோட்டை', 'அவ்வை சண்முகி' ஆகிய படங்களில் சிறிய வேடத்தில் நடித்த ஹீராவை, விஜயசாந்தி ராம்கி நடிக்கும் 'தடயம்' படத்தில் சிறிய வேடம் ஒன்றில் நடிக்க வைக்க அணுகியுள்ளனர்.
* ரஜினியின் 'அருணாச்சலம்' படம் அடுத்த வருடம் சித்திரைப் புத்தாண்டில் வெளியாகவுள்ளது. தமிழ் நாட்டில் மாத்திரம் 100 திரையரங்குகளில் 'அருணாச்சலம்' படத்தைத் திரையிடவுள்ளார்கள்.


ராமராஜன்-சுகன்யா
படம்:-கோபுரதீபம்

## சொன்னா...

'பூவரசன்' படத்தில் கார்த்திக் ... வாய்ப்புப்பெற்றுத் தருகிறேன் என்று ... படத்தில் பா... பெற்றுக்கொ... வாக்குறுதி ...

கார்த்திக்... வாக்குத்தவ... படத்திலும் ... ரக்சனாவுக்... கொடுத்திரு...


ராணி
படம்:-குட்டாளி

நீராடலாம்

"கண்மேல்
நடந்தேன்
கைமேல்
கிடந்தேன்
மலர்போல்
மலர்ந்தேன்
மதிமேல்
விழுந்தேன்
குளிர்நீராடலாம்."

முகப்பில்
சவுந்தர்யா
படம்: சேனாதிபதி
ரமேஷ்: அரவிந்த்
படம்: கற்பூரபொம்மை

≷ நக்மா ≶

## நக்மாவின் ம...

தீபாவளி வெளி... பார்த்தாராம் நக்மா... பார்க்க பொறாமை...

"சரத்குமாருடன்... கலாமே என்று வருத்... ரின் தோற்றத்துக்கு விசாரேய் பொருத்தமான ... பொறாமையால் இதனைக் கூறுகிறேன் என்று நினை... முன்னணிக் ஹீரோ. தனது ஜோடிகள் விடயத்திலும்... சரியாக இருக்கும்" என்று மும்பாய் சஞ்சிகைக்கு ...

தமிழ் திரையுலகில் தான் இணைந்து நடித்த ... ரஜினிகாந்த். மனம் கவர்ந்தவர் சரத்குமார். நல்ல ... காமல் சொல்லியிருக்கிறார் நக்மா.

சரத்குமார் ஹீரோவான புதிதில் ஹீராதான் சர... தார். இப்போது ஹீரா அஜித்குமாரை துரத்துகிறார்... சரத்மீது திரும்பியிருக்கிறது.

'இரகசியப் பொலிஸ்' படத்தில் நடித்தபோது ம... இறுக்கமாகியிருக்கிறது. இனிமேல் அதிக கவர்ச்சி கா... கொடுத்த நக்மா, 'அரவிந்தன்' படத்தில் கவர்ச்சி கா... மனம் கவர்ந்த நாயகனுக்காக இதையும் செய்யா...


படிப்பகம்

...கிறோம்

...ான்றில் இருந்து ...குழுவினருடன் ...தொழிலதிபர்கள் ...ிட்டு நடனக் குழு ...கு மட்டும் பணம் ...ம்படியை எதிர் ...களாம். இனிமேல் ...ல் செல்வதில்லை ...க.

...ர்களில் புளியம் ...“தலைவருக்குத் ...ிளம் அமைச்சர் ...ாக ஆட்சியில் ...ணயை தேடும் ...ப விடுவானேன் ...று கவனிப்புக்கு ...வும், இந்நாள் ... அவரது பெயர்

படவாய்ப்புக்கள் குறைந்தால் நான் கவலைப்படமாட்டேன். எப்படி சம்பாதிப்பது என்பது எனக்குத் தெரியும். மொடலிங் கலை கைவசம் இருக்கிறது' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார் 'கஸ்தூர' நடிகை. மொடலிங் துறையில் பிரபலமான ஒரு இளைஞருடன் பழக்கம் இருப்பதுதான் துணிச்சலுக்கு காரணமாம்.

## மஞ்ரேக்கரின் ஜோடி கஜோல்

கிரிக்கெட் வீரர்கள்மீது நடிகைகளுக்கு மோகம் என்பது தெரிந்த செய்திதான். சமீபத்திய உதாரணம்: அசாருதீன், சங்கீதா காதல் திருமணம்.

கிரிக்கெட் வீரர்களும் நடிகைகளும் கமராக்களின் கண்ணில் படாமல் காதலித்துக்கொண்டிருந்தால் சுவாரசியம் இருக்காதல்லவா.

அதனால் இந்திய கிரிக்கெட் வீரர் சஞ்சய் மஞ்ரேக்கரை ஒரு படத்தில் நடிக்க வைக்கப்போகிறார்கள். அவருடன் காதல் செய்யப்போகிறவர் கஜோல். மஞ்ரேக்கரின் பரம ரசிகையான கஜோல் அவருடன் இணைந்து நடிக்க உடனடியாக சம்மதம் தெரிவித்துவிட்டார்.

கிரிக்கெட் நட்சத்திரங்களான சந்தீப்பட்டில், மோஷின்கான், சலீம் துராணி ஆகியோர் ஏற்கனவே சினிமாவில் நடித்திருக்கிறார்கள்.

## ரோஜாவுக்கு அரிய வாய்ப்பு

ரம்பாவை பழிவாங்க ரோஜாவுக்கு ஒரு அரியவாய்ப்புக் கிடைத்திருக்கிறது. 'அடிமைச் சங்கிலி' படத்தில் ரம்பாவும், ரோஜாவும் நடிக்கிறார்கள்.

கதைப்படி ரம்பாவுக்கு கிராமத்துப் பெண் வேடம். ரோஜாவுக்கு நவநாகரீகப் பெண் வேடம்.

அடித்தது சான்ஸ். விதவிதமான கவர்ச்சி உடைகளை தயாரிக்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளாராம் ரோஜா. இயக்குநரும் ஓகே சொல்லிவிட்டாராம். ரோஜா என்ன சொன்னாலும் 'ஆமாம்' போட்டே ஆகவேண்டும் என்ற நிலை இயக்குநருக்கு. ஏன் தெரியுமோ? ரோஜாவின் காதலர் ஆர்.கே.செல்வமணிதான் படத்தின் இயக்குநர். இதைவிட ஒரு அரியவாய்ப்பு ரோஜாவுக்கு கிடைக்குமா? ரசிகர்களுக்கும் ஒரு வாய்ப்புத்தான். ரோஜாவை பலவித கோணங்களில் கண்டு களிக்கலாம்.

# சினி விசிட்

## 'தேடினேன் வந்தது' பிரபுவுடன் மந்த்ரா

நடிகர் திலகம் சிவாஜிகணேசன், கே.ஆர்.விஜயா நடித்து வெற்றிவாகை சூடியபடம் 'ஊட்டிவரை உறவு' அப்படத்தில் பிரபலமான பாடல் ஒன்று தேடினேன் வந்தது என்று ஆரம்பமாகும்.

தற்போது பிரபு நடிக்கும் படமொன்றுக்கும் 'தேடினேன் வந்தது' என்று பெயர் சூட்டியுள்ளனர். நகைச்சுவை வேடங்களில் பிரபு பிய்த்து உதறுவதால், 'தேடினேன் வந்தது' படமும் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து தயாராகிறது.

பிரபு ஜோடியாக மந்த்ரா நடிக்கிறார். 'பிரியம்' படத்தில் அருண்குமார் ஜோடியாக அறிமுகமாகி, அவருடன் கிசுகிசுக்கப்படுபவர் மந்த்ரா.

'சதிலீலாவதி', 'அவ்வை சண்முகி' உட்பட பல படங்களுக்கு நகைச்சுவை ததும்ப வசனம் எழுதியவர் கிரேசி மோகன். 'தேடினேன் வந்தது' படத்திற்கும் அவர்தான் வசனம் எழுதுகிறார். இயக்கம்: ரவிவர்மா.

பிரபுவுடன் கவுண்டமணியும் இணைந்து வயிறு குலுங்கவைக்கப் போகிறார். படப்பிடிப்பு தமிழ் நாட்டில் நடந்தாலும், இரண்டு பாடல் காட்சிகள் வெளிநாடுகளில் படமாக்கப்படவுள்ளன.


...ணிவண்ணன்

... வித்தியாச வில்லனாக ...யவர் மணிவண்ணன். ...யக்கிய மணிவண்ணன் ...ப்பதில் பிஸியாக இருக் ...்சுவை, வில்லத்தனம் ...மான பாத்திரங்களில் ...றக்கிறார். விரைவில் ...த்து பிரமாண்டமான ... இயக்கப்போகிறார். ...யே சொந்தக் குரலில் ...டங்கியுள்ளார் மணி ...முரளி. தேவயாணி ...ணி' படத்தில் ஒரு ... 'எட்டுப்பட்டி ராசா' ...ண்டு பாடல்களையும்

## முத்தம்

...ன் பூமணி படத்தில் ...ர் தேவயாணி. படப் ...வெளியூர் சென்று காரில் ...ண்டிருந்தார். ஆளரவ ... நின்று கொண்டிருந்த ... நின்று காரை மறித்தன ...விஷயம்?” என்று கார்க் ... கீழே இறக்கியபடி ...தேவயாணி. அவ்வளவு ...ளுக்கு தேவயாணியின் ...த்த மழை பொழிந்து ...

...மாக, முத்தம் கொடுத் ...ண்கள் யாரும் இல்லை. ...கிராமத்துப் பெண்கள்



கார்த்திக்-கவுண்டமணி-ரோஷினி
படம்:- சிஷ்யா

## பந்தா இல்லாத சுகன்யா

முன்னணிக் ஹீரோக்களுடன் மட்டும்தான் நடிப்பேன் என்று அடம்பிடித்தவர் சுகன்யா. இப்போது ராமராஜனுடன் டூயட் பாடிக் கொண்டிருக்கிறார். 'கோபுர தீபம்' படத்தில் ராமராஜனுக்கு ஜோடி சுகன்யாதான்.

பெரிய புள்ளிகளோடு தொடர்பு இருந்தபோது விஜயகாந்துடனும் தகராறு செய்த சுகன்யாவுக்கு இப்போது நேரம் சரியில்லை. ராமராஜன் சொற்படியெல்லாம் கேட்டுக்கொள்கிறார். பாடல் காட்சிகளிலும் ராமராஜன்தானே என்றெல்லாம் அலட்சியம் செய்யாமல் பரிபூரணமாக ஒத்துழைக்கிறார்.

'கோபுர தீபம்' படமும் வழக்கமான ராமராஜன் பாணிப் படம்தான். “நான் எம்.ஜி.ஆரின் ரசிகன். எம்.ஜி.ஆர் பாணியில்தான் படமெடுப்பேன். எம்.ஜி.ஆர். நல்லவராகத்தான் நடிப்பார். நல்ல கருத்துக்களைத்தான் ஜனங்களுக்குச் சொல்லுவார். நானும் அந்த வழியைவிட்டு மாறவே மாட்டேன்” என்று சபதம் செய்வதுபோல பேசுகிறார் ராமராஜன்.

## ...ப் சொன்னதுதான்

...ஜோடியாக நடித்தவர் ரக்சனா. அடுத்தடுத்த படங்களிலும் ...வாக்குறுதி கொடுத்திருந்தாராம் கார்த்திக். 'டாட்டா பிர்லா' ...ர்த்திபனுடன் தாராளமாக நடித்து அவரது அன்பையும் ...ண்டார் ரக்சனா. பார்த்திபனும் ரக்சனாவுக்கு ...காடுத்து குளிரவைத்தார். ...வாக்குறுதியை மறந்தாலும், பார்த்திபன் ...பில்லை. 'வாய்மையே வெல்லும்' ...னது ஜோடியாக நடிக்க ... வாய்ப்பு வாங்கிக் ...கிறார்.

## பணம் போனால் நிம்மதி வரும் ரஜினியின் 'அருணாச்சலம்' சொல்கிறது

ரஜினியிடம் திடீரென்று பணம் சேர்ந்துவிடுகிறது. அதை வைத்து என்ன செய்வது என்றே தெரியவில்லை. பலரிடம் யோசனை கேட்கிறார்.

ஒரு படம் தயாரித்து அந்தப் படம் நஷ்டமானால் பணம் போய்விடும். நிம்மதியாக இருக்கலாம் என்று திட்டம் போடுகிறார். ஜெயராமை கதாநாயகனாக வைத்து படம் தயாரிக்கிறார் ரஜினி. ஆனால் ரஜினி தயாரித்த படம் வெற்றிபெற்று வசூல் கொட்டுகிறது.

இறுதியாக தனது பணத்தையெல்லாம் ஏழைகளுக்கு பங்குபோட்டுக் கொடுக்கிறார் ரஜினி. அவர்கள் மனதில் இடம்பிடிக்கிறார். நிம்மதியும் கிடைக்கிறது. இதுதான் அருணாச்சலம் படத்தின் கதை.

ரஜினி ஒரு பெண்ணைக் காதலிக்கிறார். இன்னொரு பெண் ரஜினியை காதலிக்கத் துரத்தித் திரிகிறார். இருவரில் அதிஷ்டம் யாருக்கு என்பதும் மற்றொரு புதிர். ரம்பாவும், சவுந்தர்யாவும் ரஜினியைக் காதலிக்கிறார்கள். ரஜினியின் படத்தில் நடிப்பவராக கௌரவ வேடத்தில் சில காட்சிகளில் மட்டும் தோன்றுவாராம் ஜெயராம்.

## மீண்டும் டாக்டர் பட்டம்

தமிழ்நாட்டில் உள்ள மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் இசைஞானி இளையராஜாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கவுள்ளது. எதிர்வரும் டிசம்பர் 13ம் திகதி டாக்டர் பட்டம் வழங்கும்விழா நடைபெறவுள்ளது.

ஏற்கனவே சிதம்பரம் பல்கலைக் கழகம் இளையராஜாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.



சுமன்-ரம்பா
படம்:- ரம்பா ஓ ரம்பா

## கமலைக் காதலிக்கும் ஜெமினி

சினிமா படங்களுக்கு நடனக்காட்சி அமைத்துக் கொடுப்பவர் கமல். மீனா கமலைக் காதலித்துக் கல்யாணம் பண்ணுகிறார். கட்டுப்பெட்டித்தனமான குடும்பப் பெண்ணான மீனாவுக்கு தன் கணவர் பிறபெண்களை கட்டிப் பிடித்து ஆடுவது சகிக்க முடியவில்லை. அதனால் விவாகரத்து பெறுகிறார். கமலுக்கு தன் மகள்மீது கொள்ளைப் பிரியம். அதனால் வேலைக்கார மாமி வேடத்தில் மீனா வீட்டுக்குப் போகிறார்.

மீனாவின் அப்பா ஜெமினிகணேசனுக்கு மாமிமீது மையல் ஏற்படுகிறது. வீட்டு உரிமையாளர் மணிவண்ணனுக்கும் மாமி மீது ஒரு கண். கமலின் மகளுக்கு மட்டும் மாமியாக வந்திருப்பது தன் அப்பாதான் என்று தெரிகிறது. மற்றவர்களுக்கு தெரியாது.

பிறகென்ன, நகைச்சுவைக்கு கேட்கவா வேண்டும்? அசத்தோ அசத்தென்று அசத்திவிடுகிறார் கமல். கிரேசி மோகன் மனம்வைத்து வசனம் எழுதி சிரிப்பு வேடிகளை கொளுத்திப் போட்டிருக்கிறார்.

பாண்டியனாகவும், சண்முகியாகவும் கமல் கலக்கல் நடத்த, முன்னாள் காதல் மன்னன் ஜெமினி கணேஷனும் வெளுத்து வாங்கியிருக்கிறார். டெல்லிகணேஷ் காதில் பூ சுற்றிக் கொண்டு வந்து மாமியைப் பற்றி ஜெமினிக்கு கோள் மூட்ட முயல்வதும், ஜெமினியிடம் அது பலிக்காமல் போவதும் கல கல.

நாசரும் வித்தியாசம் காட்டியிருக்கிறார். நகைச்சுவையிலும் மெருகேற்றிக் காட்டுகிறார். மீனாவுக்கு அதிக வேலை இல்லாவிட்டாலும், கொடுத்த பாத்திரத்தை குறைவைக்காமல் செய்து முடித்திருக்கிறார்.

இசை: தேவா. பாடல்கள் அருமை. இயக்கம்: கே.எஸ். ரவிக்குமார். அவருக்கு இது மற்றொரு திருப்பம்.

குடும்ப சகிதமாக பார்த்து சிரிக்க வேண்டுமானால் 'அவ்வை சண்முகி' உகந்தது.



கமல்
படம்:- அவ்வை சண்முகி

## ...ம் கவர்ந்தவர்

...டாக வந்துள்ள 'நேதாஜி' படம் ... சரத்குமார், லிசாரே ஜோடியைப் ...ாக இருந்ததாம்.

... நான் இணைந்து நடித்திருக் ...மாகத்தான் இருந்தது. சரத்குமா... ஜோடியல்ல. லிசாரேய்மீதுள்ள ...த்துவிடாதீர்கள். சரத்குமார் ஒரு ...அவர் கவனமாக இருந்தால்தான் ...ட்டி கொடுத்திருக்கிறார் நக்மா. ...டிகர்களில் மரியாதைக்குரியவர் ...ண்பர் கார்த்திக் என்றும் மறைக்...

...த்குமாரை துரத்திக்கொண்டிருந் ... நக்மாவின் கடைக்கண் பார்வை

...ர்ந்த நட்பு. 'அரவிந்தன்' படத்தில் ...ட்டமாட்டேன் என்று வாக்குமூலம் ...டி நடித்துக் கொண்டிருக்கிறார். ...ிட்டால் எப்படி?!

## விளம்பரத்தில் குறும்பு

இயக்குநரும், நடிகருமான பார்த்திபன் ஏதாவது வித்தியாசமாகச் செய்து பெயர் எடுத்து விடுவார்.

'காங்கேயன் காளை' படத்தின் தொடக்கவிழா விளம்பரத்தில் ஒரு குறும்பு செய்திருக்கிறார் மனுசன்.

“என்னுடன் கதாநாயகியாக நடிக்க ஒரு சீமைப் பசு தேவை.” என்று விளம்பரம் செய்திருந்தார்.

குறிப்பிட்ட விளம்பரம் பல நடிகைகளை முகம் சுளிக்க வைத்திருக்கிறது. நடிகைகள் 'சீமைப்பசு' என்று சொல்வதா? என்று முணுமுணுக்கிறார்கள்.

இதுபற்றி பார்த்திபனிடம் கேட்டால், “முணுமுணுப்பவர்கள் என்னிடம் விளக்கம் கேட்டால் பதில் சொல்லத்தயாராக இருக்கிறேன்” என்கிறார்.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# பாலூட்டும் தாய்மார்களுக்கு கட்டாயம் சத்துணவு!



கர்ப்பமான பெண்களுக்குச் சத்துணவு எவ்வளவு முக்கியமோ அதுபோல் பிரசவ மாகிக் குழந்தைகளுக்குப் பாலூட்டும் போதும் சத்துணவு மிக அவசியமான ஒன்றாகும். கர்ப்பமாக இருக்கும்போது ஒரு பெண் என்னவெல்லாம் சாப்பிட்டுத் தன் உடம்பை வளமாக்கிக் கொண்டாளோ அவற்றைக் குழந்தை பிறந்த பிறகும் சாப்பிட வேண்டும். காரணம் தன் குழந்தைக்கும் சேர்த்து உணவு ஊட்ட வேண்டியிருப்பதால் சத்துணவு அவசியம்.

பால் குழந்தைக்குத் தேவைப்படுகிறது. அந்தப் பாலைச் சுரக்க சத்தான உணவு வகைகள் தாய்க்குத் தேவை. தாய் சாப்பிடும் உணவு குழந்தைக்கு ஏற்றுக் கொள்ளுமோ, ஏற்றுக்கொள்ளாதோ என்ற பயம் தேவை யில்லை. சுத்தமான, சத்தான, காரமில்லாத- எளிதில் சமிபாடடையக் கூடிய ஆகாரமாகச் சாப்பிடலாம். இதனால் குழந்தைக்கு எந்த விதப் பாதிப்பும் ஏற்படாது.

பழங்களில் தோடம்பழம், அப்பிள் தான் சாப்பிட வேண்டும் என்று நினைக்கக் கூடாது. வாழைப்பழம், கொய்யாப்பழம் போன்றவற்றையும் உண்ணலாம். பருப்பு, பச்சைக் காய்கறிகள், கீரை வகைகள் சாப்பிட வேண்டும்.

ஒரு தாய், தன் குழந்தை நன்கு வளர புரதச் சத்து, இரும்புச்சத்து, சுண்ணாம்புச் சத்து மிகுந்த உணவு வகைகளைச் சாப்பிட வேண்டும். சோயா பீன்ஸ், கடலை, ஆட்டி றைச்சி, மீன் போன்றவற்றில் புரதச் சத்து அதிகமாக உள்ளது. அரிசிச் சோற்றைக் குறைத்துக் கொண்டு பருப்பு வகைகளை அதிகம் சாப்பிடவேண்டும்.

அரைக்கீரை, கீரை, முள்ளங்கி போன்ற வற்றில் இரும்புச்சத்து உள்ளது. இது குழந்தையின் வளர்ச்சிக்கு அவசியமான ஒன்று. குழந்தையின் எலும்பு வளர்ச்சிக்குக் குரக்கன், கோதுமை, கடலை, பயறு வகைகள், பட்டாணி, மீன், பால் போன்றவை களைச் சாப்பிடுவதன் மூலம் எலும்பு வளர்ச்சி பெறுகின்றது.

ஒரு தாய்க்குத் தேவையான எல்லாச் சத்துக்களும், முட்டை, பால், கீரை, பருப்பு, பழ வகைகளில் இருப்பதால் ஒவ்வொரு நாளும் அவரவர் வசதிக்குத் தக்கபடி சாப்பிட்டு வரலாம்.

ஒரு குழந்தையின் ஆரோக்கிய வளர்ச் சிக்கு எடை அவசியம். இதற்குத் தாய்ப்பால் மிகமிகத் தேவை. புட்டிப்பாலை நம்பி தாய்ப்பாலை நிறுத்தக்கூடாது. நோய் எதிர்ப் புச் சக்தி தாய்ப்பாலில்தான் அதிகமாக இருக்கின்றது. எனவே ஒரு குழந்தைக்குத் தேவையான தாய்ப்பால் சுரக்க தாய்மார் தின மும் பசும்பால் குடிக்க வேண்டும். இதில் கொழுப்புச் சத்து அதிகமாக உள்ளது. மோரும் குடிக்கலாம். விட்டமின் B பாலிலும், மோரிலும் நிறைய உள்ளது. ஒரு தாய் ஒரு நாளுக்கு ஒரு லீட்டர் பால் வரை குடிக்கலாம்.

ஒரு தாய்க்கு ஆரோக்கியமான உணவும், போதுமான ஓய்வும், நல்ல தூக்கமும் தேவைப்படுவதால் நேரம் கிடைக்கும் போது ஓய்வும், தூக்கமும் கொள்வது உடம்பைச் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ள உதவும். பாலூட்டும் ஒரு தாய்க்கு சத்தான உணவோடு தண்ணீரும் தேவை. தினசரி எட்டு டம்ளர் தண்ணீராவது அருந்துவது நல்லது.

# விரதமும் அழகு தரும்



விரதம் என்றால் எப்படி இருக்க வேண்டும்?

இன்று விரதம் என்று சொல் வார்கள். ஒரு பொழுது மட்டும் உண்பது என்ற பெயரில், இரவு சாப்பிட முடியாது என்பதனால் பகலில் வயிறு முட்டப் பலகாரங் களைச் சாப்பிடுவார்கள்.

விரதம் இருப்பது என்பது நம்முடைய இரைப்பை, குடல் இவற் றிற்குக் கொஞ்சம் ஓய்வு கொடுக்க வேண்டும் என்பதற்காக ஏற்பட்டது தான். 15 நாட்களுக்கு ஒரு முறை யாவது வயிற்றுக்கு ஓய்வு கொடுத் தால் அது நல்ல முறையிலே இருக்கும்.

சில பேர் முழுப்பட்டினி இருப்பார்கள். அவர்களும் சாப்பாடு சாப்பிடாவிட்டாலும் தண்ணீர் குடிக்க வேண்டும். நன்கு காய்ச்சி வடிகட்டிய நீருடன் கொஞ்சம் தேன் அல்லது எலுமிச்சம்பழச்சாறு கலந்து அவ்வப்போது குடித்து இளநீரும் பருகி வரலாம். பட்டினி இருப்பதால் ஏற்படும் சோர்வு அகன்று விடும். புத்துணர்ச்சி ஏற்படும்.

பசி இருக்குமானால் இரண்டு மூன்று பழங்களைச் சாப்பிடலாம். இதுதான் விரதம் ஆகும். மாதத்திற்கு இப்படிப்பட்ட விரதம் நான்கு முறை இருந்தால், வயிற்றுத் தொல்லைகள் இருக்காது. உடம்பில் ஊளைச்சதைகள் ஏறாது. உடம்பிலுள்ள துர்நீர், கழிவு கள் அகன்று ஆரோக்கிய மாகும்.

எத்தனையோ தீர்க்க முடியாத வியாதிகளையும் விரதம் இருப்பதும், பட்டினி இருப்பதும் தீர்த்திருக்கிறது.

விரதம் முடிந்து மறு நாள் பொரியல், வறுவல் என்று தடபுடலாகச்சாப்பிட்டு விடாதீர்கள். வயிறு கெட்டுப் போய்விடும். மறுநாள் காலையில் சுத்தமான தண்ணீர் குடியுங்கள். ஏதாவது பழம் சாப்பிட்ட பிறகு, காரமில் லாத, எண்ணெய் சேர்க்காத சாப்பாட்டை அவசரப்படாமல் சாப்பிட வேண்டும்.

'சாப்பாட்டைக் குடிக்க வேண்டும். நீரைச் சாப்பிட வேண்டும்.' என்பது பழமொழி. அதாவது- சாப்பாட்டை மென்று உமிழ் நீருடன் கலந்து குடிக்க வேண்டும். தண்ணீரை வாயில் விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்க வேண்டும் என்பதுதான் அர்த்தம்.

# சேமியா இருந்தால் சமாளிக்கலாம்



திடீரென்று தெரிந்தவர்கள் அல்லது உறவுக்காரர்கள் வந்துவிட்டார்கள். அவர் களுக்கு தேனீர் அல்லது கோப்பியுடன் பிஸ்கெட் கொடுத்து அனுப்பிவிட முடியாது. ஏதாவது சிற்றுண்டியோ, சாப்பாட்டு நேரமாக இருந்தால் சாப்பாடோ கொடுக்க வேண்டும். சமைத்திருப்பது போதாது என்று தோன்றினால், சேமியா உடனடித் தேவைக் குக் கைகொடுக்கும்.

சேமியாவை வாங்கிய உடனேயே லேசாக நெய் விடாமல் வறுத்து வைத்திருக்க வேண்டும். தேவையான நேரத்தில் சட்டென்று உபயோகிக்கலாம்.

சேமியாவை எடுத்துக் கொள்ளுங்கள். கால் கிலோ சேமியாவுக்கு 4 டம்ளர் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து, அதில் சேமியாவைப் போட்டுக் கொதிக்க வைக்க வேண்டும்.

வேகவைத்த சேமியாவை நீரைவடிகட்டி அகலமான பாத்திரத்தில் எடுத்துப்போட்டு வைத்தால் நன்றாக ஆறி உதிர் உதிராக இருக்கும். தக்காளி, வெங்காயம் இருந்தால் பச்சை மிளகாயுடன் பொடியாக நறுக்கி, வாணலியில் வதக்கி, அத்துடன் கொஞ்சம் சேமியாவைக் கலந்து வைக்கலாம்.

தயிர் இருந்தால் கடுகு, இஞ்சி, கறிவேப்பிலை, பச்சை மிளகாய் தாளித்து சேமியாவை அதில் போட்டு சேமியா பாத் பண்ணி விடலாம்.

## லேடீஸ் ஸ்பெஷல்

கரட், எலுமிச்சம்பழம் இருந்தால், கரட்டைத் துருவி எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து, கடுகு மிளகு தாளித்து அத்துடன் சேமியாவைக் கலந்து விடலாம்.

சரி, வந்திருக்கும் விருந்தாளிகள் நொறுக் குத் தீனிப்பிரியர்கள் என்றால் வேக வைத்த சேமியாவுடன் கொஞ்சம் கடலை மாவு, வெங்காயம், பச்சைமிளகாய், இஞ்சி நறுக்கி உப்புப்போட்டு எண்ணெயில் பொரித்தெடுத் தால் மொறு மொறு பக்கோடா, அடுத்த தடவை கடைக்குப் போகும்போது, சேமியா வாங்க மறக்க மாட்டீர்கள்தானே!

# உங்களுக்கு அல்சரா?

நிறையப் பேருக்கு அல்சர் தொந்தரவு இருக்கிறது. மனக்கவலை, டென்ஷன், பரபரப்பு என்று மருத்துவர்கள் பல காரணங் களை அடுக்கிக்கொண்டே போகிறார்கள். ஆனால் அதைவிடவும் முக்கிய காரணம் என்னவென்றால், வேளாவேளைக்குச் சாப் பிடாமல் இருப்பதுதான்!



இரவு ஒன்பது மணிக்குச் சாப்பிடு கின்றோம். தூங்கி எழுந்ததும் காலையில் ஒரு டம்ளர் தேனீர், கோப்பி அல்லது பால் குடிப்பதோடு சரி. வீட்டு வேலைகள், வெளியில் போகும் அவசரம், பஸ்ஸைப் பிடிக்க வேண்டிய கட்டாயம், நேரத்திற்கு அலுவலகம் போக வேண்டுமே என்ற கவலை. இப்படிக் காலை வேளையில் திட உணவாக எதையும் சாப்பிடாமல் நேரத்தைப் போக்கிவிட்டு, பகல்நேர உணவை 12 மணிக்குமேல் சாப்பிடுபவர்கள்தான் அதிகம். எமது உடல் ஒரு அற்புதமான இயந்திரம், அதில் ஒவ்வொரு பாகமும் காரண காரியமாகத்தான் இயங்குகின்றது.

இரைப்பைக்கு வரும் உணவைச் சமிபாடடைய வைக்க அங்கே அமிலங்கள் சுரக்கின்றன. இந்த அமிலம் வயிறு காலியாக, இரைப்பைச் சுவர்களை அரிக்கத் தொடங் கும். அதனால்தான் உணவு உண்ட 5மணி நேரத்திற்குப் பிறகு மீண்டும் ஏதாவது சாப்பிடும் பழக்கம் இருந்து வந்தது. காலம் மாற மாறக் காலை உணவு உண்ணும் நேர இடைவெளி அதிகரிக்கவும் அல்சர் நோயும் அதிகம் பாதிக்கத் தொடங்கிவிட்டது.

அதனால்தான் காலை எட்டு மணிக்குள் ஏதாவது ஒரு வகையில் திட உணவு எடுத்துக் கொள்ளவேண்டும். இல்லையென் றால் அஜீரணம், புளி ஏப்பம், வாயுத் தொல்லை, அல்சர் என்று அடுக்கடுக்கான தொல்லைகள் தொடரத்தான் செய்யும்.

இரண்டு பாண்துண்டு, மாஜரின், ஒரு டம்ளர் திரவ உணவு. இது கூடப்போது மானது. அத்துடன் காலையில் காரமில்லாத உணவு வகைகள் மிகவும் நல்லது.

# சமைப்போம் சுவைப்போம்

–தொகுத்துத் தருவது சுகந்தினி–

## உருளைக்கிழங்கு கபாப்

**தேவையானவை:**

உருளைக்கிழங்கு - 500 கிராம்
பெரிய வெங்காயம் - 2
கடலை மாவு - 1 மேசைக்கரண்டி
மல்லித்தூள் - 1 தேக்கரண்டி
மஞ்சள்தூள் - 1 தேக்கரண்டி
மிளகாய்த்தூள் - 1 தேக்கரண்டி
கசகசா - 1/2 தேக்கரண்டி
நெய் - அளவாக
ஏலக்காய்த்தூள் - சிறிதளவு
உப்பு - அளவாக

**செய்முறை:**

உருளைக்கிழங்கை வேகவைத்துத் தோலுரித்து நன்றாக மசித்துக் கொள்ள வேண்டும். இதில் கடலைமாவு, மல்லி, மிளகாய், மஞ்சள், ஏலக்காய், உப்பு கசகசா ஆகியவற்றைச் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு, வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிப் போட்டு பொன்னிறமாக வதக்கிக் கொண்டு, உருளைக்கிழங்குக் கலவையைக் கொட்டி சிறிது நேரம் கிளறி பின் இறக்க வேண்டும்.

பின் கலவையை ஒரே அளவுள்ள சிறு உருண்டைகளாக்கி வைக்கவும். அடுப்பில் உருண்டைகளை வடைபோல் தட்டி தோசைக் கல்லை வைத்துக் கொதித்ததும் நெய்விட்டு இரண்டு புறமும் சிவக்க வேக வைத்து எடுக்கவும்.

# கூந்தல் வளர தைலம்–நீங்களே செய்யலாம்



1. மூலிகைத் தைலங்கள் உச்சந்தலைக்கு மட்டுமல்லாது, முழு உடம்பிற்குமே நல்ல தாகும். இத்தைலங்கள் ஆயுர்வேத மற்றும் மூலிகைப் பொருட்கள் விற்கும் எல்லாக் கடைகளிலும் கிடைக்கின்றன. இவற்றை வீட்டில் செய்வது மிகக் கடினமான மற்றும் நேரம் எடுக்கும் செயலாகும். ஆனாலும் வீட்டிலேயே செய்ய இதோ எளிய முறை:

ஒரு கோப்பை தேங்காய் எண்ணெயை நன்றாகக் காய்ச்சி அதனுடன் கொஞ்சம் துளசி, வேப்பிலை மற்றும் கறிவேப்பிலை இலைகளைக் கிள்ளிப்போட்டு 24 மணி நேரம் ஊறவைக்கவும். அவற்றின் சத்துக்கள் முழுவதும் அந்த எண்ணெயில் இறங்கி விடும். அதை மறுபடி எடுத்துக் காய்ச்சி வடிகட்டி உபயோகப்படுத்தவும். இந்தத் தைலத்தை நீண்ட நாள் வைத்திருக்க முடி யாது. அதனால் அவ்வப்போது தயாரித்துக் கொண்டு உடனுக்குடன் உபயோகப்படுத் துங்கள்.

2. முடி நன்கு வளரவும், கூந்தல் கருமையாக இருக்கவும், பொடுகு மறையவும் இதோ ஒரு எளிய தைலம்:

மருதோன்றி இலை, கரிசலாங்கண்ணிக் கீரை, கறிவேப்பிலை, செம்பருத்திப்பூ ஆகிய வைகளை நன்றாகக் கிள்ளி, மிக்ஸியில் போட்டு விழுதாக அரைத்து, சிறு வடை களாகத் தட்டி, நல்ல வெய்யிலில் ஒருநாள் முழுவதும் உலர்த்தவும் (மிக்ஸியில் அரைக்கும்போது சிறிதளவு எண்ணெயை ஊற்றி அரைத்தால் இலைகள் மிக்ஸியில் சிக்காது.) வடை உலர்ந்தவுடன் சுத்தமான தேங்காய் எண்ணெயை மிதமான தீயில் இலேசாகக் காய்ச்சவும். ஆறியவுடன் உலர்ந்த வடைகளை எண்ணெயில் ஊற விடுங்கள். தேவைப்பட்டால் எண்ணெயை வடிகட்டி உபயோகப்படுத்துங்கள். இல்லையேல் அப் படியே தடவிக்கொள்ளுங்கள். பொடி செய்த வெந்தயத்தைக்கூட இந்த எண்ணெயில் சேர்த்துக் கொள்ளலாம்.

3. தலையில் பேன் வராமல் இருக்க வாரம் ஒரு முறையேனும் துளசி இலைகளை விழுதாய் அரைத்துத் தேய்த்துக் கொள்ள வேண்டும்.

4. அரை லீட்டர் தேங்காய் எண்ணெயில் 50 கிராம் வெந்தயத்தைப் பொடியாக்கிச் சேர்த்தால் தலை குளுமையாக இருக்கும்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AS

பெயர்:......................

முகவரி:......................

......................

கையொப்பம்:......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிர சுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 07-12-1996**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# சீரான கூந்தலுக்கு சத்தான உணவு



முற்காலத்தில் சீயக்காய்ப் பொடி, பச்சைப்பயறு மாவு, வெந்த பூந்திக் கொட்டை களையே கூந்தலை அலசப் பயன்படுத்தி வந்தார்கள். அவற்றில் எந்தவித இரசாயனக் கலப்பும் இல்லாததனால், இயற்கை அளித்த வரப்பிரசாதமாய் அவை விளங்கின. ஆனால் இவைகளைத் தயாரிக்க நிறைய நேரம் தேவைப்பட்டதால் மக்கள் கடைகளில் விற்கும் சீயக்காய்த் தூளையே வாங்கி உபயோகிக் கின்றனர். பிறகு சுலபம் என்று கருதி ஷம்பூவைப் பயன்படுத்தி வருகின்றனர்.

நீங்கள் அடிக்கடி ஷம்பூ உபயோகிப் பவராக இருந்தால், சிறிது எண்ணெயை முதலில் தடவிக் கொண்டு ஷம்பூ போட்டுக் குளியுங்கள். இதனால் இயற்கையிலேயே கூந்தலில் உள்ள எண்ணெய்ப்பசை குறை யாது இருக்கும்.

நீங்கள் எந்த முறையைக் கையாண்டா லும் உங்கள் கூந்தலின் நீளமும், அடர்த்தியும் உங்கள் உயிர் அணுக்களைக் கொண்டே நிர்ணயமாகின்றது. அதனால் சத்தான, சீரான உணவை உட்கொண்டால்தான் கூந்தல் ஆரோக்கியமாக வளரும் என்பது உறுதி.

அவ்வப்போது சுத்தமாகக் குளித்து கூந்தலை அலசிக் கொண்டா லும் சீப்பு மற்றும் தலையணை உறைகளை சுத்தமாக வைத் துக் கொண்டாலும் கூந்தலுக்கு ஆரோக்கியமானதாகும்.

நம் கூந்தலுக்கு மரு தோன்றி ஒரு சிறந்த பராமரிப் புப் பொருளாக விளங்குகின் றது. ஆனால் வறண்ட கூந்த லுக்கு இதை அடிக்கடி உபயோகித்தால் கூந்தல் மேலும் வறண்டிட வாய்ப் புள்ளது.

மருதோன்றியையும், தயிரை யும் கலந்து கூழாக்கி உச்சந் தலையில் தடவினால் அழுக்கு நீங்குவதோடு கூந்தல் பார்க்கவும் அழகாக இருக்கும். இந்த முறையானது சாதாரண கூந்தல் உடையவருக்கே பொருந்தும்.

எண்ணெய்ப் பசையுள்ள கூந்தலுக்கு எலுமிச்சம்பழச் சாற்றையோ உலர்ந்த நெல்லிக்காயைப் பொடித்தோ தேய்த்தால் உச்சந்தலை குளிரும்.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கண்டி வாசகிக்கு அதிஷ்டம்!

| | |
|---|---|
| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| இவர்தான். | திருமதி ஆர். கிருஷானி |
| | 29/30, தேவலவத்தை வீதி, அருப்பொல, கண்டி. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## ஏழிசைத் தூது — அப்பால்

நினைவுகள்
நொண்டி நொண்டி
நெருப்பின் மீது
நடக்கின்றன!
–0–
ஏன் இப்படி
என்னைத் தவிக்கவிட்டாய்..?
என்பதை நினைக்கும்
நேரங்களிலெல்லாம்
கண்களை மறைத்துக்
கண்ணீர் திரையிட,
தலை கவிழ்ந்து அழுகிறேன்!
–0–
இதயத்திலிருந்து
கொப்பளிக்காத அன்பை
நடத்தைகளால் மாத்திரம்
நிரூபித்துக் கொண்டிருக்க
உன்னால் முடியாது தான்!
–0–
பொழுதெல்லாம்
மன ஊற்றில்
வந்து விழும்–உன்
நினைவுக் கரங்கள்
என் இமை ஓரங்களில்
விழி நீரை
வாரி அடிக்கின்றன!
–0–
நிமிடத்திற்கு நிமிடம்
சாம்பலாகிக் கொண்டிருக்கும்
இதயத்தின் வேதனைகளை
உன்னால்
உணரவே முடியாதா?
–0–
பாழடைந்த
பாதைகளில்–என்
பாதங்கள்
போய்க் கொண்டிருக்கையில்,
அரவம் கேட்டுத்
திரும்பிப் பார்க்கும்
தருணங்களிலெல்லாம்
வெறுமையே முகத்தில்
அறையப்படுகிறது
நீ,
என்னிடம் விட்டுச் சென்ற
எதிர்காலமும்
இப்படிப் பட்டதுதானே...?
–0–
எனது
சோகங்களைச் சொல்லி–உனைப்
பொத்திப் பிடிக்க முயன்றேன்!
எனது கரங்களுக்குள்
கவிதைகள் மட்டும் கிடைத்தன;
கவிதைகளுக்கு அப்பால்
நீயும், என் சோகங்களும்!
–0–

செல்வி பஹீமா ஜஹான்–
மெல்சிரிபுர.

## இது என்ன விதி...?

ஓயாத இரவுகள்
கடல் அலைகளைப் போல்
ஆர்ப்பரிக்கின்றன...
எனது மனமும் தான்...!
•••
ஒரு சில
பச்சை மனங்கள்
பகீர் என..
எத்தனை உயிர்கள் தேவையோ
இன்றைய இரவுக்கும்..?
•••
எங்கோ
நடைபெறும்
உயிரிழப்புகளுக்காய்
எங்கள் தெருநாய்கள்
ஊளையிடுகின்றன போலும்...!
•••
விடிந்ததும் என்ன
விளம்பரப் பலகையிலா போடுவார்கள்..?
ஏழு வருடங்களின் பின்தானே...
அதுவும்..
காணாமல் போனவர்கள் பட்டியலில்...
•••
அப்போது
இதற்காக ஆணைக் குழுக்கள்
அமைக்கப்படலாம்...!
அவர்களும்
குழியிலே எலும்புகளை
கண்டு பிடிக்கலாம்...!
•••
பத்திரிகைகளில்
பரபரப்பாக செய்தி வரும்.
வந்த சூட்டிலே அடங்கும்..
விசாரணைகளும் தான்...!
ஆனால்...
உறவினர்களின்
மனப் புண்கள் மட்டும்
மீளவும் கிளறுண்டு...?
•••
மனத்தில் கணக்குகளை
பதிவு செய்த காலம் முதல்
கம்பியூட்டர் டிஸ்க்கை நம்பும்
இந்தக் காலம் வரை..
நமக்கு மட்டும்
இது தான்
விதியென்றால்–ஐயகோ!
இது என்ன விதி ஐயா....?

சிவா– திராய்மடு.

## கிருஷாந்தி!

உன் மரண
எதிர்மறைக்கு
இறைவனும்
ஒப்பம் இட்டானா?
***
நினைத்து நினைத்து
உள்ளம்
உருகிப் போனது!
***
நேரம் நெருங்கி
பாடம் முடிந்து
உன் பாதங்கள்
பூமியை முத்தமிட்டு
வந்த வேளையில்
என்ன நடந்தது?
***
இந்த ஊரின்
நியாயம் இதுதானா?
***
கிழக்கே உதிக்கும்
சூரியனும்
திகைத்துப் போனது!
உன் மரணச் செய்தி கேட்டு!
***
தரையில் வீழ்ந்து
கண்ணீரை உதிர்த்து
தேடி வந்த
தாய்க்கு
என்ன நடந்தது?
***
உயிர் அறுந்து
என் ஆத்மாவும்
உன் நினைவோடு
சரிந்து போனது
சகோதரி!
***
புரியவில்லை
எனக்கு
ஒன்றும் புரியவில்லை!
***
சமூக கூடத்தில்
நீயொரு
சங்கீதத் தென்றல்!
***
உன்னை
துராக்கிரதம்
செய்தவர்களுக்கு
நான்
என்ன சொல்வது?
***
ஒரு சமூகம்
தீப்பிடித்த
விசித்திரமான
செய்தியது!
***
இந்த
உலகின் பரப்பு
ஒரு கோடி..
உயிரின் பரப்பு
பல கோடி!
***
மழையும் காற்றும்
ஒன்றாகவே
ஓய்ந்து போனது!
***

ஏ.எல்.காலித்தீன்-அக்கரைப்பற்று.

## தேன் கிண்ணம்

### மனிதன்

அழிந்துபோன
'டைனோசர்'
இனம்போல
நீயும்
மாறப்போகிறாய்!
**
அதற்கு
பாறைகளின்
படை இடுக்குகளில்
முட்டைகளாவது
உண்டு....
இனத்தை
உருவாக்க!
**
உன்னைத்தேடி
தொல்பொருள்
ஆயுவு செய்தால்
துப்பாக்கி
ரவைகளையும்
தலையற்ற
எலும்புக்
கூடுகளையும்தான்
குரங்குகள்
எடுக்கும்!
**
சில வேளை
உன் கருவை
குரங்கின்
கருப்பையில்
வளர்த்தெடுத்தாலும்
பாய்ந்தே
திரிவாய்–
உன்
சந்ததியைப்போல,....

மாரிமுத்து
யோகராஜன்–
அக்கரைப்பற்று–08.

## புயல்

இளமையும் இனிமையுமாய்
இராகம் இசைத்து
வாசலில் நீ காத்திருந்தது
எனக்குத் தெரியும்!

நாம் போவதற்கும்
வருவதற்குமாய் இருந்த
எம் வீட்டுவாசல்
நீ வரமுடியாது;
நீ வர விரும்பிய
ஜன்னல்
எம் வீட்டில் இல்லை....!

உன்னை அழைக்க முடியாத
சோகத்தில் நான்;
என்னை தழுவமுடியாத
கோபத்தில் நீ!

நடுச்சாம வேளையில்
அழுகையும் ஆத்திரமுமாய்
என் வீட்டு கூரையைப்
பிய்த்து உள்ளே புகுந்தாய்!
நான் ஓர் பாடசாலையில்
குடிபுகுந்தேன்– அகதியாய்!

மைத்ரேயி

## மனசுக்குள் மலரும் பூ

ஈரல் துண்டிரண்டை
வெட்டி ஒட்டியதாய்–
இதழ்கள்..!
*
வெள்ளை வானத்தில்
கறுப்பு நிலா பூத்திருக்கும்
விழிகள்..!
*
எந்த 'ராமனும்'
உடைத்து விடாத விற்களாய்
புருவங்கள்..!
*
அவள்–
தாவணி சுமந்த கொடி..!
*
அவள் கன்னக்குழியில்
பனி உறங்கும்.
*
அவள்–
காற்றுக்கு உறவுக்காரி;
வசந்த காலத்து நந்தவனம்.
*
அவள் பூக்களுக்கு
புன்னகை கற்றுக் கொடுப்பவள்.
*
கடற்கரையில் குந்தியிருந்தால்
அவள் காற்று ஊற்று;
மாலை நேரங்களில்
யன்னலோரப் பூ..!
*
அவள் உதிர்க்கும் வார்த்தைகள்
'காதல் தேசத்து'
தேசிய கீதம்.
*
அவள் பார்வைகளை
நீ 'மின்னல்' என்று சொல்;
அதில் நீ எரிந்து போ..!
*
அவளை(க்)–
காதலி..!
*

சிந்தனைப்பித்தன்.

## அந்த நாள் ஞாபகம்



திரையுலகில் இரு துருவங்கள். தனிப்பட்ட ரீதியில் நல்ல நண்பர்கள். எம்.ஜி.ஆரும், சிவாஜி கணேசனும் 'செஸ்' விளையாடி மகிழ்ந்த காட்சி. இரு திலகங்களின் ரசிகர்களும், மோதிக்கொண்டிருக்க, திலகங்கள் சிரித்து விளையாடிக்கொண்டிருந்தார்கள்.




இந்தக் குட்டிக் குழந்தை பெரியவளாகி தமிழ் படவுலகிலும் அழகு காட்டிவிட்டது. யார் தெரிகிறதா? 'மிஸ்டர் ரோமியோ' பட நாயகி ஷில்பா ஷெட்டிதான்.







இந்த தடுக்கான சிறுவன் யார் தெரிகிறதா? கமலுக்கு காரியம் யாவிலும் கைகொடுக்கும் துணைவி சரிகாதான். அடடே.. சிறுமியல்ல சிறுவன். சமீபத்தில் மொட்டையடித்த போதும் சரிகா பையன்மாதிரித்தான் தெரிந்தார்.





கமல், ரஜினி ஆகியோரின் குருதான் இப்படி கல்யாண கோலத்தில் காட்சியளிக்கிறார். ஆமாங்க, கே.பாலசந்தரேதான்! இவரே அந்தக் காலத்தில் கதாநாயகனாக நடித்திருக்கலாமே. நன்றாகத் தானே இருக்கிறார்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(01.12.96 தொடக்கம் 07.12.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| விருட்சிகம் | - சூரியன். |
| தனு | - வியாழன். புதன். |
| கும்பம் | - சனி. |
| மீனம் | - கேது. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |
| துலாம் | - வெள்ளி. |

★ சந்திரன்– கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் செலவு, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- அந்நியர் பகை, கௌரவக் குறைவு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், தொழில் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், தொழில் கஷ்டம். | பி.ப. | 3 | மணி |
| சனி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, உயர்ந்த நிலை. | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 3 | மணி |
| சனி- தொழில் இலாபம், பண வரவு. | காலை | 8 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, குடும்ப பாசம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- மறைமுக எதிர்ப்பு, காரிய நஷ்டம். | பி.ப. | 4 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், தெய்வானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| சனி- உறவினர் பகை, மனக்குறை அதிகம். | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- குடும்ப சுகம், மனமகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பணக் கஷ்டம், உடன்படல். | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் இலாபம், கௌரவம். | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் பகை. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், தேகசுக நன்மை. | பி.ப. | 2 | மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, ஆடம்பரச் செலவு. | பி.ப. | 4 | மணி |
| திங்கள்- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரிய சித்தி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- மறைமுக எதிர்ப்பு, தொழில் மந்தம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| சனி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- குடும்ப நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- உறவினர் உதவி, காரியானுகூலம். | பி.ப. | 3 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, புதிய முயற்சி. | பகல் | 12 | மணி |
| புதன்- காரியசித்தி, பொருள்வரவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, உயர்ந்த நிலை. | பி.ப. | 4 | மணி |
| வெள்ளி- மனக்கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |
| சனி- தொழில் மந்தம், பணச்செலவு. | மு.ப. | 9 | மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பணச் செலவு, காரிய சித்தி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, கௌரவம். | பி.ப. | 4 | மணி |
| புதன் - மனஅமைதி குன்றும், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, காரியசித்தி. | பி.ப. | 3 | மணி |
| சனி- பணக் கஷ்டம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பிரயாணக் கஷ்டம், அந்நியர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| புதன்- முயற்சி பலிதம், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. | 4 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, உறவினர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| சனி- மனக்கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப. | 9 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- வீண் கலக்கம், உறவினர் பழி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் கேடு, பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- மன அமைதியின்மை, வீண் பயம். | பி.ப. | 3 | மணி |
| சனி- அந்நியர் பகை, அதிகார விருத்தி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- அந்நியர் பகை, கௌரவக் குறைவு. | மு.ப. | 9 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, வீண் பிரயாசம். | பகல் | 12 | மணி |
| புதன்- தொழில் கஷ்டம், செலவு அதிகம். | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- வீண் கலக்கம், மன அமைதி குறைவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. | 1 | மணி |
| சனி- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- மனக் கலக்கம், குடும்பப் பகை. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. | 4 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| சனி- உறவினர் பகை, கடன் தொல்லை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், பிரயாணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உறவினர் பகை. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| சனி- காரியானுகூலம், தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்





## காகம்

கன்னங்கரிய காகமது
களவாய்ப் பண்டம் திருடிடுமே!
சின்னஞ் சிறிய எங்களையே
சிணுங்கியழவும் செய்திடுமே!

கூடியொன்றாய்ச் சேர்ந்திடுமே!
குப்பை கூளம் உண்டிடுமே!
தேடித் தண்ணீர்தனைக் கண்டு
தினமும் குளிக்கும் காக்கைகளே!

தட்டிப் பறிக்கும் துட்டனைப்போல்
தாவிப் பறித்தே சென்றாலும்
மட்டிட முடியாப் பேருதவி
மனிதருக்காற்றும் காக்கைகளே!


வேற்றுமை தன்னை வேரறுத்து
வேதனையின்றி வாழ்வதற்கே
ஒற்றுமைப்பட்டால் உயர்வென்று
ஒழுக்கம் காட்டும் காக்கைகளே!

அனுப்பியவர்-அ.க. அப்துல் றகுமான், ஏறாவூர்-06.

அன்பென்று கொட்டு முரசே!-மக்கள்
அத்தனை பேரும் நிகராம்:
இன்பங்கள் யாவும் பெருகும்-இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்.
-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

## மணமாற்றம்



ஓர் ஊரில் ஒரு செல்வந்தர் இருந்தார். அவர் நிறைய தான, தருமங்கள் செய்வார். ஆனால் அத்தனையும் ஆடம்பரத்திற்காகவும், அவருக்குப் புகழைத் தேடித் தருவதற்காகவுமே அன்றி உண்மையில் ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் இருக்காது.

தனக்கு இன்னமும் புகழ் கிடைக்க வேண்டும் என்பதற்காக அந்தச் செல்வந்தர் ஓர் அன்ன சத்திரத்தைக் கட்டினார்.

'செல்வந்தர் அன்ன சத்திரம் கட்டியுள்ளார்', என்று பத்திரிகைகள் அவரைப் புகழ்ந்தன. ஆனால் உண்மையில் அந்தச் சத்திரத்தில் வழங்கப்படும் சோறு, முழுவதும் புழுக்களும், கற்களும் கொண்ட பழுதடைந்துபோன அரிசியைக் கொண்டு சமைக்கப்பட்டது.

விலை குறைவாக இருக்கும் இந்த அரிசியை செல்வந்தரே வாங்கி அன்ன சத்திரத்திற்கு எப்போதும் அனுப்பி வைப்பார்.

செல்வந்தருக்கு ஒரு மகன். மகனுக்கு, செல்வந்தர் திருமணம் செய்து வைத்தார். வீட்டுக்கு வந்த மருமகள் மிகவும் தெய்வ பக்தி உடையவள். ஏழை எளியவர்களிடம் அன்பு கொண்டவள்.

தனது மாமனார் அன்ன சத்திரம் ஒன்றைக் கட்டி ஏழைகளுக்கு உணவளிப்பது அறிந்து மிகவும் சந்தோஷப்பட்டாள்.

ஆனால் அன்ன சத்திரத்தில் பழுதடைந்த அரிசியினால், சோறு சமைக்கப்படுவதைக் கண்டு மிகவும் வேதனைப்பட்டாள்.

தனது மாமனாருக்குச் சரியான பாடம் புகட்டத் தீர்மானிக்க எண்ணினாள் மருமகள்.

ஒருநாள் அன்னசத்திரத்திற்கு அனுப்பும் அரிசியில் ஒரு மூட்டை அரிசியை எடுத்து வீட்டில் வைத்தாள். அந்த அரிசியைச் சோறாக்கி மாமனாருக்குப் பரிமாறினாள்.

மாமனார் மிகவும் பசியுடன் சாப்பிடப் போனவர் ஒரு கவளம் சோற்றை எடுத்து வாயில் வைத்ததும் "த்தூ. தூ", என்று துப்பினார்.

"வீடு நிறைய நல்ல அரிசியை வாங்கி வைத்திருக்கிறேன். அப்படியிருக்க இந்த நாற்ற அரிசி உனக்கு எங்கிருந்து கிடைத்தது?" என்று கேட்டார் செல்வந்தர்.

"நாம் இந்த உலகத்தில் ஏழைகளுக்கு என்ன கொடுக்கின்றோமோ, அதுதான் பரலோகத்தில் நமக்கும் கிடைக்கும் என்று பெரியவர்கள் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன்.

நீங்கள் ஏழைகளுக்கு பழுதடைந்த அரிசிச் சோற்றைக் கொடுப்பதால் உங்களுக்கும் பரலோகத்தில் பழுதடைந்த அரிசிச் சோறுதான் கிடைக்கும். ஆகவே அதை இப்போதே சாப்பிட்டுப் பழகினால்தானே பரலோகத்தில் சாப்பிட முடியும். அதனால் தான் இன்றிலிருந்து பழுதடைந்த அரிசியைச் சமைக்க ஆரம்பித்திருக்கிறேன்!" என்றாள் மருமகள்.

மருமகள் சொல்லியதைக் கேட்டுச் சற்றே திடுக்கிட்டார் செல்வந்தர். அன்றே அன்ன சத்திரத்தில் இருந்த பழுதடைந்த அரிசி மூட்டைகளைத் தூக்கி வீசிவிட்டு நல்ல அரிசியை வழங்கினார்.

அத்துடன் புகழுக்காகத் தான தருமங்களைச் செய்யாமல், உண்மையாகவே மற்றவர்களுக்கு உதவி புரியலானார்.

## வாரம் ஒரு நாடு



## சாலமன் தீவுகள்

**தலைநகர்**-ஹொனியாரா
**பரப்பு**-29,758 சதுர கிலோமீட்டர்
**மக்கள் தொகை**-3.6 இலட்சம்
**மொழி**-ஆங்கிலம், பிட்சின் ஆங்கிலம், வட்டார வழக்குகள்.
**எழுத்தறிவு**-60%
**சமயம்**-கிறிஸ்தவம்
**நாணயம்**- சாலமன் தீவு டொலர்
**தனிநபர் வருமானம்**-710டொலர்

**அமைவிடம்:**
தென்மேற்கு பசிபிக் கடலில் பப்புவா நியூகினியின் கிழக்கே சாலமன் தீவுகள் அமைந்துள்ளன.

**வரலாறு:**
மெலனீஸியர்களை மிகுதியாகக் கொண்ட சாலமன் தீவுகள் ஆரம்பத்தில் பிரிட்டனின் பொறுப்பில் இருந்தது. 1978ல் பிரிட்டனிடமிருந்து சுதந்திரமடைந்தது. 38 உறுப்பினர்கள் கொண்ட அசெம்பிளி உடையது.

**பொருளாதாரம்:**
மீன்பிடித்தல் முக்கியதொழில். நெல் முக்கிய விவசாய உற்பத்திப் பொருள். கொப்பரா, மீன் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கின்றது.

## மூன்றாவது கண்



- **மூன்றாவது கண் என்றால் என்ன?**
முளையில் உள்ள பைனியல் சுரப்பியின் மற்றொரு பெயர் இது.
- **இது மூளையில் எங்கே அமைந்துள்ளது?**
மூளையின் நடுப்பகுதியின் அடிமட்டத்தில் உள்ளது.
- **இதன்வேலை என்ன?**
இன்னமும் உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் இந்தச் சுரப்பிநீர் உடல் சரியாக இயங்க உதவுவதாகக் கூறப்படுகின்றது.
- **இதை மூன்றாவது கண் என்று கூறக் காரணம் என்ன?**
முற்காலத்தில் உயிரினங்களுக்கு மூன்று கண்கள் இருந்திருக்கின்றன. நாளாக நாளாக அந்த மூன்றாவது கண் தலையினுள்ளே சென்று திசுக்களால் மூடப்பட்டு விட்டது. அதுதான் பைனியல் சுரப்பி என்ற கருத்து சில விஞ்ஞானிகளிடையே உள்ளது.
- **இப்போது வாழும் உயிரினங்களில் எதற்கு மூன்றாவது கண் உள்ளது?**
'டுயாடுரா' என்ற ஓணானுக்கு மூன்று கண்கள் உள்ளன. இந்த ஓணான்கள் நியூஸிலாந்து நாட்டில் உள்ளன. இதன்மூன்றாவது கண்ணில் விழித்திரை, கண்வில்லை ஆகியனவை உள்ளன. ஆனால், மூன்றாவது கண் மற்றக் கண்களைப் போல் பூரண வளர்ச்சி பெறவில்லை.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 07.12.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 169
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 167

பரிசுக்குரியவர்:
செல்வன் எம். பர்ஸான்,
பெரியமுல்லை, நீர்கொழும்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வி எஸ். சத்தியகலா, நு/டயகம சிங்கள பாடசாலை,டயகம. | செல்வி ஜானகி கணேசலிங்கம், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. |
| ஹஸ்னி முபாரக், மின்ஹாத் கனிஷ்ட வித்., யோனகபுர,டிக்வெல்ல. | குணசீலன் ஜயந்தன், கார்மேல் பாத்திமா கல்லூரி, கல்முனை. |
| செனே ஆசீர்வாதம், சென். ஜோசப் கல்லூரி, மருதானை. | செல்வி எஸ். அர்ச்சனா, புனித சிசிலியா மகாவித்தியாலயம், மட்டக்களப்பு. |
| செல்வி ஜூலியட் கொஸ்டா, ஜிந்துபிட்டித் தெரு, கொழும்பு-13. | பா. சசிகுமார், ந/கொட்டகலை த.ம.வி., கொட்டகலை. |
| வி. ஜெயந்தினி, மாதர் வீதி, நொச்சிமுனை, மட்டக்களப்பு. | செல்வி எஸ்.எம். சியாதா, தமிழ் மகளிர் வித்தியாலயம்,பதுளை. |

## பொண்டா கரடி

பொண்டா இனக் கரடிகள் சீனாவில் உள்ளன. குழந்தைகள் விரும்பி விளையாடும் பொம்மை போன்றது இந்த பொண்டாக் கரடி. மனிதர்களைக் கண்டால் வெறுக்கும் இது, மூர்க்கமாகப் போராடும் ஆபத்தான மிருகம். முதலில் இப்படி ஒரு பிராணி இருப்பதையே யாரும் நம்பவில்லை. 1869ல் சீனாவுக்குச் சென்ற மதகுருமார் இதன் தோலையும், எலும்புகளையும் அனுப்பி வைத்தார்கள். ஆனால் நம்பிக்கை ஏற்படவில்லை. உயிரோடு ஒரு பொண்டாவையும் பிடிக்க முடியவில்லை. 1937ல் தான் உயிரோடு ஒரு பொண்டாவைப் பிடித்துக் காட்சிப் பொருளாக்கி மக்களை நம்பச்செய்தார்கள்.

வேடிக்கையான தோற்றமுடைய இதனை யாரும் தொடமுடியாது. ரோமங்களுக்குள் புதைந்திருக்கும் இதன் நகங்கள் பிளேட்டின் கூர்மை கொண்டவை. அபாயமான காயங்களை இவை உண்டாக்கும். இமயமலைத் தொடர் 6000த்திலிருந்து 12,000அடி உயரமுள்ள மலைச்சரிவுகளில் இருக்கும் காடுகளில் வாழ்கின்றன. உறுதியான தாடைகள். கடித்தால் இலேசில் விடுபட முடியாது. கூரான பற்களைக் கொண்டுள்ள பொண்டா படுவேகமாக ஓடக்கூடியது.

ஆண் பொண்டாக்கள் குட்டிப் பொண்டாக்களைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளும். பெண் பொண்டாவை விட்டு விலகாது.



பெரும் பொழுதை மரங்களின் மீதே கழிக்கும். அவசியமானால் தான் கீழே வரும். தாவர உணவான, பழங்கள், இலைகளைத்தான் உண்ணும். மாரி காலத்தில் இவை குட்டி போடும். நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் முழு வளர்ச்சி அடையும். நன்கு வளர்ந்த பொண்டாக்கரடியின் நிறை 300 இறாத்தல் இருக்கும்.

## நீளமான புகையிரதப் பாதை

புகையிரத வண்டி உங்களைத் தாண்டிப்போகும்போது, அதில் எத்தனை பெட்டிகள் உள்ளன என்று எண்ணுவது உங்களுக்கெல்லாம் ஒரு வேடிக்கை. பயணிகள் புகையிரதத்தை விட, பொருட்களைக் கொண்டு செல்லும் புகையிரதத்தில் பெட்டிகள் அதிகமாக இருக்கும். மிக நீளமான புகையிரதத்தில் 100 பெட்டிகள் இருந்தால் ஆச்சரியமாக இருக்கும் அல்லவா?

1967ம் ஆண்டில் மேற்கு வேர்ஜினியாவில் (அமெரிக்கா) 150 மைல்கள் தூரத்திற்கு பொருட்களை ஏற்றிச் செல்லும் ஒரு வண்டி ஓடியது. 500 பெட்டிகள், 6 எஞ்சின்கள் கொண்ட இந்தப் புகையிரதத்தின் நீளம் 4 மைல்கள்.

உலகின் மிக நீண்ட புகையிரதப்பாதை எது தெரியுமா? ரஷ்யாவில் உள்ள டிரான்ஸ் சைபீரியன் புகையிரதப் பாதைதான் மொஸ்கோவில் இருந்து பசிபிக் கடலுக்கு 5864 மைல்கள் நீளமானது. இந்தத் தூரத்திற்குச் செல்வதற்கு எட்டு நாட்கள் பிடிக்கும்.




## விடுகதைகளும் விடைகளும்

1. பிணம் வேகும் துணி வேகாது.
அது என்ன்?
• கருவாடு • இட்லி

2. அரை சாண் ராணியிடம் ஆயிரம் முத்துக்கள்.
அவள் யார்?
• மாதுளம் பழம் • வெண்டிக்காய்

3. வெள்ளைக்காரனுக்கு மஞ்சள் சட்டை.
அது என்ன?
• வாழைப்பழம் • தீக்குச்சி

4. தங்கப்பழம்- தின்ன முடியாது.
அது என்ன?
• எலுமிச்சம்பழம் • தீக்கங்கு

5. பொட்டி நிறைய பொலிசு (பொலிஸ்).
அது என்ன?
• தேன்கூடு • தீப்பெட்டி

6. காளை கட்டிக் கிடக்கு, கயிறு ஓடிக்கிடக்கு.
அது என்ன?
• யானை • பூசணிக்காய்

7. ஆயிரம் பேர் சேர்ந்து கட்டிய மண்டபம்.
ஒருவன் கண்பட்டு உடைந்தது.
அது என்ன?
• பானை • தேன்கூடு

8. ஓடுகிற குதிரைக்கு விலா எல்லாம் ஓட்டை.
அது என்ன?
• ரயில் • ஜன்னல்

9. குப்பை தின்பான், கூளம் தின்பான் தண்ணீரைக் கண்டால் செத்துக் கிடப்பான்.
அது என்ன?
•கழுதை •தீ

### விடைகள்

1. இட்லி
2. வெண்டிக்காய்
3. வாழைப்பழம்
4. தீக்கங்கு
5. தேன்கூடு
6. பூசணிக்காய்.
7. தேன்கூடு
8. ரயில்
9. தீ

தொகுப்பு:- ஏ.அகல்யா.




www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## இதுவரை

அவர்கள் இளம் காதலர்கள்
ஆனந்த்-மல்லிகா.
இருவரும் சந்தோசமாக இருக்க
தனியான மலைப்பகுதிக்குச் சென்றனர்.
அங்கே புதர் ஒன்றுக்குள்
ஒரு பிணம் கிடக்கிறது.
ஆனந்த் பொலிசாருக்கு அறிவிக்கிறான்.
பொலிசார் வருகின்றனர். அது ஓர் ஆண் பிணம்.
கொல்லப்பட்டவர் ஷர்மா என்று கண்டறிந்து
அவரது வீட்டுக்குச்சென்று
அவர் மனைவியிடம் விசாரிக்கிறார்கள்.
மனைவி பெயர் அனிதா.
ஷர்மாவின் இரண்டாவது மனைவி.

இனி...

# அனிதா இரண்டாம் மனைவி 03

"மிஸஸ் ஷர்மா, நான் முக்கியமாகக் கேட்க வேண்டியது இது ஒன்று தான்: உங்கள் கணவரின் தொழில் மூலமாகவோ அல்லது அவர் சொத்து மூலமாகவோ அவருக்கு எதிரி யாராவது உண்டா? அல்லது அவர் இறந்தால் பலனடையக்கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா?"

"எனக்குத் தெரியாது."

"மிஸ்டர் பாஸ்கர் உங்களுக்கு?"

"எனக்குக் கொஞ்சம் தெரியும். அவர் சொத்து முழுவதும் சொந்தமாகச் சம்பாதித்தது. அதில் ஏதும் விவகாரமோ சண்டையோ கிடையாது. அவர் உயில் எழுதி வைத்திருக்கிறார். அது எனக்குத் தெரியும். நான் தான் வக்கீலை அழைத்து வந்தேன். ஆனால் உயிலின் விவரம் எனக்குத் தெரியாது."

"அதைத் தெரிந்து கொள்வதில் ஏதும் கஷ்டம் இருக்காது, அவருக்கு மகன் கிடையாதா?"

"இல்லை."

அனிதா கூறினாள்: "அவர் என்னை மிகவும் அன்பாக நடத்தினார். என்மேல் உயிரை வைத்திருந்தார்... இன்ஸ்பெக்டர், அவர் ரொம்ப நல்லவர். ஒருவருக்கும் கெடுதல் நினைக்காதவர். அவருக்கு ஏன் இப்படிப்பட்ட மரணம் சம்பவிக்க வேண்டும்? எத்தனை காயங்கள்! எத்தனை காயங்கள்! அம்மா! அம்மா!" அனிதாவின் கண்கள் மூடின. தலை பின்புறம் சாய்ந்து அப்படியே நின்றது. அவள் கண்களில் கண்ணீர் துளிகள் ஜொலித்தன. மேலே விசிறி மெல்லச் சுற்றிக் கொண்டிருக்க அவள் ஸாரி லேசாக அசைந்தது.



மீனாட்சி அருகில் வந்து அவளை அணைத்து சரிப்படுத்தினாள்.

"பாஸ்கர், கொஞ்சம் என்னுடன் வாருங்கள்," என்றார் இன்ஸ்பெக்டர்.

கீழே இறங்கி வந்ததும் இன்ஸ்பெக்டர் ராஜேஷ் சிகரெட் குடிக்க மிக விரும்பினார். பாஸ்கரிடம் அனுமதி கேட்டு, சிகரெட் பெட்டியை எடுத்துத் திறந்து பாஸ்கரிடம் நீட்டி-"நான் குடிப்பதில்லை...." தனக்கென்று எடுத்துக் கொண்டு, தட்டி, உதட்டில் பொருத்திப் பற்றவைத்து ஓர் இழுப்பு இழுத்து சுவாசப்பைக்குள் புகை மேகம் பரவியதும் தான் அவர் படபடப்பு அடங்கியது.

வீட்டின் பின்புறத்தில் தனியாக இருந்தது அந்தச் சிறிய வீடு. ஒரே ஆள்தான் வசிக்கலாம்.

அதன் கதவு திறந்திருந்தது. உள்ளே அறை தெரிந்தது. இடது பக்கம் ஒரு சமையல் அறையும் அடுத்து சிறிய குளியலறையும், மற்றத் தேவைக்கான அறையும் வரிசையாக இருந்தன. பின்புறம் சிறிய தோட்டம் இருந்தது.

"இங்கேதான் கோவிந்த் வசித்து வந்தான்," என்றான் பாஸ்கர்.

அந்த அறையில் ஓர் அலமாரி இருந்தது. சுவரில் இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனின் ஒரு காலண்டர் தொங்கியது. அலமாரியில் விஷ்ணுபடம், ஊதுவத்தி பாக்கெட், காய்ந்த பூக்கள், ரசம் போன கண்ணாடி. அலமாரியின் கீழ்த் தட்டில் ஒரு தகர டிரங்க்.

இன்ஸ்பெக்டர் அந்த டிரங்க் பெட்டியைத் திறந்தார். ஒழுங்காக கதர்ச் சட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இரண்டு காக்கி பாண்ட், ஒரு நோட் புத்தகம், சில இந்தி நாவல்கள், ஒரு பேனா.

"ம் ஹூம்," என்றார்.

"என்ன தேடுகிறீர்கள்?"

"அவன் போட்டோ... வேண்டும், கிடைக்குமா?"

"போட்டோ... போட்டோ...." பாஸ்கர் யோசித்தான். "முயற்சி செய்கிறேன்; குடும்ப ஆல்பத்தில் ஏதாவது ஒரு போட்டோவில் இருக்கலாம்."

"கோவிந்த் பிரம்மச்சாரி?"

"ஆம்."

"எத்தனை வயதிருக்கும்?"

"நாற்பது நாற்பத்தைந்து."

"எந்த ஊர்க்காரன்?"

"உத்தரபிரதேஷ் என நினைக்கிறேன். ஆனால் அவன் ரொம்ப நாளாக இந்தக் குடும்பத்துடன் இருக்கிறான். அவன் அப்பா இவர்களுடன் வேலை செய்து கொண்டிருந்தான். அப்பொழுது இந்தக் குடும்பம் படேல் நகரில் இருந்தது. இவ்வளவு செல்வாக்கும் இல்லை. ஷர்மா கடுமையாக உழைப்பவர். அதிர்ஷ்டக்காரர். தொட்டதெல்லம் தங்கமாக மாற்றினார். இந்த வீடு புதிதாகக் கட்டி வந்து இரண்டு வருஷம்தான் ஆகிறது. இது அவருடைய கனவு வீடு-தாஜ்மகால்."

"முதல் மனைவிக்கா, இரண்டாம் மனைவிக்கா?"

"ஓ.எஸ். நீங்கள் திருமதி அனிதா ஷர்மாவைப் பற்றிக் கேட்க விரும்புகிறீர்கள்?"

"ஆம்."

"அவர் அவளை எங்கே- எப்படிச் சந்தித்தார் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. கல்யாணம் நடந்து சரியாக இரண்டரை வருஷங்கள் ஆகிறது. அவருக்கு அவளிடம் ஒரே மயக்கம், அன்பு என்றால், காதல் என்றால், பாசம் என்றால், போதாது-அப்ஸெஷன்."

"ஷி இஸ் எ பியூட்டிஃபுல் வுமன்."

"ஆம்." பாஸ்கர் தன் நகத்தைப் பார்த்துக் கொண்டான். இன்ஸ்பெக்டரின் பார்வையைத் தவிர்த்தான்.

"மற்றொரு விஷயம். இந்தக் கோவிந்திடம் ஏதாவது ஆயுதம் இருந்ததா?" என்றார் ராஜேஷ்.

"புரியவில்லை."

"இந்தக் கேள்வி உங்களுக்கு வினோதமாகப் படும். கோவிந்திடம் எப்பொழுதாவது ஒரு சவுக்கைப் பார்த்த ஞாபகம் இருக்கிறதா?"

"சவுக்கா?"

"சவுக்கு, சாட்டை, பாருங்கள் மிஸ்டர் பாஸ்கர், இறந்து போன ஷர்மாவின் உடல் முழுவதும் சவுக்கடிக் காயங்கள்-வீறல்கள் இருந்தன...."

"ஓ, நோ!"

❧ ❦ ❀

**லா**யர் கணேஷ் கோபத்திலிருந்தான். அதற்கு இரண்டு மூன்று காரணங்கள்.

அறையைத் துடைத்துப் பெருக்குகிற பெண் வரவில்லை. முல்லாவின் 'ஹிண்டுலா'வில் தூசி படிந்திருந்தது. பையன் கொண்டு வந்து வைத்த டீ வென்னீராக இருந்தது. அவன் பேனா ஒரு முக்கியமான ப்ரீஃப் எழுத உத்தேசத்துடன், உதறி உதறி உதறியும் எழுதவில்லை. 'சே! இதையெல்லாம் பார்த்தால் கல்யாணம் செய்து கொண்டு விடலாம் போலத் தோன்றுகிறது.'

"மோகன்! மோகன் பிசாசே! எங்கே போனாய்?" என்று கத்தினான்.

கதவு திறந்தது.

"யூ ஸில்லி ஃபூல்! என்ன இது டீயா? இல்லை, உன் தாத்தா.....ஐம் ஸோ ஸாரி!"

வந்தது மோகனில்லை, ஒரு பெண்.

"எக்ஸ்ட்ரிம்லி ஸாரி. நான் என் வேலக்காரப் பையனை அழைத்திருந்தேன். உட்காருங்கள். உட்காராதீர்கள். தூசி தட்டுகிறேன்."

"புது விதமாக இருக்கிறது உங்கள் வரவேற்பு," என்ற அந்தப் பெண்ணுக்கு இருபத்திரண்டு வயது இருக்கலாம். தலையை வெட்டி செம்பட்டையாக அலையவிட்டிருந்தாள். கழுத்தில் ஒரே ஒரு பிளாஸ்டிக் மாலை அணிந்திருந்தாள். அந்த மாலையின் வட்டம் ஏதோ ஒரு புராதனக் காசுபோல இருந்தது.

அவள் முகத்தில் இன்னும் குழந்தைத்தனம் பாக்கி இருந்தது. ஆனால் புன்சிரிப்பு இல்லை. கவலை இருந்தது. அந்தப் பெண்ணின் கன்னங்கள் சிவந்திருந்தன. சிவப்புக்குக் காரணம் மேக்கப் இல்லை. குளிர்ந்த வானிலையிலிருந்து உஷ்ணப் பிரதேசத்திற்கு திடீரென்று வந்ததால் ஏற்பட்ட அவசரச் சிவப்பு. அவள் சிரிக்கவில்லை. எனவே அவள் பல் வரிசையைப் பற்றி வர்ணனை கிடைக்கவில்லை. அவள் உதடுகள் மிக மெல்லியதாக இருந்தன. பொதுவாக, எளிதில் உடைந்து விடக்கூடிய கண்ணாடிச் சாதனங்களை ஞாபகப்படுத்தினாள். அவள் உயரத்திற்குச் சற்று மெல்லிய கைகள்.

அவள் அணிந்திருந்த ஸாரி பகட்டில்லாமல் இருந்தது. ஒல்லி என்று சொல்லமுடியாது. சற்று சதை போடலாம். அவள் கண்கள் பெரிதாக இருந்தன. அவை கணேஷைப் பார்த்தன.

"என் பெயர் மோனிக்கா. மிஸ் மோனிக்கா ஷர்மா."

"பிளீஸ்ட் டு மீட் யூ, மிஸ் ஷர்மா. நான் கணேஷ்."

அவள் சுலபமாக அவன் கையைப் பற்றிக் குலுக்கியதிலிருந்து இது கொஞ்சம் மேற்கத்திய தினுசு என்று தெரிந்து கொண்டான். அதே சமயம் அந்தக் கை சற்றுத் தொய்ந்ததிலிருந்து இவள் பயந்திருக்கிறாள் என்றும் தெரிந்து கொண்டான்.

அவள் உட்கார்ந்தாள். அவன் உட்கார்ந்தான்.

"ஐந்து நாட்களுக்கு முன் என் அப்பா இறந்து போய்விட்டார்," என்றாள் அவள்.

"ஓ! அந்த ஷர்மாவா? ஐம் ஸோ ஸாரி. நான் பேப்பரில் படித்தேன். அவர் கொலை செய்யப்பட்டார் என்றும் அவருடைய வேலைக்காரன் ஒருவனைக் காணவில்லை என்றும் அவன் மேல் சந்தேகம் இருப்பதாகவும்...."

"ஆம்."

"அந்த வேலைக்காரன் அகப்பட்டானா?"

"இல்லை."

"கிடைத்துவிடுவான்," என்றான் கணேஷ்.

"நான் அந்த வேலைக்காரனைப் பற்றிப் பேசவரவில்லை."

"எனக்குத் தெரியும்."

"எனக்கு உங்கள் உதவி தேவையாக இருக்கிறது."

"சொல்லுங்கள் செய்கிறேன். பட் ஐ சார்ஜ்."

"என் அப்பா...."

"குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும்....... உங்களை என்னிடம் யார் அனுப்பினார்கள்?"

"விஜய்குமார்."

"ஆர்.என்.வி?"

"ஆம்."

"அவன் அமெரிக்காவில் அல்லவா இருக்கிறான்?"

"நானும் அங்கேதான் இருக்கிறேன். படித்துக் கொண்டிருக்கிறேன். என் அப்பா இறந்த செய்தி கேட்டு நேற்றுத்தான் வந்தேன்!"

"அப்படியா! இப்பொழுது புரிகிறது."

"என்ன?"

"நீங்கள் என் கையைக் குலுக்கியதன் காரணம்."

"இந்தியாவில் அது தப்பு இல்லை?"

"இல்லை சொல்லுங்கள்."

"என் அப்பா இறந்து போன சூழ்நிலை. உங்களுக்குத் தெரியுமா?"

"பேப்பரில் மேலாகப் படித்தேன். பேப்பரை நான் நம்புவதில்லை. நீங்கள் சொல்லுங்கள்".

"சென்ற 18ம் தேதி இரவு என் அப்பா, அவர் வேலைக்காரன் கோவிந்தை அழைத்துக் கொண்டு தன் காரில் ஹிஸ்ஸார் போயிருக்கிறார். ஹிஸ்ஸாரில் அவர் ஃபாக்டரி ஒன்று இருக்கிறது."

"அவரிடம் நிறையப் பணம் இருந்தது இல்லையா?"

"அவரிடம் பதினாலாயிரம் ரூபாய் இருந்தது என்று தெரிகிறது. என் அப்பா ஹிஸ்ஸார் போய்ச் சேரவில்லை. 20ம் திகதி மாலை அவர் உடல் ரிட்ஜ் ரோடு அருகில் ஒரு பார்க்கைத் தாண்டி ஒரு புதரில் கிடக்கிறது. பக்கத்தில் கார் நிற்கிறது. பணம் இல்லை. கோவிந்தைக் காணோம். கோவிந்த் என்பது அந்த வேலைக்காரன் பெயர்......"

"சொல்லுங்கள்," என்று ஊக்கினான் கணேஷ்.

"எனக்குக் கேபின் தாமதமாக வந்தது. என்னிடம் ரெடியாகப் பணம் இல்லை. பணம் சேகரித்து ஏர் இண்டியாவிடம் கெஞ்சி மன்றாடி ஒரு ஸீட் கிடைத்துப் பிளேன் பிடித்து வருவதற்குள் நான்கு தினங்கள் ஆகிவிட்டன. என் அப்பாவை எரித்துவிட்டார்கள். அவர் முகத்தை நான் பார்க்கவில்லை. இரண்டு வருஷத்துக்கு முன் பார்த்த ஞாபகம்தான் பாக்கி."

அந்தப் பெண் மிகவும் பிரயத்தனப் பட்டுத் தன் கண்ணீரை நிறுத்த முயன்றாள். அவள் கண்கள் கண்ணாடியாகிப் பிரதிபலித்தன. தன் ஸாரி முனையால் துடைத்துக் கொண்டாள். கைக்குட்டை கொண்டுவர மறந்திருக்கிறாள்.

கணேஷ், "நான் உங்கள் துக்கத்தை உணர்கிறேன். வார்த்தைகள் சொல்லி ஆறுதல் பெறக்கூடிய துக்கமல்ல. தினங்கள், மாதங்கள், வருஷங்கள் ஆகும்..... ஷால் ஐ கெட் யூ ஸம் டீ?" என்றான்.

"வேண்டாம்!"

"கோல்ட் ட்ரிங்க்?"

"வேண்டாம், மிஸ்டர் தினேஷ்."

"கணேஷ்."

"என் அம்மா என் இளவயதிலேயே இறந்துவிட்டாள். ஏழு வயதிலிருந்து கான்வெண்ட்களிலும் ஹாஸ்டல்களிலுமே நான் இருந்திருக்கிறேன். என் அப்பா பைசாவைத் துரத்திக் கொண்டிருந்த போது நான் சிறிய ஹாஸ்டல் அறைகளில், தலையணைகளில் என் அம்மாவை நினைத்து அழுதிருக்கிறேன். எல்லோருக்கும் வீட்டிலிருந்து தின்பண்டங்கள் வரும். பெட்டிகோட், டிராயர் எல்லாம் தைத்து வரும். கடிதங்கள் வரும். எனக்கு செக்ரட்ரியிடமிருந்து பணம் வரும். எப்பொழுதாவது கார் வரும்.

என் அப்பா ஒரு நிமிஷம் வந்து பார்த்து விட்டுப் போவார். வெள்ளமாகத் துணிகளும் சாக்லெட்டுக்களும் வாரி யிறைத்துவிட்டு அருகில் உள்ள ஏரோட்ரோமுக்கு ஓடுவார். வீட்டில் அவர் இருந்ததில்லை. வீடு என்று எனக்கு ஒன்றும் இருந்ததில்லை.

அப்புறம் வீடு என்று ஏற்பட்டு, அழகாகக் கட்டி, என்னைக் கூட்டிச் சென்று 'இது தான் நம் வீடு. அது நம் நாய், இது நம் சேவகர்கள். இது நம் கார். இது அனிதா' என்று அறிமுகப் படுத்தினார்."

"அனிதா?"

"ஆம். என் அப்பாவின் வெற்றிப் பாதையில் கடைசி மைல் கல் அனிதா. என்னை விட ஆறு வயது பெரியவள். இளம் மனைவி! அவளை நீங்கள் பார்க்க வேண்டும், நம்புவதற்கு. அவ்வளவு அழகானவள். அவள் எப்படி வந்தாள் என்பது எனக்குத் தெரியாது. ஏன் வந்தாள், ஏன் என் அப்பாவை மணம் செய்து கொள்ளச் சம்மதித்தாள் என்பதும் எனக்குத் தெரியாது.

தோட்டத்துக்குப் போய் ஒரு அழகான மலரை விரும்பிப் பறித்துத் தன் கோட் காலரில் பொருத்திக் கொள்வது போல் அவர் அவளை அடைந்தார். எனக்கு என் இளம் வாழ்க்கையில் கிடைத்த ஒரே வீடு அனிதாவின் வீடாகியது. அவள் அழகும் சாமர்த்தியமும் அங்கே பிரதிபலித்தது.

இன்றைக்கு ஸூப் பண்ண வேண்டுமா? அனிதாவைக் கேள். நாய்க்குக் குளிப்பாட்ட வேண்டுமா? அனிதா. அவ்வளவு பேரும் அனிதாவின் அடிமைகள். கழுத்தில் ஒரு சிறிய சங்கிலி போட்டுத் தன் படுக்கை அறையில் என் அப்பாவை அவள் கட்டி வைத்திருந்தாள். இந்த வயசில் அப்பாவுக்கு எவ்வளவு மோகம் அவளிடம் இருந்திருக்கிறது!"

"நீங்கள் அழகாகப் பேசுகிறீர்கள்."

"லுக் கணேஷ், இந்த 'நீங்கள்' எல்லாம் வேண்டாம். எனக்கு யாராவது நட்புத் தருவார்களா என்று அலைகிறேன். நான் உங்களை விடச் சின்னவள்...."

"உன்னை விட என்று சொல். லெட்ஸ் பி ஃப்ரெண்ட்ஸ்."

"சம்மதம்."

"சம்மதம். மேலே சொல்."

(தொடர்ந்து வரும்)

நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன்
-சுஜாதா-

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: என். செல்வகுமார்.
வயது: 22
முகவரி: நுரைச்சோலை போஸ்ட், புலாச்சேனை, புத்தளம்.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வீ.



பெயர்: எம். ரில்வான்.
வயது: 18
முகவரி: 132, மெசஞ்சர் வீதி, கொழும்பு-12.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: ஏ. சந்திரன்.
வயது: 22
முகவரி: P.O.BOX-9954, DOHA, QATAR.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, வானொலி.



பெயர்: டி. மொறின் வில்லியம்.
வயது: 22
முகவரி: 60, வனத்தந்தோனியார் கோவில் வீதி, கரு வேப்பங்கேணி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.



பெயர்: கே. நிஹாரா கலீல்.
வயது: 17
முகவரி: தைக்கா வீதி, வாழைச்சேனை-5.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: ரி. சரித்தீன்.
வயது: 25
முகவரி: P.O.BOX-23809, CODE NO-13119, SAFAT, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். கலீல்.
வயது: 22
முகவரி: 583/பி/1, ஆலையடி தைக்கா வீதி, நிந்தவூர்-6.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஹினான் ரஸீஸ்.
வயது: 21
முகவரி: 30, திக்கலை வீதி, ஹேனமுல்லை, பாணந்துறை.
பொழுதுபோக்கு: வானொலி, பேனா நட்பு.

பெயர்: எம். பாலச்சந்திரன்.
வயது: 29
முகவரி: KLINGEN STR-33, 8005 ZURICH, SWITZERLAND.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை.

பெயர்: எஸ். நித்தியானந்தன்.
வயது: 20
முகவரி: எமிங்கோட் எஸ்டேட், திக்தெனிய, பறகடுவ.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: ஆர். லிங்கேஸ்வரன்.
வயது: 19
முகவரி: 5/5, செரண்டிப் டிவிஷன், குயின்ஸ்டன் குறூப், ஹாலி-எல.
பொழுது போக்கு: பத்திரிகை, நாவல்.

பெயர்: எம். பைஸர்.
வயது: 27
முகவரி: P.O.BOX-5990, RIYADH-11432, K.S.A.
பொழுது போக்கு: வழமையானவை



படிப்பகம்

www.padippakam.com

## மே முதல் நாள்

இன்று இதே நேரத்தில் மனித சுதந்திரத்தைக் காப்பதற்காக நடைபெறும் மகத்தான இறுதிப் போரில் இலட்சோப இலட்சம் மக்கள் சமர்புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான வீரர்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களில் ஒருவன். அவர்களில் ஒருவனாகவே என்றுமிருப்பேன்.

சுதந்திரத்துக்கான இறுதிப்போரில் ஒரு வீரனாயிருப்பது எத்தனை மகத்தான பாக்கியம்?

ஆனால், சாவது வசீகரமான விஷயமல்ல. எனக்கு மூச்சுத் திணறுகிறது.

இருமல் பக்கத்தில் படுத்திருப்பவர்களை எழுப்பிவிடும்போலிருக்கிறது.

தாகமாக இருக்கிறது. ஆனால் தகரக் குவளையில் இருந்த தண்ணீர் முழுவதும் தீர்ந்துவிட்டது.

அதோ அந்த மூலையில், முகம் கழுவும் இடத்தில் தண்ணீர் தாராளமாக இருக்கிறது. இங்கிருந்து கேவலம் ஆறடி தூரத்தில் அது இருக்கிறது.

ஆனால் அங்கு போய்ச் சேர என் உடம்பில் வலுவிருக்கிறதா?

ஓசைப்படாமல் குப்புறப் படுத்தவாறே நகர்கிறேன். மெதுவாக, மிக மெதுவாக....

கடைசியாக அங்கு போய்ச் சேர்கிறேன். தொட்டியிலிருந்து ஆர்வத்துடன் தண்ணீரைக் குடிக்கிறேன்.

போகவும், குடிக்கவும், திரும்பி ஊர்ந்துவரவும் எவ்வளவு நேரமானது என்பது எனக்குத் தெரியாது.

மீண்டும் நினைவு தப்புகிறது. நான் கீழே விழுகிறேன். காரெக் நான் விழுவதைக் கண்டு விட்டான். நான் மூச்சிரைப்பதைப் பார்த்துவிட்டான்.

'அப்பா'விடம் அவன் கூறியதில் ஒரு வார்த்தை மட்டும் காதில் விழுகிறது.

"அப்பா....அப்பா! இவன் மூச்சுவிட முடியாமல் அவதிப்படுகிறான். இவன் சாகப்போகிறானா....? பாவம்!"

காலையில் டாக்டர் வந்தார். என்னைப் பரிசோதித்தார். தலையை திருப்தியாக அசைத்துவிட்டு திரும்பிச் சென்றார்.

வைத்திய அறிக்கையை எடுத்து என் பெயருக்கு முன்பாக நேற்று மாலை எழுதப்பட்டிருந்த 'மரணம்' என்ற வார்த்தையை அடித்துத் திருத்திவிட்டு, ஒரு நிபுணரின் திருப்தியோடு கூறினார்.

"அவனுக்கு ஒரு குதிரையின் வலுவிருக்கிறது."

## சிறை அறை 276

கதவிலிருந்து ஏழடி தூரம் ஜன்னல். ஜன்னலிலிருந்து ஏழடி தூரம் கதவு. அது எனக்கு மனப்பாடம்.

என் நாடு தற்போது சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது.

என் அறைக்கு முன் ஜெர்மன் காவல்காரன் காவலுக்கு நிற்கிறான்.

வெளியில் எங்கேயோ அரசியல் துஷ்டர்கள் தேசத்துரோக வலைகளைப் பின்னிவருகிறார்கள்.

மனிதர்கள் தங்கள் கண்களைத் திறந்துபார்க்க எத்தனை நூற்றாண்டுகள் வேண்டியிருக்கிறது.

தன் சரித்திரகாலத்தில் முன்னேற முயன்ற மனித வர்க்கம் எத்தனை ஆயிரம் சிறைகளில் நுழைந்து அவதியுற்றிருக்கிறது.

முன்னேற்றப்பாதையில் மிகுதியாக உள்ள தூரத்தைக் கடக்க எத்தனை சிறையறைகளைத் தாண்ட வேண்டியிருக்கும்?

இந்தக் காலத்தில் சிறைகள்கூட இயந்திரமயமாக்கப்பட்டிருக்கின்றன.

04



எல்லா அறைகளுக்கும் சூடு தர பெரிய கணப்பு. வாளிக்குப் பதில் ஒவ்வொரு அறையிலும் ஒரு தண்ணீர்க்குழாய். பாதாளச் சாக்கடைக்கு மலத்தைத் தள்ளிச்செல்ல தண்ணீர் விசை.

இவை மட்டுமா? முக்கியமானது என்னவென்றால், காவலாளிகளும், கைதிகளும் கூட இயந்திரங்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

# ஜூலியஸ் பூசிக்

# தூக்கு மேடைக் குறிப்பு

**சிறைக்குள் இருந்து எழுதப்பட்டு காவலாளியின் உதவியுடன் வெளியே கடத்தி பத்திரமாக ஒளித்துவைத்தார்கள். ஹிட்லர் வீழ்ந்த பின்னர் 'தூக்குமேடைக் குறிப்பு' என்ற பெயரில் வெளியாகி பரபரப்பு ஏற்படுத்திய உணர்ச்சிக் காவியம் இது!**

கதவின் பூட்டை ஒரு சாவி திறக்கும். உடனே எல்லாக் கைதிகளும்–தாம் என்ன செய்துகொண்டிருந்தபோதிலும் எல்லாவற்றையும் விட்டுத்தள்ளி எழுவார்கள். 'அட்டென்ஷனில்' விறைப்பாக நிற்பார்கள்.

எல்லோருக்கும் பெரியவன் ஒரே மூச்சில் உரக்கச் சப்தமிட்டு பின்வருமாறு கூறுவான்:

"அட்டென்ஷன்! இரு நூற்று அறுபத்து ஏழாம் இலக்க அறை. மூன்று பேர்! எல்லாம் சரி!"

இலக்கம் 267 தான் எங்கள் அறை. இதில் எல்லா இயந்திரங்களும் சரியாக இயங்கவில்லை. இரண்டுமட்டுமே துள்ளியெழுந்து அட்டென்ஷனில் நிற்கின்றன.

நான் இன்னும் படுத்த படுக்கையிலே கிடக்கின்றேன். ஒரு வாரமாக, இரண்டு வாரமாக, ஒருமாதமாக, ஒன்றரை மாதமாக இவ்வாறு குப்புறப்படுத்தபடியே கிடக்கின்றேன்.

தற்போதுதான் நான் புனர்ஜென்மம் எடுத்துவருகிறேன். தலையைத் திருப்பவும், கையை உயர்த்தவும் தெம்பு வந்துவிட்டது. முழங்கையை ஊன்றி புரண்டு படுக்கக்கூட முடிகிறது.

இந்தக் காலத்தில் என் சிறை அறையில் சில மாறுதல்கள் ஏற்பட்டன.

என்னுடன் வைக்கப்பட்டிருந்த இருவரில் ஒருவன் காரெக்.

திடீரென்று ஒருநாள் அவன் மாயமாய் மறைந்தான்.

அவனது முழுப்பெயர் காரெக் மாலிட்ஸ். தொழிலில் ஒரு மெக்கானிக். எங்கேயோ உள்ள ஒரு இரும்புச் சுரங்கத்தில் வேலை பார்த்தான்.

ஒருநாள் அங்கிருந்து வெடிமருந்துகளை எடுத்துச் சென்றான். அது தலைமறைவுப் போராட்டத்துக்கு அவசியமானது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு அவன் கைது செய்யப்பட்டான்

இப்போது வழக்கு விசாரணைக்காக அவனைக் கொண்டுசென்றுள்ளார்கள்.

விசாரணை பெர்லினில் நடக்கக்கூடும். அவன்கூட ஒரு குழுவே போகிறது. தண்டனை என்னவோ யாருக்குத் தெரியும்?

அவனுக்கு மனைவியும், இரண்டு குழந்தைகளும் இருக்கிறார்கள். அவன்பேரில் அவர்களுக்கு கொள்ளைப் பிரியம்.

காரெக்.. ஓ.. என் காரெக். ஒரு கனிந்த இதயத்தின் நினைவை என்னிடம் விட்டுச் சென்றுவிட்டாய்.

ஒவ்வொருநாளும் என் படுக்கையில் அமர்ந்து எப்படியாவது என்னைச் சாப்பிட வைக்க எத்தனிப்பான்.

கோலாஷ்! அடடா! எப்படி ருசித்தது! 1942ல் பாங்கிராட்ஸ் சிறையில் வசிக்காத உங்களுக்கு அதன் ருசி எப்படித் தெரியும்? உங்களால் இனி அதைத் தெரிந்து கொள்ளவே முடியாது.

இந்தக் கொடூர நாட்களில் எங்கள் வயிறு பசியால் துடித்தபோது, வாரம் ஒரு தடவை குளிப்பதற்கு உடைகளைக் களைந்த சமயம் குழாய் அடியில் நின்ற உருவங்கள் மனிதத் தோல் போர்த்திய எலும்புக் கூடுகளாக தோற்றமளித்தனர்.

உன் நெருங்கிய நண்பனும் உன் உணவை வாயால் முடியாவிட்டாலும், கண்களால் விழுங்கிய போது அது எப்படி ருசித்தது?

இந்தக் கொடூர நாட்களில் வாரம் இருதடவை–ஞாயிறு, வியாழன்களில் ஒவ்வொருவருடைய சட்டியிலும் அகப்பையில் இருந்து ஒரு உருளைக்கிழங்கு விழும். அதன்மேல் ஒரு சிறிய இறைச்சித் துண்டோடு ஒரு கரண்டி கறிக்குழம்பு ஊற்றப்படும். அதுதான் கோலாஷ்!

அதன் ருசியே தனி. ருசிகூட முக்கியமில்லை. அந்த நேரத்தில் அது புரிந்த பணிதான் முக்கியம்.

ஒவ்வொரு நாளும் சாவு 'இதோ, அதோ' என்று எண்ணி மனிதன் ஏங்கி இருக்கும்போது, ஒரு அகப்பை நல்ல கறிக்குழம்புக்கு அவன் எத்தகைய மகத்தான மதிப்பை அளிப்பான் என்று யாருக்குத் தெரியும்?

கோலாஷை நான் மறுத்தபோது காரெக் திகில் அடைந்தான். என்னை சாவு நெருங்கிக் கொண்டிருக்கிறதோ என்று பயந்துபோனான்.

என்னை வாழவைப்பதில் அவனுக்குத்தான் எத்தனை அக்கறை. சக மனிதன்மேல் அன்பு காட்ட போராட்டம்தான் அவனுக்குக் கற்றுக்கொடுத்திருக்க வேண்டும்.

இரவு இரண்டுமணி இருக்கும். அவர்கள் காரெக்கை தூக்கத்தில் இருந்து எழுப்பினார்கள். "ஐந்து நிமிடங்களில் புறப்படவேண்டும்" என்று உத்தரவிட்டார்கள்.

வாழ்வின் முடிவுக்கா, இன்னொரு சிறைக்கா? அல்லது தூக்குமேடைக்கா? யாருக்குத் தெரியும்.

ஏதோ உலாவப்போய்வருவதற்கு தயாராவதுபோல ஐந்து நிமிடங்களில் கிளம்ப வேண்டும் என்றனர்.

அவர்கள் சொல்லிவிட்டால் மறுபேச்சுக்கு இடமில்லை. உடனே புறப்பட வேண்டியதுதான்.

ஐந்து நிமிடங்களில், ஒரு நொடி நேரம் என் படுக்கையில் அமர்ந்தான்! என்தலையை அணைத்தான். உச்சியில் முத்தமிட்டான்.

"போதும் நிறுத்து! இப்படிப்பட்ட உணர்ச்சிகளுக்கு இங்கே இடமில்லை" என்று காவலாளி கத்தினான்.

காரெக் உடனே எழுந்து வெளியே நடந்தான். பூட்டு, பிணைப்பைத் துண்டித்தது. நாங்கள் இருவர் மட்டும் மிஞ்சினோம்.

தோழா! மீண்டும் எப்போதாவது நாம் சந்திப்போமா? அடுத்தபடியாக எங்கள் இருவரில் எவர் முதலில் வெளியே போவார்? எங்கே போவார்?

முதலில் போகப்போகிறவனை இழுத்துப்போக எவன் வருவான்? எஸ்.எஸ். உடுப்பு உடுத்திய தடியனா? அல்லது உடுப்பு உடுத்தாத சாவா?

சிறையில் ஏற்பட்ட முதற்பிரிவு அது. அந்த நேரத்தில் எங்கள் மனதில் உண்டான எண்ணங்களின் எதிரொலியைக் கொண்டே இப்போது எழுதுகிறேன்.

அந்தச் சம்பவத்தின் பின்னர் இப்போது ஒருவருடம் கழிந்துவிட்டது. தோழன் கதவைத் தாண்டியபோது உண்டான எண்ணங்கள் இன்றுவரை எப்படியோ ஒருவிதத்தில் மீண்டும், மீண்டும் உள்ளத்தில் உதித்துக்கொண்டே இருக்கின்றன.

தோழனுக்கு பதில் வேறு ஒரு கைதி வந்தான். பின்னர் அவனும் போனான். இப்படியாகப் பலர் வந்து போனார்கள்.

ஆனால் இன்றுவரை 267ம் இலக்க அறையில் இருப்பவர்கள் நாங்கள் இருவர் மட்டுமே.

'அப்பா' ஒருவர்.

நான் ஒருவன்.

'அப்பா'வுக்கு வயது அறுபது. ஜோஸிப் பேஷக் என்பது அவர் பெயர். ஆசிரியராக வேலை பார்த்து வந்தார். கைதுசெய்யப்பட்ட ஆசிரியர்களில் அவர்தான் எல்லோருக்கும் மூத்தவர்.

எனக்கு எண்பத்து ஐந்து நாட்களுக்கு முன்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

'செக்' நாடு விடுதலையடைந்தவுடன் 'செக்' நாட்டுப் பாடசாலைகளை புனர்நிர்மாணம் செய்வது பற்றி ஒரு திட்டம் தயாரித்தாராம்.

அதனை அவர்கள் எப்படியோ அறிந்துவிட்டார்கள். அது ஜெர்மன் பாராளுமன்றத்துக்கு விரோதமான சதி வேலையாம். அதுதான் அவர் செய்த குற்றம்.

சிறையிலுள்ள மற்றக் கைதிகள் எல்லோரும் எப்படியோ நான் பிழைத்துக் கொண்டதை தெரிந்து கொண்டார்கள்.

உடனே பல வழிகளில் எனக்கு வாழ்த்து அனுப்பத் தொடங்கினார்கள்.

சுவரில் தட்டுவதுமூலம் சிலர் வாழ்த்தினார்கள். உணவு கொண்டுவந்த ஏவல் கைதிகளின் கண்கள் மூலம் சிலர் செய்திகளை அனுப்பினார்கள்.

என் மனைவிக்கு மட்டுமே என்னைப் பற்றி ஒன்றும் தெரியாமல் இருந்தது.

அவள் நான் இருந்த அறைக்குக் கீழே உள்ள மாடியில் ஒரு தனி அறையில் இருந்தாள். அவள்கூட வேறு யாரும் இல்லை.

தன்னந்தனியாக கவலையால் பீடிக்கப்பட்டு வருந்தினாள்.

ஒருநாள் உடற்பயிற்சி சமயத்தில் வேறு ஒரு பெண் கைதி குசு குசுவென்று என்னைப்பற்றி அவளிடம் கூறினாள்.

அடி தாங்க முடியாமல் நான் செத்துவிட்டதாகச் சொன்னாள்.

இந்தச் செய்தி அவளுடைய மூளையைக் கலக்கிவிட்டது. பைத்தியம் பிடித்தவள்போலத் துள்ளி ஓடினாள்.

(தொடர்ந்து வரும்)

---

# இதுவரை

**ஜெர்மன் படைகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடியவர் ஜூலிஸ் பூசிக். செக்கொஸ்லாவாக்கிய நாட்டின் போராளிகளின் தலைவர் அவர்! ஜெர்மன் படையினரால் கைதாகிறார். விசாரணையில் உண்மை சொல்ல மறுக்கிறார். சித்திரவதை தொடர்கிறது. அவரது மனைவியும் கைதாகிறாள். சிறை அறையில் பூசிக்குடன் 'அப்பா', காரெக் என்னும் இரு கைதிகளும் இருக்கின்றனர்.**

---

# பெண்ணும்



## மானுடபுத்ரன்

முதலாவது ஒரு பெண்போகிறாள். இரண்டாவது மூன்றாவது என்று ஆண்கள். நான்காவதாக இவள். கடையினுள் நுழைந்த கையோடு மழை. மழையா அது? கண்டி மழை கேட்கவும் வேண்டுமா? இப்பத்தைய ஸ்டையிலில் ரைற் ரீஷேட் சக ரைற் ஸ்கேட்; முழங்கால் சில்லுக்கு இரண்டு இஞ்சி மேல். பின்பக்கமாக பிளந்து போய் இருந்தது. முகத்தில் லேசான பவுடர். அந்த அழகான உதட்டில் சிவப்பாய் சாயம்.

திடீரென்று தமிழில் பேசினாள். "என்ன ஸ்கேட் இருக்குதே?"

'என்ன இப்ப நீ போட்டுக் கொண்டு இருக்கிற தைப் போலவா?' வாயெடுத்தேன்; கேட்கவில்லை.

யாழ்ப்பாணத் தமிழ். என் தாய் மொழி. "நீங்கள் இஞ்சை எங்கை?" உடுப்பு வியாபாரம் எல்லாம் பின்னர் செய்வோம். "நான் உதிலை மடவளையிலை தான் இருக்கிறன், உங்கடை ஊர்?"

"கல்வியங்காடு! உங்கடை ஊர்?"

"சின்னக்கடை"

ஆகக் கூடினால் இரண்டு மைல்கள் தான் இருக்கும்.

"உங்கடை பேரென்ன?"

"தானு!"

கன்னத்தில் 'பளார்' என்று அறைந்தது போலிருந்தது. தலை சுற்றியது எனக்கு.

கூடவே மின்னலொன்று வானத்தில் வெட்டிப் பறந்தது. இந்தக் காலத்திலை சொல்லப்பயப்படுகிற பெயர்கள் சிலது இருக்கு. மகேந்திரராஜா- பிரபாகரன்- மாறன்-கரிகாலன்-அகிலா- அப்பிடியே "தானு"வும்தான். யாரும் தாய் தகப்பன் ஆசையிலை வைச்ச பேர் எண்டாலும் இப்பத்தை அயிடன்டிக்காட்டிலை இருந்தால் எந்த முகத்தோடை ஆமிக்காரரிட்டை நீட்டுறது.

தானு சிரித்தாள். சிரிக்கும்போது எவ்வளவு அழகு. நான் சிரிக்கவில்லை. யாழ்ப்பாணத்திலையாயிருந்தால் நானும் சிரித்திருப்பேன். சிரித்து சிரித்து சிறையில் வைத்திருந்திருப்பேன்.

'இஞ்சை என்ன செய்யுறியள்?' என்று நான் கேட்கவில்லை. அவளும் சொல்லவில்லை. 'விரைவில் தீப்பற்றக்கூடியது' என்ற சிவப்பு வாசகம் பொறித்த நீண்ட வாயு பவுஸர் ஒன்று றோட்டால் போனது. விர்.. வீர்ரென்று வாகனங்கள் போகின்றன. அட யாருமே வாறான்களில்லை. வேறையொரு வியாபாரத்தில் கொழுவிவிட்டால் தானு போய்விடுவாள். தானு திரும்பவும் என்ன இழவுக்குச் சிரிக்கிறாள்.

"எண்ட! மொணவதை ஓண" நல்லகாலம் ஒருத்தி கடைக்குள் வருகிறாள். அது போதும். ஒண்டும் எடுக்காட்டிலும் பரவாயில்லை; உவள் போகவேணும்.

ஆமிக்காரன் கீமிக்காரன் வந்து இப்ப இருக்கிற நிலமையிலை சந்தேகத்திலை அவளின்ரை அயிடன்ரி காட்டைக் கேக்க அதிலை "தானு- கல்வியங்காடு" சில நேரம் என்ரையை வாங்கிப் பார்த்தானெண்டால் "பாரூக்- யாழ்ப்பாணம்". முட்டுக்காலுக்கும் முடிமயிருக்கும் முடிச்சுப் போட்டுடுவான்.

பேந்து நாலாம் மாடி ஐஞ்சாம் மாடி... நினைக்கவே குறுகிப் போகிறேன்.

'தானு நீ போ இஞ்சையிருந்து போ...' எப்பிடிச் சொல்லுறது. நான் அந்தச் சிங்களப் பெண்ணுடன் வியாபாரத்தில் ஈடுபட, மழை விட்டுவிட்டதா என்று கடைக்கு வெளியே கையை நீட்டிப் பார்த்தாள் தானு.

"அப்பநான் போயிட்டு வாறன்!"

"ஓம்.. ஓம்" வேறையொன்றும் சொல்லவில்லை. "வாறன்" என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம் ஒன்றுமில்லை. இருக்கை பற்றிய அச்சம்.

ஒரு முறை திருகோணமலை போகும் போது செக் பொயின்டில் பெண்கள் வரிசையில் வாட்டசாட்டமான ஒரு தமிழ்ப் பெண்மணி. பொட்டு வைத்து பூச்சூடி... கொழும்பிலிருந்து வந்திருந்தா. அவவைச் செக் பண்ணின ஆமிக்காரப் பொம்பிளை. "பண்டா ஐயா மேஹ எண்ட" கொஞ்சம் குளறிவிட்டுட்டாள். பண்டா ஓடிப்போனான். அவனோடு சேர்ந்து மனிசியின் புருஷனும் ஓடிப்போனார்.

அங்கு ஒன்றுமில்லை. மனிசி இடுப்பில் ஒரு பெல்ட் போட்டு அதில் காசு கொஞ்சம் கூட வைத்திருந்தது மட்டும்தான். பண்டாவும் பயந்து ஆமிப் பொம்பிளையும் பயந்து.... என்ன இம் மாதிரியான அவலத்தனமான அச்சம். மனிதனுக்கு மனிதன் அச்சப்பட்டது. எங்கை போனாலும் இதே அச்சப்பாடு.

நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். "ஆறிலும் சாவு; நூறிலும் சாவு." என்று செவிப்பறை நோக நோக ஆறுமுகம் வாத்தியார் ஐஞ்சாம் வகுப்பில் வைத்துச் சொல்லித் தந்தது இன்னும் நினைவில் நின்றது–

தானுவை அன்று வெறுத்தது பற்றி ஒருவிதமான கையாகாலாததனம் என்று எனக்குள் புகைந்து கொண்டேன். தென்னிலங்கை பற்றிய ஒரு நிலைப்பாடில்லாத வாழ்க்கையில் எனக்கும் தான் வெறுப்பேற்பட்டது.

முடிவெடுத்துக் கொண்டேன்.

தானு மீண்டும் வரவேண்டும். அவளோடு அன்னியோன்யமாகப் பழக வேண்டும். கல்வியங்காட்டிலும் பெரிய கடையிலும் இருந்ததைப் போல...



படிப்பகம்

www.padippakam.com

அந்த ஒலி வந்த திசை நோக்கி தன் தலையை நிமிர்த்தினாள் சாரதா! உச்சியில் தான் பல்லி அடித்தது. உச்சம் பல்லிக்கு அச்சம் இல்லை. தனக்குள் ஒரு நிம்மதிப் பெருமூச்சு.

மெதுவாக அந்த காகித கோவையின் தாட்களை ஒவ்வொன்றாக வேறுபடுத்தினாள். 'நாளையோடு இத்தனை வருடகாலமாக அலைந்தமைக்கான இறுதிநாள்'. என்று எண்ணிய போது, அவள் மனம் பெரியதொரு தும்மலுடு விடுதலையளித்தது.

'பெண் நினைக்க ஆண் தும்மினால் காரியசித்தி.' இதை எண்ணிய போது அவள் இதயம் ஆனந்தித்தது.

இப்போதெல்லாம் சாரதா ஐதீகத்திலே பெரிதளவு நம்பிக்கை வைக்க ஆரம்பித்துவிட்டாள். அதன் காரணம், உரிய காலத்தில் இறையருள் கிட்டாமையா? அல்லது உதவும் மனப்பான்மை மானிடரிடையே மங்கியமையா? அல்லது மலிந்து பெருகும் மரணங்களின் காரணங்களினாலா?– எதையும் திடமாக ஏற்றுக் கொள்ள அவளால் இயலவில்லை.

தன் கண் முன்னால் கணவனை சுவர்ந்து சென்ற காவலர்கள்-பலமாதங்களுக்குப் பின் அப்படி ஒருவரையும் கைதுசெய்யவில்லை எனக் கூறியபின் மரணித்த கணவனுக்காக-கடந்த இரு வருடங்களாக பிரித்து



கனகசபை தேவகடாட்சம்

வைத்திருந்த காகிதங்களை நோக்குகிறாள் சாரதா! மறைந்தவருக்கான நட்ட ஈடு பெறும் பொருட்டு தேவைப்பட்ட ஆவணங்கள் தேவையற்ற ஆவணங்கள் வேண்டப்பட்டமையால், அவள் கடந்த வருட முரடான பாதைகள் எத்தனையோ! அதில் ஏற்பட்ட செலவீனங்கள்- அனாவசிய பயணங்கள்-அவதூறுகள்-மன உளைச்சல்கள்-

கணவனின் இறப்பினால் உண்டான தாக்கத்தைவிட இவைகளினால் ஏற்பட்டவை அதிகமாகப்பட்டது அவளுக்கு!

நாளைக்கு ஆவணங்கள் அனைத்தும் காவலர்கள் தலைமையகத்தில் கையளித்தாகவேண்டும். கவனமாகப் பரீட்சித்து கோவைப்படுத்தினாள் ஒவ்வொன்றாக!

விவாக அத்தாட்சிப்பத்திரம்-அனர்த்தத்தால் அழிந்தவைகளில் ஒன்று! அதில் நிலைக்குற்றி நின்றது அவள் சிந்தை!

இவ்வாவணம் பெற எத்தினை இன்னல்கள்-தன் மகனின் பிறப்புப் பத்திரத்தில் கணவன் பெயரைக் காட்டி உறுதி கோரியும் இந்நாட்டின் சட்டம் இடம் தரவில்லை! பத்திரமும் பெற்றாக வேண்டும்! மெய்யான திருமணத்திற்கு-பொய்யாகப் பெற்ற ஆலய சான்றிதழ்-மெய்யாகக் காட்டியது-எம் நாட்டின் சட்டத்திற்கு!

இறப்புப்பத்திரம்- கிடைக்கப்பெறாத அவள் கணவனின் பூதவுடல்-கிடைத்து அது அடக்கப்பட்டதாக கற்பனை சாட்சிகளால் கிடைக்கப்பெற்ற ஆவணம் அது!

உண்மைகளுக்காக பொய்யான சோடனைகள்-சோதனைகள்! இந்தப் பின்னலை இலகுவாக்க முடியாத அரசையும், எம் அரசியல்வாதிகளையும் எண்ணி அவள் நகைக்காமலில்லை.

அந்த காலை விடியலில், ஆவணங்களுடன் காவலர் தலைமையகத்தில்- அழைப்பின் உத்தரவுக்காய் காத்து நின்றாள் சாரதா. அவளோடு பல விதவைகள்.

காவலர்கள் விசாரணை பற்றி அவர்களுக்குள் கலந்துரையாடல்கள். இறுதியாக அலைச்சல்களால் அனுபவம் பெற்ற ஒரு விதவை அறிவுரை வழங்கினார்!

"உங்கடையவர்ர சாவுக்கு ஆர் காரணம் எண்டு அவனுகள் கேப்பானுகள். அதுக்கு நீங்க ஆர் எண்டு தெரியாது, அது பயங்கரவாதிகளாகத்தான் இருக்க வேண்டும் எண்டு வாக்கு மூலம் கொடுக்கணும். உண்மை சொன்னீங்களோ நட்டஈடும் கிடைக்காது. ஒண்டும் கிடைக்காது."

சாரதாவால் இதைமட்டும் தான் ஜீரணிக்க இயலவில்லை. 'இப்படி அபாண்டமான பொய்யைக் கூறி அதைப் பெறவேண்டுமா?' உண்மை மௌனித்திருந்தது.

அவள் மனம் குமுறியது. ஒரு கணம் பின் நோக்கினாள்! நட்ட ஈட்டிற்காய் கடன்பட்டவைகள்-இந்த ஆவண சேகரிப்புக்காக அவள் செலவிட்டவைகள்.

அவளது பெயர் அழைக்கப்படுகிறது. மௌனமாகப் போகிறாள்

---

"இஞ்சபாருங்கோ! இண்டைக்கி விசாலாட்சி வீட்ட போகவேணும் எண்டு சொன்னனான் அல்லோ?" கனகு அவள் கணவன் கந்தப்பருக்குச் சத்தமாய்க்குரல் கொடுத்தது, சமையல் கட்டிலிருந்து.

"சத்த பொறு வாறன்" என்று உரக்கப் பதிலளித்த கந்தப்பர் மூக்குக் கண்ணாடியை வேட்டித்தலைப்பால் துடைத்துவிட்டுப் பஞ்சாங்கத்தைப் புரட்டினார். பாவிப் போடியின் மகன் கால்மாறி மாப்பிளை வீட்டுக்குப் போக நல்ல நேரம் பார்த்துக்கொண்டிருந்தார் கந்தப்பர்.

உழுந்து வடைவாசம் அவர் மூக்கில் வந்து மோதியது. பஞ்சாங்கத்தை ஒரு பக்கமாகப் போட்டு விட்டுப் புன்முறுவலுடன் குசினிப் பக்கம் போனார். கனகு ஒரு கையால் வடையைத் தட்டிக்கொண்டு மறுகையால் எண்ணைச் சட்டியில் அதைப்போட்டுச் சிலுசிலு என்று சுட்டு இறக்கும் லாவகத்தைப் பார்த்து இரசித்தார்.

"கனகு என்ன விசேஷமெண்டு சொல்லன். ஒரு நாளும் இல்லாம வடகிட எல்லாம்...?" அவள் கவனத்தைத் திருப்பினார் கந்தப்பர். மூலையில் சாத்திவிருந்த திருவலைக் குத்தியை எடுத்து வசதியாகக் காலை மடித்து அதில் குந்தியிருந்தார்.

"இந்தாங்கப்பா! மாங்காய் பச்சடி போட்டிருக்கன். வடயோட திண்டு பாருங்களன் நல்லாயிக்கா எண்டு." கனகு வட்டிலில் இரண்டு வடையைப் பச்சடியுடன் வைத்து நீட்டினாள், கந்தப்பர் வடையைப் பச்சடியுடன் தொட்டுச் சுவைத்தார்.

"கனகு சும்மா சொல்லப்படாது. உப்பும் புளியும் உச்சில அடிச்சாப்ப இருக்கு. வடயும் சூட்டோட சாப்பிட ருசியாத் தானிருக்கு." கனகுக்குச் சந்தோஷம் கொடுப்புக்குள் புரண்டது.

"இஞ்சபாருங்க, கெதியெண்டு வெளிக்கிடுங்கப்பா!

**"இந்தக் கூந்தலோடு கனடாவில் காலம் கழிக்கிறது லேசில்லை..... ஊரோடு ஒத்துப்போகவேண்டியதுதான்"**

விசாலாட்சிக்கு வடயும் பச்சடியும் பாசல் கட்டித்தாறன். என்ர பழைய கூட்டாளி கனகம்மாக்குப் பிறகு கனடாவில இருந்து வந்திருக்கிறா. அவளுக்கு உழுந்து வடயெண்டா உசிர். புளியந்தீவில முந்தி இருந்த வீடு தெரியுந்தானே?" கனகு படபடவென்று ஒரே மூச்சில் சொல்லிமுடித்தாள்.

"ஓமோ அதுதானே பார்த்தன். சோழியன் குடுமி சும்மா ஆடாது. இவ்வளவு கஷ்டத்திலும் கூட்டாளிய நீ மறக்கல்ல" கந்தப்பருக்குச் சிரிப்புத் தாங்கமுடியவில்லை. "சரி சரி பாசலக் கட்டு" என்றவர் எழும்பிப் போனார்.

நீலக் கரைபோட்ட வேட்டியும் சால்வையும் தலைப் பொட்டிக்குள்ளே கிடக்கு." கனகு சொன்னது கந்தப்பரின் காதில் விழுந்தது.

கந்தப்பர் புறப்பட்டுப் போனார். கொழுத்தும் வெயில் அவருடைய வாட்டாச் சிலிப்பரையும் மீறிக் காலைச் சுட்டது. நல்லவேளை தலைக்குப் பாதுகாப்பாகப் பெரிய குடையை விரித்துப் பிடித்திருந்தார். பார்சலைப் பையில், திணித்து அதைத்தோளில் தொங்கப் போட்டிருந்த கந்தப்பர் பழைய நட்பை நினைவில் சுமந்து நடந்தார். கல்லடித் தெருவைக் கண்டுபிடித்ததில் அவருக்குக் கஷ்டமிருக்கவில்லை.

"அன்பகம்; இருபத்திநாலாம் நம்பர்– சரிதான், வீடு வித்தியாசமாய் இருக்கே?" கந்தப்பர் முணுமுணுத்தபடி அழைப்பு மணியை அழுத்தினார். "யாரு கந்தப்பரா? என்னடாப்பா மிச்சங் காலத்துக்குப்பிறகு.. வா, வா!" வாசல் கதவைத்திறந்து வரவேற்றார் விநாயகம்.

கந்தப்பர் கதவடியில் சிலிப்பரைக் கழற்றி வைத்துவிட்டு உள்ளே போய் உட்கார்ந்தார். அவரால் நம்பமுடியவில்லை. வீடே மாறிப்போய் இருந்தது. விதவிதமான பொருட்கள். திரைச் சீலைகள், நில விரிப்புகள், அலங்கார விளக்குகள் அவரை வியப்பிலாழ்த்தியது.

"விசாலாட்சி இங்க வந்துபாரன்," என்று விநாயகம் சத்தம்போட்டுச் சொன்னார். திரைச் சீலையை ஒதுக்கிக்கொண்டு விசாலாட்சி வந்தாள்.

அவள் முதுகில் சாரைப்பாம்பாய் நீண்டு கிடந்த கருங்கூந்தல் கழுத்துவரை ஒட்ட வெட்டப்பட்டிருந்ததைக் கந்தப்பரால் தாங்கமுடியவில்லை. வெளிப்படையாகவே கேட்டுவிட்டார்.

"இந்தக் கூந்தலோட கனடாவில காலங்கழிக்கிறது லேசில்ல.. பாம்பு தின்ற ஊருக்குப் போனா, நடுத்துண்டு நமக்கு, ஊரோட ஒத்துப்போகவேண்டியதுதான்." விசாலாட்சி பதிலளித்தாள். 'கனகுவோட வயல் வரம்பில ஓடிப்பிடிச்சி விளையாடிய விசாலாச்சியா இது?' கந்தப்பர் மனதில் அவசரமாக வந்த நினைவு அங்கேயே அடங்கிப் போயிற்று.

"அது கிடக்கட்டும் விசாலாட்சி, கந்தப்பர் இண்டைக்கிச் சாப்பிட்டுத்தான் போகவேணும்" என்றார் விநாயகம்.

"பிள்ள விசாலாட்சி ஒண்டும் அவதிப்படாத. நான் அவசரமாய் போகவேணும். உன்ரகூட்டாளி கனகம்மாவா உனக்கு வடை புறியமாம் எண்டு தந்தவ." பைக்குள் இருந்த பார்சலை எடுத்து அவளிடம் நீட்டினார்.

"என்ர சுவாமி... கனகு எண்டா கனகுதான்!" விசாலாட்சிக்குத் தலை கால் தெரியாத சந்தோஷம்.

"பார்த்தியா அவ ஒன்னயும் மறக்கல்ல, வடயையும் மறக்கல்ல" விநாயகத்தின் கண்களில் நன்றி பளிச்சிட்டது.

கந்தப்பர், கதிரையில் கிடந்த சால்வையை எடுத்துத் தோளில்போட்டுப் புறப்பட ஆயத்தமானார்.



ரூபராணி

"மணி ரெண்டால கிறுக்கிற்று சாப்பிடாமல் போகவிடமாட்டன்!" என்ற விநாயகம் கந்தப்பரின் சால்வையை இழுத்து மறுபடியும் கதிரையில் போட்டார்.

"இண்டைக்கு வேணாம். இன்னொருநாளைக்கு சாப்பிடுறன்'" என்றார் கந்தப்பர்.

# தீர்மானம்

"நீ என்னடாப்பா இது புறத்திவிடா? உன்ர வீடுமாதிரி.." கந்தப்பர் எவ்வளவோ சொல்லியும் விநாயகம் அவரைப் பிடிவாதமாகச் சாப்பிட வைத்துவிட்டார்.

"சரி பிள்ள நான் பொயிற்றுவாறன். மாமாங்கப் புள்ளையார் தீத்தம் வருகுதுதானே? ரெண்டு பேருமா வீட்ட வந்து நிண்டு போங்க, கனகம்மாக்கும் சந்தோஷமாயிருக்கும்."

கந்தப்பர் அழைப்பு விடுத்து அங்கிருந்து வெளியேறினார். நடையின் வேகத்தைக் கூட்டியவருக்குக் கொஞ்சத் தூரம் சென்றதும் அவருடைய தலை வெடிக்குமாப்போல் வெயில் சுட்டது தெரிந்தது. 'அடடே குடையை விநாயகம் வீட்டில் விட்டு வந்திற்றனே' அப்போதான் கந்தப்பருக்கு ஞாபகம் உதைத்தது. ஓட்டமும் நடையுமாக 'அன்பகத்தை' நோக்கிப் பறந்தார்.

வாசல் கதவு திறந்தே கிடந்தது.

"உங்களுக்குக் கொஞ்சமெண்டான அறிவிருக்கா? சும்மாபாக்க வந்த ஆளைச் சாப்பிடு சாப்பிடு எண்டு என்ன பாடுபட்டியள். உங்களப் போன்ற சென்மங்கள் கனடா என்ன- எங்கபோனாலும் திருந்தவே மாட்டாங்க!"

"வாசலுக்கு வந்த மனுஷனச் சாப்பிடச் சொன்னது குத்தமா? அதுவும் வேற ஆருமில்ல நம்மடபழைய கூட்டாளி!"

"ஆ பெரிய கொடைவள்ளல். வாறவன் போறவனுக்கெல்லாம் அவிச்சுக் கொட்ட நான் ஆளில்ல. கந்தப்பர் வேணாம், வேணாம் எண்டு சொல்லியும் கேட்டீங்களா? அப்பா, உருகிவடிஞ்சீங்களே. பழசுகளையெல்லாம் இழுத்துப்புடிக்க நானொண்டும் பழைய விசாலாட்சி இல்லை. அதையும் தெரிஞ்சிவச்சிக்குங்க!"

உள்ளே இருந்து வாசல்வரை வந்த வாக்கு வாதம் கந்தப்பரின் காதிலும் எட்டத்தான் செய்தது. கந்தப்பர் ஆடிப்போனார். அவமானம் தாங்காது கூனிக்குறுகினார். சாப்பிட்டதெல்லாம் அடிவயிற்றில் 'திகீர்' என்று பற்றி எரிவதுபோல் இருந்தது.

கந்தப்பர் குடையை மறந்தார். வீடு நோக்கி விரைந்தார். இப்போது அவருக்குத் தலைச்சூடு தெரியவில்லை. அவர் உள்ளம் உலைக்களமாய்க் கொதித்தது. 'உயிரே போனாலும் இனிமேல் யார் வீட்டிலும் வாய் நனைக்கப்போவதில்லை' என்ற தீர்மானம் அதில் உறுதியாக ஒலித்தது.

---

# கனவும் நிஜமும்

**"எல்லாமே இயந்திரம். வேகமான ஓட்டம். நாடகத்து கதாபாத்திரங்கள் போலத்தான் ஐரோப்பிய சீவியம்"**

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் உயிரிழந்தது விமானம். அம்புக்குறிகள் வழிகாட்டப் பிரமாண்டமான கண்ணாடிக் கட்டிடத்தில் நடந்து வெளியேறியபோது இனம் புரியாத அச்சம் பரவிக்கொண்டது.

இமிக்கிரேஷனில், கஸ்டம்ஸில் என்று பத்து நிமிடம் ஓடிற்று. மிரண்டு தவித்து சட்டென மலர்ந்தேன்-எதிரே மலர்ச்செண்டும் ஓவர்கோட்டுமாய் க்ரேரெயர் அருகில் பிரணவி.

'ஹாய்' 'ஹாய்' சட்டென ஒரு பிரணவியின் அழுந்திய முத்தம்- க்ரேரெயரின் இதமான கை குலுக்கல். "எப்படியிருக்கிறாய்டி?"

"மிகக் களைப்பாக..."

"ஊரெல்லாம் உறவெல்லாம்?"

"சுடலையாக-அகதிகளாக...!"

"என்னடீது வந்ததுமே மூட் ஒளட்டாகிற்ற?"

"நோ யதார்த்தம்டீ! ஐஞ்சு லெட்சம் பேர் தெருவில தவிக்கிறாங்க!"

மூவரும் மௌனமாக விமான நிலைய டெர்மினலை விட்டு வெளியேறினோம்.

சீதோஷ்ண மாற்றத்தில் சிலிர்த்துப் போனேன். உள்ளுக்குள்ளே குளிர்படிந்து இயக்கம் ஸ்தம்பிப்பது போலவொரு உணர்வு.

"டாக் ஒவ் த ற்ரவுண்ல சுபாஷ் அண்ணா நிக்கிறான். எப்போ சந்திப்போம்?"

"வசதிப்பட்டால்!"

"என்னடி பேயறைஞ்ச மாதிரியாயிட்ட?"

"ஊர்ல சைக்கிளே உதைக்காத நீ லண்டன்ல காரோடுற வேகத்தைப் பார்க்கிறன்- எவ்ளோ மாற்றம்!"

"இன்டர்நாஷனல் அகதியென்று ஆனப் புறம்- இன்டர்நாஷனல் லைசென்ஸ்- இன்டர்நாஷனல் கல்ச்சர். தற்ஸ் ஓல் டியர்." ஆச்சரியம் விலகாமலே வெளியில் விழி விரித்துப் புதுமையான பயண அனுபவத்தை இரசித்தேன்.

மிகச் சிக்கலான வாகனப்போக்குவரத்து. சீரான பாதைகள் வழிகாட்டும் பாதாதைகள், திணறவைக்கும் பெப்ஸி, கோக் விளம்பரங்கள். அச்சத்தோடு பிரணவியின்வேகம் பார்த்தேன். முள் அறுபது தாண்டியிருந்தது.

"இங்கிலாந்திலே இது சாதாரண வேகம்தான்- என் வழமையான வேகம். மெல்லப்போனால் மிதிபட வேண்டிவரும் ஸோ....மக்ஸிமம் வரை வேகமாய்ப் போறது புத்திசாலித்தனம்."

'வேகம்.....வேகம். ஐரோப்பிய நாடுகளில் தமிழகதிகளின் வாழ்க்கையே பந்தயக் குதிரைகள் போல, சே....காலத்தின் நிர்ப்பந்தம்- தாயகத்தின் யுத்தத்தின் கொடூரம்'. வேதனைப் பெருமூச்சு வெளிக்கிளம்பிற்று.

பழுப்புக்கலந்து பளபளத்த தேம்ஸ் நதியைப் பிரமிப்போடு பார்க்க முடியவில்லை. 'இதென்ன பெரீய்ய தேம்ஸ்-இதைவிட எத்தனை பளிங்குபோல நதிகள் என் தாயகத்தில்...' எனும் ஒப்பீடு தலைதூக்கிற்று.

எங்குமே சீமெந்து காடாக வியாபித்திருந்த சந்து பொந்துக்குள் கார் நுழைந்து உயிரிழந்து, பட்டின் அழுத்தப்பட விசாலமான கதவு வாய் பிளந்தது. என்னிடம்



ஆத்மராஜா றூத் சந்திரிக்கா

விடைபெற்று க்ரேரெயர் எனும் ஜேனலிஸ்ற் வெளியேற நானும் பிரணவியும் 'ஊர் அளப்பில்' கலந்தோம்.

"சுபன், சாவித்ரி, குமணன், கண்ணன், ராகவ், தினேஷ், பாபு அண்ணா, கவிதா, இந்திரனண்ணை, சந்திரன் எல்லாரும் எப்படியிருக்கினம் பிரணவி?"

"ஏதோ காலத்தை ஓட்டிட்டு"

"என்ன வேலை செய்கினம்?"

"ஏதோ ஜொப்"

"ஏதென்றால்?"

"மண்டு-வெளியில இருக்கிறவங்களிட்ட என்ன வேலைன்னு மட்டும் கேக்கக்கூடாது கண்ணம்மா- ஏதோ கவர்ணர், ஹைகிளாஸ் ஜொப் என்று நினைக்கிறது தப்பும்மா- ஏதோ சம்பாத்யம்...ஏதோ வாழ்க்கை- தற்ஸ் ஓல் நத்திங் மோர்!" சட்டென என் மனம் நொருங்கியது.

"எல்லாமே இயந்திரம்- வேகமான ஓட்டம் நாடகத்து கதாபாத்திரங்கள் போலத்தான் ஐரோப்பியச் சீவியம் இந்தப் பளபளப்பும், பென்ஸும், ஓவர்கோட்டும், ட்டியூலிப் கவர்ச்சியும் கூட பொய்மைதாண்டி! பாச பந்தம், பக்கத்தில இருந்து பணிவிடை பண்ற யோகமெல்லாம் நம்ம மண்லதாண்டி இதோ வேலைக்குப் புறப்படுறேன். சாப்பிடு-தூங்கு ஏழிமோனிங் வந்திர்ரேன்"

பிரணவி போய் வெகுநேரமாகியும் நான் இயல்புக்குத் திரும்பவில்லை.

ஐந்து வயதுக்குழந்தை. தாய்-தந்தையின் அரவணைப்பின்றி தனியே தூங்கிக் கொண்டிருந்தது. அருகே போய்ப்பார்த்தேன். உடம்பு தணலாய் கொதித்தது குழந்தைக்கு.

பிரணவிக்கு கோல் போட்டு விடயம் சொல்ல "ஐ...சீ...." என்றொரு இயந்திரத்தனமான பாசம் கண்டு அதிர்ந்தேன். பத்து நிமிடத்தில் ஒரு டொக்டர் வந்து போனார். அவ்வளவுதான். இரண்டு வாரங்களில் எல்லாமே புரிபட ஆரம்பித்தது.

"பரபரப்பு.....சே வாழ்க்கையே வெறுத்துப்போச்சுது" என்றாள் பிரணவி. சிகிச்சை பெற்றுக் கொண்டு குழந்தை தனியே ஹொஸ்பிற்றலில் தூங்க- பெற்றோர் பதறியடித்து உழைக்க ஓடிக் கொண்டிருக்கிறார்கள். 'சே இதென்ன கேடு? யாருக்காக உழைக்கிறார்களோ?' வேதனைப்பட்டேன்.

தினேஷைப் பார்த்தேன். ஐந்து நிமிடம் தரித்து நின்றான். ஆறாவது நிமிடத்தில் "வரேன்- வண் மினிற் பிந்தினால் ஒருநாள் சம்பளம் அம்போ...." என்று பரபரத்து ஓடினான். 'ஊரில் இருபத்துநான்கு மணி நேரமும் அரட்டையடித்துக் கொண்டிருக்கும் தினேஷா இது.?' வியந்தேன்.

சீப்ஸைட்டில் சுபன் நின்ற நிலை பார்த்து மயங்கிவிழப் போனேன்- ஒரு ஹிப்பியாய் சுபன்- ஒரு இத்தாலிய ரெஸ்டோரண்டில் சாப்பாடு பரிமாறிக்கொண்டு; எடுபிடியாய் கண்ணன்; கில்பனில் தெருப்பைய னாய்- நமணன்; மக்மாஹன் ஸ்றீட்டில் ஒரு வெள்ளைக்கார விடலையோடு-கவிதா; இந்திய ரெஸ்டோரண்டில் லிப்ஸ்டிக் இதழ் விரித்து செயற்கையாய் சிரித்து றிஸப்ஷனிஸ்டாக-பிராமின் சாவித்ரி-எல்லா முகங்களையும் பார்க்கச் சகியாமல் பக்கிங்கஹாம் ஏரியா, வைற்ஹோல், ஹைட்பாக், வெஸ்மினிஸ்டர் எல்லாம் சுற்றி முடிய மீண்டும் கார் ஒரு பிரமாண்டமான கோட்டை வாசலில் நுழைந் தது.

பச்சைப் புல்வெளி.....சீமெந்து கோபுரங்கள், நிறைய்ய ற்டூறிஸ்டுகள்- பெப்ஸி, கோக், ஐஸ்கிறீம் சப்ளையில் ராகவ் பதறிப் போனேன். வெள்ளை யூனிபோமில் ஒரு சர்வராக ஓடி வந்தான் பாபு அண்ணா.

"பாபு அண்ணா" அலறியே விட்டேன்.

"டிகிறி முடிச்சு டியூஷன்ல அள்ளிட்டு வாழ்ந்த உனக்கேனிந்த சீரழிவு அண்ணா?"

"உயிரோட வாழ்ந்திட்டிருக்கேன். அந்த ஒரேயொரு உத்தரவாதமும் அங்கில்லையே!"

"சரிதான் என்னால ஜீரணிக்க முடியேல்லையே உங்க அவஸ்தைகள," அழுது விட்டேன்.

"வருந்தி உழைக்கிறோம். வேலை செய்திட்டுப் படிக்கிறோம்- பொய்யான பூரிப்போடு முகம்காட்டுறோம். போய்ச் சொல்லு எங்கட அவஸ்தைகள-தூரத்துப் பச்சையின் வெறுமைகள!" என்றான்.

புறப்பட ஆயத்தமாக, க்ரேரெயர் கேட்டார். "டு யூ லைக் இங்லண்ட்?" நான் சோகமாய்ச் சிரித்தேன். என் சிரிப்பின் அர்த்தம் புரியாமல் விழித்தார் அவர்.

---

# சத்யா 'கட்'

அனு முகத்தைச் சுளித்தாள்.

"என்னங்க இது.....எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கல."

"இப்போ என்னை என்ன செய்யச் சொல்றே?"

"வெட்டிடுங்க."

அனு கூறியதைக் கேட்ட பாண்டியனுக்கு கோபம் கலந்து சோகமாய் இருந்தது. "ரெண்டு வருஷமா ஆசையா வளத்த இதை எப்பிடித் திடீர்னு....." தயங்கினான். குரலில் கவலை தெரிந்தது. அனு அருகில் வந்து கன்னத்தில் ஒரு 'இச்' பதித்தாள்.

"ஒங்களுக்கு எம்மேல அன்பிருக்கா இல்லையா?"

"இருக்கு!"

"ஆசை....?"

"நிறைய்.....ய இருக்கு"

"அப்போ இந்தத் தலைமுடியைத் தயவு செஞ்சு வெட்டிடுங்க.....அசிங்கமா, பொம்பள மாதிரி, பார்க்கவே சகிக்கல."

வெறுப்பை வார்த்தைகளில் கொட்டினாள் அனு. ஆனால் தான் ஆசையாக வளர்த்த தலைமுடியை வெட்ட பாண்டியனுக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. 'எப்படியோ சமாளித்துவிடு' என்று மனம் சொல்லியது.

"அனு! நீ என்னோட மனைவிதான். இருந்தாலும் ஒன்னோட கூந்தல் அலங்காரத்தப் பத்தி நான் எப்பவாவது விமர்சிச்சிருக்கேனா? இல்லையே...நாங்க கணவன், மனைவியா இருந்தாலும் அலங்காரம் பண்ற விசயத்தில அவங்கவங்க இஷ்டத்துக்கு நடந்துக்கிறதொன்னும் தப்பில்ல அனு....."

"அப்போ நீங்க ஒங்க தலைமுடியை வெட்ட மாட்டீங்க?" கேள்வியில் கோபம். அதைத் தணிக்க வேண்டுமே!

"அது டார்லிங்...." அவளை இறுக அணைத்தபடி காதுக்குள் சொன்னான்: "அனு.....இன்னிக்கு நீ ரொம்ப அழகா இருக்கே."



எம்.சுரேஷ்

"சரி சரி, பேச்ச மாத்தாதீங்க...." கையை விடுவித்துக் கொண்டு சமையலறைக்குள் மறைந்து போனாள் அனு.

தனது பேச்சுத் திறமையால் தலைமுடியைக் காப்பாற்றிவிட்டோம் என்பதை நினைக்கும்போது பாண்டியனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

நீண்டு வளர்ந்திருந்த தனது தலைமுடியை (கூந்தலை) ஆசையோடு ஒரு முறை தடவிப் பார்த்துக் கொண்டான்.

★★★★

மறுநாள் அலுவலகம் முடிந்து வீட்டிற்குள் வந்த பாண்டியனுக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

அனு தனது தலைமுடியைக் கட்டையாக 'சத்யா கட்' வெட்டியிருந்தாள்!

பாண்டியனுக்குக் கோபிக்க வழியில்லை!!



படிப்பகம்

www.padippakam.com

# மனம் அறியாது!

இலக்கிய நயம்

தருவது-ரசிகன்



"வாட்டம் என்னடி வண்ண முகத்தில்?"
நோட்டம் பார்த்துத் தோழி கேட்டாள்.

"தோட்டத்தில் மல்லிகை மலர்ந்து கிடக்குது
நாட்டத்தில் கொள்ளாமல் வண்டு போனது!"
மறைபொருளில் சுந்தரி விளக்கினாள்.

"மல்லிகைவாசம் வண்டை இழுக்கும்!
சொல்லியனுப்பாமல் வண்டு வரும்!
இருக்கும் இடம் தேடி வண்டுவந்தால்
அல்லாமல், வண்டை நீதேடிப் போகாதே!"

"காதலில் என்னடி கௌரவப் பிரச்சனை?
மோதலில் முடியும் யோசனை சொல்லாதே!"

"நாலு குணத்தில் நாணமும் ஒன்றடி
பாழும் காதலில் நாணமும் போனதோ?"

"காதல் என்னும் வில்லில் பூட்டிய
ஆசை அம்புகள் மனதில் பாய்ந்திட
நாலு குணங்களும் நாலு திசையில் பறந்திடும்!
பாலும் தேனுமாய் இரண்டு உயிர்கள் கலந்திடும்!"

"பாலும் பூனையைத் தேடிப் போகுமோ
பழமும் அணிலை நாடிச் செல்லுமோ
விநோதக் காதலில் விதிகளும் மாறுமோ?
வாய் நோகாமல் தோழி வினவினாள்.

"மரத்தில் கொடி தாவிப் படரும்
வானத்தில் நிலா தழுவிச் சுழலும்
நீலக்கடலில் அருவி கலந்து மகிழும்
ஒன்றையொன்று தாங்கிக் கொள்வதில்
ஈருயிர் கலக்கும் காதலும் ஒன்றடி!"

"மதியாதார் வாசலை மிதிப்பதோ காதல்?
மதிகெட்டு அவர் பின்னால் போவதோ காதல்?"

"மழை வர மறுத்தால் பூமி கோபிக்குமோ
மழை இனிவேண்டாம் என்றுரைக்குமோ?"

"பூமியின் கோபம்தான் வெப்பமடி
வெறுப்பின் குறிதான் வறட்சியடி!"

"வெப்பம் என்பது ஏக்கமடி!
வறட்சி என்பது தாகமடி!
வான் மழை பொழியக் குளிராகும்!
வான் மழை பொய்த்தால் சூடாகும்."

"காதலி மேனியும் அப்படித்தான்
காதலர் பிரிந்தால் நெருப்பாகும்"
சட்டென்று தோழி கதைமாற
சிட்டான சுந்தரி விழிவிரித்தாள்!

"என்னடி பேச்சை மாற்றுகின்றாய்
சொல்லடி ஏனடி கதையளந்தாய்?"

"கல்லெறி பட்டால் குளம் அசையும்
சொல்லடி பட்டால் உளம் திறக்கும்
மெய்யது அறிய கதையளந்தேன்
பொய்யது பேசி உனை அளந்தேன்!"
தோழி நகையில் சுந்தரி வெட்கினாள்.

"உள்ளத்தில் நெருப்பு இருந்தால்
உதட்டிலே புகையும் வரும்தானே
ஆசையை நெஞ்சில் மறைத்து வைத்தாய்
ஆர்வத்தை உதட்டால் கொட்டிவிட்டாய்!"

ஆசையும் இல்லை, மீசையும் இல்லை
நீ வீசிய வார்த்தைக்கு பதில்தான் சொன்னேன்."

"போதும் நிறுத்தடி புளுகாதே!
பொல்லாத வாதம் செய்யாதே!"
தோழி சொல்லி விடை பெற்றாள்.

தனிமையில் சுந்தரி யோசித்தாள்
ஆசையை மறைக்க முடியாதோ?
அவரை வெறுக்க முடியாதோ?
'ஒருநாள் முயன்று பார்த்துவிடு'
சுந்தரி தனக்கே ஆணையிட்டாள்!

இன்று முழுக்க அவன் நினைப்பை
மறந்தும் நினைக்கக் கூடாது.

புறாக் கூண்டை திறந்துவிட
கரத்தில் புறாவந்து குந்தியது.
புறாவோடு பொழுது போனால்
மறவன் நினைப்பு எழாதே!

அமர்ந்த புறா சிறகசைக்க
நெஞ்சோடணைத்து மகிழ்ந்திட்டாள்.

"புறாவுக்கு வாய்த்த வரம்
என்க்கும் வாய்க்கக் கூடாதோ?
அடுத்த பிறவி கிடைத்திட்டால்
புறாவாய் பிறப்பது புண்ணியமே!"
அன்றொரு நாளில் அவன் சொன்ன
குறும்பு மொழி நெஞ்சில் குத்தியதே!

நினைவில் எழுந்த அவன் பேச்சு
நனவில் நடந்ததை மீட்டியது!

புறாவாய் அவன் முகம் கொஞ்சியது
நிறைவாய் நெஞ்சை அள்ளியது.

"வேண்டாமே" என்று வாய் சொல்ல
வேண்டும் என்று விழி சொல்ல
படிப்படியாய் புதுக் கதை தெரிய
படிபடியென்று மனம் சொல்ல
"போதும்" என்று வாய் பொய் சொல்ல
பொங்கும் இன்பக் கடல்மீதில்
போகும் தோணியாய் இரு உடல் செல்ல
சொர்க்க உலகின் கரை கண்டார்!

பரடம் பயின்று முடித்தவுடன்
"புறாமீதுள்ள பொறாமை போனதுவோ?"
என்றொரு வினா அவள் தொடுத்தாள்.

"பொறாமை இப்போது
புறாவுக்குத்தான்!"
என்று விடை அவன் சொன்னான்!

"புறாவுக்குப் பொறாமையா?"
ஆச்சரிய வினா அவள் தொடுக்க;
"நெஞ்சில் சாய மட்டும்தானே
கொஞ்சும் புறாவுக்கு அனுமதி நீ கொடுத்தாய்;
ஆனால் எனக்கோ....?"
வினாக்குறியாய் அவன் நிறுத்த
வெட்கிப்போனவள் தலை குனிந்தாள்.

"தாமரை தலை கவிழலாமோ?
தந்ததை இடையில் நிறுத்தலாமோ?"
மீண்டும் ஆசையில் மனுப்போட்டான்.

"இன்றிது போதும் இனி நாளை
நன்றிது போதும் இனி வேண்டாம்."
சொன்னது பொய்யென அறியாமல்
சுள்ளென்று கோபித்து அவன் போனான்.

அவனாய் வரட்டும் என்றிருக்க
நினைத்தும் மனம் கேளாமல்
நினைவில் கிடந்து புரள்கிறது!
நேரில் செல்லத் துடிக்கிறது!

'மனமே உனக்கு மதியில்லை
வெட்கம் என்ற குணமில்லை
அவராய் வரட்டும் காத்திருப்பாய்;
மிரட்டும் தனிமையைப் பொறுத்திருப்பாய்!'

மனமோ கேட்கும் அவள் பேச்சை?
மறக்கா நினைவில் மூழ்கியது.
மறவன் எங்கே எனத் தேடியது!
உறவே வா எனப் பாடியது!

மானமில்லா மனமோ நீ?
வெறுத்துப்போனவர் பின்சென்று
தரத்தைக் குறைப்பது முறையாமோ?!

சுந்தரி மனதை விசாரித்தாள்.

"மானம் என்பது பெரும் தகைமை
மாறாத காதலில்
மீளாத ஆசைகொண்டாலும்
இல்லாமல்போகுமோ அத் தகைமை?"
சுந்தரி மீண்டும் கேட்டுவைத்தாள்.

'மானம் நான் அறியேன்!
தகைமை நான் அறியேன்!
தனிமை நான் அறிவேன்!
தவிப்பும் நான் அறிவேன்!
துணையை நான் பெறவே
துணிந்து அவர் பின் செல்வேன்!
அன்புக்கு தடைகள் இல்லை,
ஆசைக்கு வெட்கம் இல்லை,
நோய்க்கு மருந்து வேண்டும்;
என் நோய்க்கு அவர்தான் வேண்டும்!
வேறொன்றும் நான் அறியேன்!'
மனம் சொல்லிப் புறப்பட்டது.

"அன்புக்கு தடைகள் இல்லை.
ஆசைக்கு வெட்கம் இல்லை.
தனிமையில் ஆசை கொல்லும்
துணையினை நாடும் மனம்
நாணத்தை அறியாது செல்லும்!"

"மானத்தை அறியாமல் செல்வது
தகுமோ மனமே?"

"காதலில் இது சகஜம்
சொன்னவர் திருவள்ளுவர்"
மனம் அந்தக் குறள் சொன்னது.

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன்று அன்று!

குறள்-1255, அதிகாரம்-126.

## கால்பந்து அணிகளின் பட்டியல்

## பிரேஸில் அணி முன்னணியில்

சர்வதேச கால்பந்து அணிகளின் வரிசைப்பட்டியலை உலக கால்பந்து சங்க கூட்டமைப்பு அண்மையில் வெளியிட்டுள்ளது. தற்போதைய உலக சாம்பியனான பிரேஸில் அணி தொடர்ந்தும் முதலிடத்தில் இருந்து வருகின்றது. கடந்த ஆண்டு முதலிடத்தில் இருந்ததும் மூன்று முறை உலக சாம்பியனாக இருந்ததுமான இத்தாலி அணி, 9வது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

உலக வரிசைப்பட்டியல் விபரம்:-
1. பிரேஸில், 2. ஜெர்மனி, 3. ஃபிரான்ஸ், 4.செக் குடியரசு, 5. டென்மார்க், 6. ரஷ்யா, 7. கொலம்பியா, 8. ஸ்பெயின், 9.இத்தாலி, 10. ஹொலண்ட், 11.மெக்ஸிகோ, 12.இங்கிலாந்து, 13. சுவீடன், 14. நோர்வே, 15. போர்த்துக்கல், 16. அமெரிக்கா, 17.பல்கேரியா, 18. ஸம்பியா, 19. ஆர்ஜென்டினா, 20. ருமேனியா.

## இளம் கப்டன்கள்





மிக இளம் வயதில் டெஸ்ட் போட்டி ஒன்றுக்குத் தலைமை தாங்கியவர் என்ற சாதனைக் குரியவர் இந்திய வீரரான மன்சூர் அலிகான் பட்டௌடி. இவரைத் தவிர இளம் வயதில் டெஸ்ட் போட்டிகளுக்குத் தலைமை தாங்கியவர்களின் விபரம் இதோ:

1. மன்சூர் அலிகான் பட்டௌடி (21 வருடங்களும் 77 நாட்களும்) இந்தியா எதிர் மே.இ.தீவுகள் 1961-62
2. வக்கார் யூனுஸ் (22 வருடங்களும் 15 நாட்களும்) பாகிஸ்தான் எதிர் ஸிம்பாப்வே 1993-94
3. ஐ.டி.கிரெய்க் (22 வருடங்களும் 194 நாட்களும்) அவுஸ்திரேலியா எதிர் தெ.ஆபிரிக்கா 1957-58
4. ஜாவெட் மியான்டாட் (22 வருடங்களும் 260 நாட்களும்) பாகிஸ்தான் எதிர் அவுஸ்திரேலியா 1979-80
5. எம். பிஃளெட் (22 வருடங்களும் 306 நாட்களும்) தெ. ஆபிரிக்கா எதிர் இங்கிலாந்து 1898-99
6. எம்.பி.பௌடன் (23 வருடங்களும் 144 நாட்களும்) இங்கிலாந்து எதிர் தெ. ஆபிரிக்கா 1888-89
7. எஸ்.ஆர். டெண்டுல்கர் (23 வருடங்களும் 171 நாட்களும்) இந்தியா எதிர் அவுஸ்திரேலியா.1996
8. ஜி.சி. கிரான்ட் (23 வருடங்களும் 217 நாட்களும்) மே.இ.தீவுகள் எதிர் அவுஸ்திரேலியா 1930-31
9. கௌரவ ஐ. எவ்.டபிள்யூ.பிலிவ் (23 வருடங்களும் 292 நாட்களும்) இங்கிலாந்து எதிர் அவுஸ்திரேலியா 1882-83.

## நூறுபோட்டிகள்



இலங்கை கிரிக்கெட் அணியில் 100க்கும் மேற்பட்ட ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடியவர்கள் மொத்தம் ஐந்து பேர். அவர்கள் விளையாடியுள்ள போட்டிகள் மற்றும் ஓட்ட எண்ணிக்கை போன்ற விபரங்கள் வருமாறு:

| வீரர் | போட்டிகள் | இனிங்ஸ் | எண்ணிக்கை | 100 | 50 | சராசரி |
|---|---|---|---|---|---|---|
| அர்ஜுன ரணதுங்க | 194 | 185 | 5338 | 2 | 34 | 35.82 |
| அரவிந்த டி சில்வா | 191 | 187 | 5841 | 7 | 39 | 34.97 |
| ரொஷான் மகாநாம | 150 | 142 | 3826 | 4 | 26 | 30.36 |
| ஹஷான் திலகரட்ன | 139 | 120 | 2635 | 2 | 9 | 29.27 |
| அசங்க குருசிங்க | 144 | 141 | 3843 | 2 | 22 | 28.25 |

## சிந்தியா பதில்கள்

**★ பெனாஸிர் பூட்டோ மீண்டும் பிரதமராவாரா?**

எம். மஜீட், கிண்ணியா.

ஆகிவிடுவாரோ என்று பாகிஸ்தான் ஆட்சியாளர்களே பயப்படுவதாகத்தான் தெரிகிறது. அனுதாப அலையும் அம்மணி பக்கம்தான் வீசுகிறதுபோலத் தெரிகிறது.

□□

**★ எமது நாட்டின் நேற்று, இன்று, நாளை நிலைமைகளை விளக்குங்கள்?**

டி. ராஜ்குமார், பெல்மதுளை.

நேற்று: சிறுபொறி; இன்று: காட்டுத்தீ; நாளை: யாமறியோம் பராபரமே!

□□

**★ பாலியல் பலாத்காரத்தில் பலியானவர்கள் விடயத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குத் தண்டனை கிடைக்குமா?**

எம். எட்வேட் அந்தனி, பேஸ்லைன் வீதி. கொழும்பு.

"சட்டம் ஒரு இருட்டறை. வக்கீலின் வாதம் ஒரு விளக்கு!"

விளக்குக்கு எண்ணெயும், திரியும் தேவை. அதாவது ஆதாரங்கள் தேவை. தகுந்த சாட்சியங்கள் தேவை. இரண்டும் குறிப்பிட்ட விடயத்தில் சேதாரம்தான். ஆகவே விளக்கும் இவ் வழக்குக்கு உதவாது.

□□

**★ டியர் சிந்தியா! 'டைட்டன்' கிண்ணத்தை இந்தியா வென்றுவிடும் என்று எதிர் பார்த்தீரா?**

எஸ்.பி. சுப்பிரமணியன், டிக்கோயா.

உண்மையைச் சொல்வதானால், இல்லை.

□□

**★ தற்போது சோகப்படங்களைவிட நகைச் சுவைப் படங்கள் நன்றாக ஓடுவதற்கு காரணம் என்ன?**

ஜெயபத்மநாதன், மட்டக்களப்பு.

உள்ள சோகம் போதாது என்று திரைப் படம்பார்த்தும் அழவேண்டுமா? என மக்கள் நினைப்பதுதான் காரணம்.

□□

**★ புதிய கோணத்தில் சிந்திப்பது எப்படி சிந்தியா?**

வி. மகேந்திரன், கொழும்பு-11.

சிலப்பதிகாரப் பாடத்தில் மாணவர்களிடம் கேள்விகளைத் தொடுத்தார் ஓர் ஆசிரியர்.

"சிலப்பதிகாரம் உருவாகக் காரணமாக இருந்தது எது?" என்று கேட்டார் ஆசிரியர்.

"ஊழ்வினையின் பயன்" என்றான் ஒரு மாணவன்.

"கண்ணகியின் சக்தியை புரியவைப்பது" என்றான் இன்னொரு மாணவன்.

"கோவலனின் சபல புத்திதான்" என்றான் மற்றொரு மாணவன்.

ஒரு மாணவன் மட்டும் ரொம்ப வித்தியாசமாக: "கோவலனின் மறதிதான் காரணம்" என்றான்.

"கோவலனின் மறதியா? அது என்னப்பா?" என்று கேட்டார் ஆசிரியர்.

"மாதவி வீட்டுக்குச் சென்ற கோவலன் கண்ணகியின் நகைகளையும் வாங்கிச் செலவழித்துவிட்டான். கண்ணகியின் காலில் இருந்த சிலம்பையும் அப்போதே வாங்கிச் செலவழித்திருந்தால் சிலப்பதிகாரம் நடந்திருக்குமா?" என்று கேட்டான் மாணவன்.

□□

**★ உலகில் மிக உயர்ந்த மதங்கள் மூன்று கூறுங்கள் பார்க்கலாம்?**

செல்வி எஸ். தர்சினி, மாத்தளை.

உண்மை, நேர்மை, உழைப்பு.

□□

**★ இந்தியாவில் புலிகளே இப்போது இல்லையா? அல்லது கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு நடமாடிக் கொண்டுதான் இருக்கிறார்களா?**

சி. நகுலேஸ்வரன், ஹட்டன்.

இந்தியாவில் புலிகளே இல்லையென்பது பச்சைப் பொய்! உலகிலேயே புலிகள் அதிகமாக உள்ளநாடு இந்தியாதான். கிட்டத்தட்ட ஐயாயிரம் புலிகள்வரை அங்கு இருப்பதாகப் புள்ளிவிபரம் வெளியிட்டிருக்கிறது வனவிலங்குத்துறை. என்ன தகவல் போதுமாங்க!

□□

**★ ஒரு கடிஜோக் பிளீஸ்?**

ஆர். இலட்சுமணன், கண்டி.

"மாட்டுக்கும், கழுதைக்கும் பிடித்தமான ரொட்டி எது?"

"சுவரொட்டி!"

□□

**★ அழகிப்போட்டியால் யாருக்கு லாபம்?**

மா. சசிதரன், வத்தளை.

முதலிடத்தில் வரும் அழகிக்குத்தான் மொத்த லாபம். மொடலிங் செய்து சம்பாதித்து கொண்டிருந்த 18 வயது கிரீஸ் அழகிக்கு பெங்களூரில் அதிஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டியிருக்கிறது. உப தகவல்; கிரீஸ் அழகியின் உயரம் 5 அடி 9 அங்குலம். இரண்டாவது இடத்தைப் பிடித்த கொலம்பியா அழகியின் உயரமும் அதே! நடுவர்களுக்கு உயரம்தான் பிடித்திருக்கிறதாக்கும்!

□□



**★ தர்மசங்கடமான நிலை என்றால் என்ன சிந்தியா?**

யு.எம். முகமட், கல்முனை.

தன் கணவனை அழைத்துக்கொண்டு டாக்டரிடம் வந்தாள் மனைவி.

"என் கணவருக்கு ஒரே களைப்பாக இருக்கிறது. உடம்பும் உளைச்சலாக இருக்கிறது என்கிறாள். நன்றாகப் பரிசோதித்து மருந்து கொடுங்கள் டாக்டர்!" என்றாள்.

டாக்டர் கணவனை பரிசோதித்துவிட்டு, "உங்கள் கணவர் நன்றாக ஓய்வெடுக்க வேண்டும். தூக்கமாத்திரைகள் எழுதித்தருகிறேன், வாங்கிக்கொள்ளுங்கள்" என்றார்.

"தினமும் எத்தனை மாத்திரைகள் அவருக்குக் கொடுக்க வேண்டும் டாக்டர்?" என்றாள் மனைவி.

"மாத்திரை அவருக்கில்லை, உங்களுக்குத்தான்!" என்றார் டாக்டர்.

□□

**★ டியர் சிந்தியா! உங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத நாள் எது?**

எம். ஜெய்சங்கர், திருமலை.

இன்று.

□□

**★ சில்க் சுமிதாவின் இடத்தைப் பிடிக்கக் கூடிய கவர்ச்சி நடிகை யார்?**

ஜெ. சிவபாலன், மட்டக்களப்பு.

கவர்ச்சிக்கென்று தனி நடிகைகள் தேவையா? என்ன? சில்க் இருக்கும்போதே கதாநாயகிகள்தானே அவருக்குப் போட்டி?

□□

**★ தமிழ் அரசியல் கட்சிகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன?**

மு. மோகனதாஸ், கொழும்பு-06.

அடுத்த பிரச்சனை எப்போது வரும் என்று அறிக்கைவிடக் காத்துக்கொண்டிருக்கின்றன. என்ன நடந்தாலும் ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் அனுப்பிவிடுகிறார்கள். இவர்கள் கடிதம் அனுப்பாவிட்டால் ஜனாதிபதிக்கு நாட்டில் நடப்பதெல்லாம் தெரியாது பாருங்கள்!

□□

**★ காதலியிடம் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளைக் கொடுக்கும் காதலர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?**

எச்.எம். பஸீல், கல்முனை.

சமாளிக்கலாம் என்னும் நம்பிக்கைதான்?

இப்படித்தான் ஒரு காதலன் தன் காதலியிடம், "உனக்காக நான் சாவையும் சந்திக்கத் தயார்" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

அந்தக் காதலியும் தன் காதலன் தனக்காகச் சாவையும் சந்திப்பான் என்று தந்தையிடம் பெருமையாகச் சொன்னாள்.

தன் மகளின் காதலனை கையோடு கூட்டிவரச் சொன்னார் தந்தை. அவனும் வந்தான்.

ஒரு புலிக்கூண்டுக்கு அருகே அவனை அழைத்துப்போனார்.

"இந்தக் கூண்டைத் திறந்து உள்ளே போய்விட்டு வா. உனக்கு என் மகளை கல்யாணம் செய்து வைக்கிறேன்" என்றார் தந்தை.

புலிக் கூண்டருகே சென்று பார்த்துவிட்டு காதலன் சொன்னான்;

"நான் சாவைச் சந்திப்பதாகத்தானே சொன்னேன். ஆனால் புலி சாகவில்லையே உயிரோடுதானே இருக்கிறது!"

□□

**★ பாகிஸ்தான் அணியை டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து வீழ்த்திவிட்டதே?**

எம். பௌஸர், புத்தளம்.

நியூஸிலாந்து அணிக்காரர்கள் தாங்கள் ரோசமானவர்கள் என்பதை நிரூபித்துவிட்டார்கள். விளையாட்டிலும் ஆக்ரோசம் தேவை. ஆத்திரம்தான் தேவையில்லை.

□□

**★ எம்.ரீ.வியில் சன் ரீ.வி இப்போது எப்படி?**

சி. ராஜசேகர், மருதானை.

சன் ரீ.வி.மீது எம்.ரீ.விக்கு அப்படி என்ன கோபம்? அரைகுறையாக நிகழ்ச்சிகளைக் காண்பித்து அதன் தரத்தையே பாழாக்குகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 59

இராமபிரானுடைய தூதுவனாக விசுவ ரூபமெடுத்து விண்ணிலே தாவிய ஆஞ்ச நேயர் மிக வேகமாகப் பறந்தார். அவருடைய தோற்றம் கதிரவனின் சஞ்சாரமோ என்று ஐயுறத்தக்கதாக இருந்தது. காலையில் கிழக்கே தோன்றி மாலையில் மேற்கே மறையும் இயல்பினன் கதிரவன். அனுமனோ வடக்கி லிருந்து தென்திசை நோக்கிப் பயணமா கிறான். ஆகவே வானில் மற்றுமொரு கதிரவன் பவனிவரவில்லை என்பது தெளிவாயிற்று. மாமேரு மலையின் சிகரங்களில் ஒன்று

## இராமதூதன் பயணத்தில் எதிர்கொண்ட இடையூறுகள்



முன்பொருமுறை வாயுபகவானால் பெயர்த் தெடுக்கப்பட்டு தென்திசைக் கடலில் வீசப் பட்டது. அவ்வாறு வீசப்பட்ட மலைச் சிகரம் எவ்வாறு வானில் பறந்ததோ, அதே வேகத்தைவிட கன வேகத்தில் அனுமன் சென்றார். ஊழிக்கால முடிவில் ஏற்படக் கூடிய பயங்கரமான வேகம் தோன்றி

### இராஜதூமன்

விட்டதோ என்று தேவர்களே அஞ்சினர்.

இவ்வாறு அனுமன் சென்று கொண்டி ருக்கும்போது இடையில் கடலில் ஒரு பெரும் மலை ஒன்று திடீரென்று தோன்றியது. அனுமன் செல்லும் வழியை அம்மலை மறித்து நின்றது. இதனைக் கண்ட அனுமன் சினமுற்றார். தான் மேற்கொண்ட பணியை எவர் தடை செய்தாலும் அத்தடையைச் சிதறடித்துவிட்டுச் செல்லும் மனத்திடத் துடன் பறந்து கொண்டிருந்த இராமதூதன், தன் முழு பலத்தையும் ஒன்று திரட்டினார். கன வேகத்தோடு போய் அம்மலையுடன் மோதினார். மலை அசைந்தது. இருப்பினும் அனுமன் தொடர்ந்து செல்வதற்கான இடம் கிடைக்கவில்லை. ஆனால் அம்மலையி லிருந்து பேச்சொலி கேட்டது!

### மைநாக பர்வதம்

"அதிபராக்கிரமசாலியான ஆஞ்சநேயனே! நான் உமக்கு எதிரியல்ல; இராமபிரானுக்கும் எதிரியல்ல. என் பெயர் மைநாக பர்வதம். இந்திரனுடைய கோபத்திலிருந்து என் போன்ற பர்வதங்களை உம்முடைய தந்தை யான வாயுபவகானே காத்து சமுத்திரத்தினுள் மறைத்து வைத்தார். ஆகவே எங்களுக் குத் துணைபுரிந்தவருடைய புதலர்வராகிய உமக்கு உதவுவதே எனது நோக்கம். இது தவிர ஸ்ரீ இராமச்சந்திரன் சாகர பரம்பரை யிலுதித்தவர். சாகர குலத்தவர்தான் சமுத்திர ராஜனின் இடையூறுகளைக் களைந்தவர்கள். இராமர் பணியேற்று தென்திசை செல்லும் உம்மை உபசரித்து அனுப்பி வைக்குமாறு சமுத்திரராஜனே எனைப் பணித்தார். ஆகவே என்மீது சில நாழிகைகள் தங்கி விருந்துண்டு களைப்பாறிச் செல்வீராக!"

இவ்வாறு மைநாகம் கூறியதும் ஆஞ்ச நேயர், தன் அவசர புத்தியினால் அம் மலையைத் தாக்கித் துன்புறுத்தியமைக்காக வருந்தி மன்னிப்புக் கோரினார். தான் எடுத்துக்கொண்ட பணி சுபமாக முடியும் வரை பசி, தாகம், தூக்கம் மற்றும் ஓய்வுக்கு இடமே இல்லை என்று கூறி, தனக்கு விடையளிக்குமாறு வேண்டினார். அனு மனின் இராம பக்தியையும் கடமையுணர்ச்சி யையும் கண்டு மனம் நெகிழ்ந்த மைநாக மலை தன் உருவத்தை நகர்த்தி வழி விட்டது. இராமர் பணி வெற்றிபெற வாழ்த்தி அனுப்பிவைத்தது.

சிறிதளவு நேரம் மைநாக மலையின் குறுக்கீட்டால் தாமதம் ஏற்பட்டிருந்தமை யினால், மேலும் தனது வேகத்தை அதிகரித்து தன் பயணத்தினை அனுமன் தொடங்கினார்.

எந்த ஒரு காரியத்தை மேற்கொண்டாலும் அதில் பல குறுக்கீடுகளும் தடைகளும் இடையூறுகளும் ஏற்படுவது இயல்பு. இத்த கைய இடைஞ்சல்களை எத்தகைய சலிப்பும் களைப்புமின்றி எதிர்கொள்ளும் திடமனதும் வல்லமையும் உள்ளவரே வெற்றிகளைக் குவிக்கக் கூடியவராவார். எடுத்த காரியங்க ளில் எத்தடையுமில்லாமல் வெற்றி கிட்டு வதில் எத்தகைய சுவாரசியமும் இருப்ப தில்லை. தடைகள் ஏற்படுமானால் அவற் றைத் தமது சாமர்த்தியத்தினால் களைந் தெறிந்து கொண்டு முன்னேறும்போது, அத்தகையோரின்- எத்தகைய துன்பத்தையும் தாங்கி முன்னேற வேண்டும் என்ற- வேகம் அதிகரிக்கிறது. தடைகளைத் தாண்டிப் பெறும் வெற்றியே என்றும் நிலைத்து நின்று பயனளிக்கக் கூடியது.

ஆஞ்சநேயரின் பயணத்திலும் பல தடை கள் ஏற்படுகின்றன. மைநாக மலையின் அன்புத் தடையிலிருந்து விடுபட்டவருக்கு மற்றுமொரு தடங்கல் முன்வந்து நிற்கிறது. தேவர்கள், அனுமனின் திடசித்தத்தைப் பரிசோதித்துப் பார்க்க உருவாக்கப்பட்ட திட்டம் இது.

### நாக மாது-சரசை

கடற்பரப்பையும் வான மண்டலத்தை யும் தொட்டுத்தழுவி நின்றது போல் மிகப்பயங்கரமான இராக்கத உருவம் ஒன்று அனுமனை விழுங்குதவற்கேற்றவாறு வாய் பிளந்து நின்றது. "ஏ வானரமே! நீ எங்கே போக வேண்டுமானாலும் எனது வாயுள் முதலில் புகுந்தாக வேண்டும்," என்று அவ் வுருவம் காஜித்தது. அப்போது அனுமன் மிகப் பிரமாண்டமான உருவோடு விண்ணில் பறந்து கொண்டிருந்தார். ஆனால் அந்த இராக்கத உருவமோ, அனுமனுடைய உருவத்தைவிடப் பன்மடங்காக தனது வாயைப் பிளந்து கொண்டிருந்தது. அனுமன் தனது வடிவத்தை மேலும் பருமனாக்கிய போதும், அதற்கேற்றாற்போல் அந்த இராக்கத உருவ மும் தனது வாயை அகட்டியது. ஆஞ்சநேயர் ஒரு தந்திரத்தை உடனடியாகக் கையாண்டார். தனது வடிவத்தை மிகக் மிகக் குறுக்கி ஒரு சிறு வண்டுபோல் உருவெடுத்து அதன் வாய்க்குள் புகுந்து சுலபமாகவெளியேறினார்.

இதனைக் கண்ட அந்த இராக்கதன் பெரு மகிழ்ச்சி அடைந்தவனாக, "வாயு புத்திரனே! இராமபிரான் எதற்காக அவதரித்தாரோ அக்காரியங்கள் நிறைவேற உம்மையும் ஒரு துணையாகக் கொண்டார். இராமபிரானின் தூதனாக இருப்பதற்கு ஒரு வானரம் தகுதியுள்ளதுதானா என்ற சந்தேகம் தேவர் கள் சிலருக்கு ஏற்பட்டது. இதனால் உமது தகுதியினைப் பரிசோதித்துப் பார்க்கவே சரசை என்ற பெயருடைய நாகமாதான என்னை அனுப்பினார்கள். இராமபிரானு டைய இலட்சியம் ஈடேற உறுதுணையாக நிற்கும் தகுதி உமக்குப் பரிபூரணமாக உண்டென்பது நிருபணமாகிவிட்டது. இனி எத்துன்பம் துரத்தினாலும் அவற்றை யெல்லாம் தகர்த்தெறிந்து வெற்றிபெறுவீர். உம் பணி தொடரட்டும்!" என்று இருகை கூப்பி வணங்கி சரசை, அனுமனை வாழ்த்தி வழி அனுப்பி வைத்தது.

மீண்டும் தன் முழு பலத்தையும் செலுத்தி அனுமன் தன் வேகத்தைக் கூட்டினார். சில காததூரம் சென்றதும் அனுமனின் வேகம் அவரை அறியாமலேயே தடைப்பட்டது. முன்னேற முயன்றபோது பின்னோக்கி இழுக் கப்படுவது போன்ற உணர்வு ஏற்படுவதை ஆஞ்சநேயர் அவதானித்தார். நாலா பக்கமும் தன் பார்வையைச் சூழல விட்டு, காரணத்தை அறிய முயன்றார். ஆனால் காரணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. தனக்கு மேலுள்ள அண்ட வெளியிலும் எந்த அறி குறியையும் காண முடியவில்லை. கிழே குனிந்து கடலைப் பார்த்த போது தன்னுடைய நிழலை ஒரு பூதம் பிடித்து இழுத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

### நிழல்பிடிபூதம்

"ஏ நிழல்பிடிபூதமே! என்னை விட்டு விடு! இல்லையேல், என் பணிக்கு இடை யூறாக இருக்கும் உன்னைக் கொல்லத் தயங்கமாட்டேன்," என்றார் ஆஞ்சநேயர். இதனைக் கேட்ட நிழல்பிடிபூதம் பயங்கர மாகச் சிரித்தது. "வானரமே! இந்தச் சமுத்திரத்தையே அடிமைப்படுத்திவைத் திருக்கும் என்னையா கொல்லலாம் என்று கனவு காண்கிறாய்? நடக்கவே நடக்காது. எனக்கு கடுமையான பசி. உன்னால் தான் என் பசி தீரவேண்டும். காத்திருக்கிறேன். சீக்கிரம் என் வாயினுள் வந்து புகுந்து விடு. வந்து விடு!" என்று கர்ஜித்தது.

இதற்கிடையில் அந்த நிழல்பிடி பூதத்தின் வலிமையினால் அனுமன் அதன் வாயின் அருகே இழுபட்டு வந்து விட்டார். தன்பலம் முழுவதையும் திரட்டி அந்த பூதத்தின் வாயில் தனது கால்களால் உதைத்தார். இருப்பினும் அனுமனின் கட்டுப்பாட்டையும் மீறி அப்பூதத்தின் வாயுள் அனுமன் இழுக்கப் பட்டுவிட்டார். இவ்வேளையிலும் அனுமன் தன் தந்திரத்தைக் கையாண்டு பூதத்தின் வயிற்றுள் புகுந்து கொண்டு, தன் கைகால் நகங்களினால் அதன்வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்து விட்டார். அங்கார தாரை என்ற அந்தப் பெண்பூதம் இரத்தம் பெருக்கெடுத்தோட கடலில் சாய்ந்தது. நீல நிறமாகக் கிடந்த கடல் அதிவேகமாக செந்நிறமாக மாறியது.

"அனுமன் எத்தகைய பகையையும் வெல்லும் பேராற்றலுடையவர்: இராமபிரா னின் பணிகளுக்கும் ஏற்றபெருவீரன்" என்று தேவர்கள் போற்றிப் புகழ்ந்து பூமாரி பொழிந்து வாழ்த்தினர்.

இராமபிரானுடைய பார்வை என்று அனுமன் மீது பட்டதோ அன்றே அனுமனை இராமர் ஆட்கொண்டு விட்டார். இராம நாமமே தனது தாரக மந்திரம் என்பதனை அன்றே அனுமன் அறிந்து கொண்டார்.

மகேந்திர மலையில் ஏறிநின்ற போதே "ஜெயராம்..... ஜெயராம்.... ஜெய ஜெயராமா....."என்று அனுமனின் உணர்வு சதா ஜெபித்துக் கொண்டே இருந்தது. அந்த மந்திரத்தின் மகிமையாலேயே விசுவ ரூபமெடுத்து வானில் பறக்கலானார். எதிர்ப் பட்ட மூன்று இடையூறுகளையும் அந்த இராம மந்திரத்தால் ஆஞ்சநேயர் பொடிபடச் செய்து பணியைத் தொடர்கிறார்.

இராம நாமத்தின் மகிமை பற்றி கம்பர் பெருமான் கூறும் கருத்தைப் பார்ப்போம்:

ஊறுகடிது ஊறுவன
ஊறு இல் அறம் உன்னா
தேறல்இல் அரக்கர்புரி
தீமை அவை தீர
ஏறும் வகை எங்கு உளது?
"இராமா"என எல்லாம்
மாறும் அதின் மாறு
பிறிது இல் என வலித்தான்.

(சுந்தரகாண்டம்:88)4824

பொருள்:

ஒன்றன் பின் ஒன்றாக துன்பங்கள் தொடர்கின்றன. நல்லறங்கள் எவற்றையும் புரியாது என்றும் தீமைகளையே புரிந்து வரும் அரக்கர்தம் கொடுமைகள் தீர இராம மந்திரம் ஒன்றே துணைபுரிய வல்லது என்று உணர்ந்த அனுமன் இராம நாமத்தை என்றும் உச்சரிப்பதென உறுதி பூண்டார்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 57

**சரியானவிடை:- தாய்: அஞ்சனாதேவி – தந்தை: வாயுபகவான்.**

1. ஏ.எல். பரீத். 106, புத்தளை, மொனராகலை.
2. ஆயிஷா லாபிர். 31, மடவளை பஸார், மடவளை.
3. எம்.வை.எம். மதனி. மீரிகாம வீதி, நீர்கொழும்பு.
4. ஆர். ரவி. 72, றாகலை பசார், ஹல்கரனோயா.
5. செல்வி ரஞ்சனா நவரத்தினம்., வில்சன்ற் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு.

**போட்டி இல. 59** கேள்வி:- அனுமனின் வான் பயணத்தின்போது ஏற்பட்ட மூன்று தடைகளுக்கும் காரணமானவர்கள் யார்?

டிசம்பர். 07 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
இராமாயணப் போட்டி– இல.59, தினமுரசு வாரமலர், த.பெ.இல– 1772, கொழும்பு.

## காதில பூ கந்தசாமி

# கலைஞர்–பிரபா பேச்சுவார்த்தை

கலைஞர் வீட்டு தோலைபேசி மணி ஒலிக்கிறது. கலைஞர் சென்று எடுக்கிறார்.

கலைஞர்:- ஹலோ கலைஞர் பேசுகிறேன்.

பிரபா:- வணக்கம் அண்ணே. நான்தான் பிரபாகரன் பேசுகிறேன்.

கலைஞர்:- அடடே.....சுட்டிப்பையா, போன் செய்யுமளவுக்கு பெரியாளா வளர்ந்துவிட் டாயா? (கர கரவென்று சிரிக்கிறார்.)

பிரபா:-நீங்கள் அண்ணனுக்கெல்லாம் அண்ணன், நான் எப்போதும் உங்கள் தம்பிதானே!

கலைஞர்:- குறும்படா தம்பி உனக்கு! கரும் படா அது எனக்கு! அப்பா நலமா?

பிரபா:- அவர் உங்கள் நாட்டில்! நான் எங்கள் நாட்டில்! தந்தை அங்கே! தனயன் இங்கே!

பிரபா:- வேறென்ன தடை அண்ணா?

கலைஞர்:- தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராகவேண்டும் என்று சொன்னார் அறிஞர் அண்ணா! நான் பதவி இழந்துவிட்டால் நம் அண்ணன் கண்ட கனவு நனவாகாமல் போய்விடுமே தம்பி! வங்கக் கடலோரம் உறங்குகின்ற நம் அண்ணன் கனவுக்கு பங்கம் வரலாமோ?

பிரபா:- வரவேண்டாம் என்றுதானே சொல்கிறீர்கள்?

கலைஞர்:- வரவேண்டாம் என்று சொல்லு மளவுக்கு வன் நெஞ்சக்காரனல்ல நான்!

கலைஞர்:- வீடியோவில் பராசக்தி பார்த்தாயா தம்பி! பார், பார்! தரம்குறையா கருத்துக் கள், தங்கநிகர் எண்ணங்கள், பொங்கு தமிழ் உணர்ச்சிகள் யாவும் வளரும்பிள்ளை உனக்குள்ளும் மலர வேண்டாமா? அப்பா வீட்டில் இல்லையா? எங்கே சூட்டிங்?

பிரபா:- அவர் அகிம்சைவாதியாச்சே. சூட்டிங் குக்கெல்லாம் போகமாட்டாரே? உங்கள் புலனாய்வுத் துறையில் ஏதோ கோளாறு இருக்க வேண்டும்.

கலைஞர்:- புலனாய்வுத் துறையை அனுப்பி என் இளவலை மோப்பம் பிடிக்குமளவுக்கு மார்க்கம் தெரியாதவனல்லவே நான்!

பிரபா:- நீங்கள் பேசுவது புரியவில்லையே?

கலைஞர்:- சில சமயங்களில் நான் பேசுவது மக்களுக்கே புரிவதில்லை. ஆனாலும் மறக்காமல் கைதட்டுகிறார்கள். அது தான் ஏன் என்று எனக்கும் புரிவதில்லை. தம்பி உனக்கு படிப்பில் ஆர்வமா? நடிப்பில் ஆர்வமா?

பிரபா:- அரசியலுக்கு நான் செல்லப்போவ தில்லை, அதனால் நடிப்புத் தேவையில்லை! படிப்பு! அனுபவத்திலிருந்து நாள்தோறும் படித்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

கலைஞர்:-உன் தந்தைக்கு நடிப்பு வருகிறது. உனக்கோ பேச்சில் துடிப்பு வருகிறது. வருங்கால தலைமுறையில் எனக்கொரு பிடிப்பு வருகிறது. விஜய் வந்தால் நான் விசாரித்ததாகச் சொல்!

பிரபா:- விஜயா? யார் அது விஜய்!

கலைஞர்:- விஜய் என்று நான் அழைத்தால் அது உன் தந்தை விஜயகாந்த்தைக் குறிக்கும்.

பிரபா:- கலைஞரே! தவறாக நினைத்துக் கொண்டு பேசுகிறீர்கள்!

கலைஞர்:- என்ன தம்பி குழப்புகிறாய்? நீ



விஜயகாந்த்தின் மைந்தன் பிரபாகரன் தானே?

பிரபா:- (சிரிக்கிறார்) கலைஞரே! வன்னியில் இருந்து பிரபாகரன் பேசுகிறேன். வேலுப்பிள்ளை பிரபாகரன்!

கலைஞர்:-(சட்டென்று காதிலிருந்து றிசீவரை எடுத்து ஒருமுறை பார்த்துவிட்டு) என்னது பிரபாகரனா?

பிரபா:- என்ன அண்ணா? ஆச்சரியமாக இருக் கிறதா?

கலைஞர்:- ஆச்சரியம், மாச்சரியம் என்ப வற்றுக்கு இடம்கொடுக்காதவன் நான்! உள்ளம் பூரிக்கிறது, உம் குரல் கேட்ட பின்னர்! வெள்ளமென மகிழ்ச்சி விரைந் தோடி வருகிறது என் உள்ளத்தில்!

பிரபா:- மறந்துவிட்டீர்களோ என்று நினைத் தேன்.

கலைஞர்:- கடலால் பிரிக்கப்பட்டாலும் உள்ளத்து உணர்வால் ஒன்றுபட்டவர்கள் நாங்கள். இந்தப் பாழாய்ப்போன கடல் குறுக்கே விரிந்து பைந்தமிழர் நம்மைப் பிரிக்கிறதே என்று நான் ஏங்காத நாளில்லை. அந்த ஏக்கத்தால் தூங்காத நாள் உண்டு!

பிரபா:-கடல் என்ன கடல், ஒரு குரல் கொடுங் கள் போதும், நீங்கள் விரல் சொடுக்கும் நேரத்துக்குள் விரைந்துவர என்னால் முடியும். வந்து காட்டவா?

கலைஞர்:- வா தம்பி வா! வலது காலை எடுத்து வைத்து வா! இக்கரையில் உன அண்ணன் காத்திருக்கிறேன் வா! என்றெல்லாம் அழைக்கவேண்டும் என்பது தான் என் ஆசை! நீர் வரும்போது வரவேற்க நான் இருக்கமாட்டேனே என்று நினைக்கும்போதுதான் வா என்று அழைக்க என் நா மறுக்கிறது!

பிரபா:- ஏன் அண்ணா, வெளிநாட்டுப் பயணம் செல்லப்போகிறீர்களா?

கலைஞர்:- இல்லையடா தம்பி! நீர் இங்கே வருவதாக செய்தி கிடைத்தாலேபோதும், என்னை வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள்!

பிரபா:- ஆட்சி போய்விடும் என்று அஞ்சுகிறீர்களா?

கலைஞர்:- ஆட்சி போகும் காட்சிகளை காணாதவனா நான்? முள்ளிலே படு என்று சொன்னாலும், முல்லையிலே படு என்று சொன்னாலும் இரண்டையும் இன்பமாகக் கருதும் இனமானம் கொண்டவர்கள் நாங்கள்!

வரவேண்டும் என்று நான் அழைக்கத் தக்க சூழல் இல்லாத காரணத்தால், வா என்று வரவேற்க முடியாமல் என் நா கட்டுப்பட்டிருக்கிறது என்றுதான் சொல் கிறேன்.

பிரபா:- நல்லது! நான் வரவில்லை நம் ஆட்களை அனுப்பி வைக்கவா?

கலைஞர்:- அடுத்த நிமிடமே கவர்னர் என்னை அழைத்து 'உம்மை வீட்டுக்கு அனுப்பி வைக்கவா?' என்று கேட்பாரோ என்று யோசிக்க வேண்டியிருக்கிறது.

பிரபா:- அகதிகளை அனுமதிக்கலாம் அல்லவா?

கலைஞர்:- அனுமதி என்பதில் முதலிரு எழுத்துக்களும் அனுபவத்தைக் குறிக் கிறது. பின்னிரு எழுத்துக்களும் மதி என்று புத்திசாலித்தனத்தைக் குறிக் கிறது. நம் அரசியல் எதிரிகளோ, அகதி கள் வந்தால் புலிகளும் வருவார்கள் என்று அனுபவத்தோடு பேசுகிற காரணத்தால், ஆட்சியிலிருக்கிற நாங்கள் புத்திசாலித் தனத்தோடு அகதிகள் விடயத்தை கையாளவேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோமேயல் லாமல், அகதிகளை கடலிலே தள்ள



வேண்டும் என்கின்ற பொல்லாத நோக்கம் ஒருநாளும் கிடையாது.

பிரபா:- மத்திய அரசிடம் நம் சார்பாக பேசிப்பார்த்தீர்களா?

கலைஞர்:- எடுத்துச் சொல்லிக் கொண்டு தான் இருக்கிறேன். அடித்துச் சொன்னால்தான் கேட்பார்கள் என்றால் அதற்கும் நான் தயாராயிருக்கிறேன். ஆனாலும். அண்ணா நமக்கெல்லாம் மென்முறையைப் போதித்த காரணத் தால், வன்முறை கூடாது என்று பொறுமையாக இருக்கிறேன்.

பிரபா:- எங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் அண்ணா?

கலைஞர்:- தமிழ்நாட்டுப்பக்கமே வரக்கூடாது என்று நீங்கள் தன்னம்பிக்கையோடு இருப்பதுதான் எனக்கும் நம்பிக்கை தருகிறது.

பிரபா:- எங்கள் போராட்டத்திற்கு உங்கள் ஆதரவு இருக்கிறதா அண்ணா?

கலைஞர்:- ஆதரவு கிடையாது என்று எப்போதுமே நான் சொன்னதில்லை. நீங்கள் அங்கேயே இருந்துகொண்டு போராடுங்கள். நாங்கள் இங்கேயே இருந்துகொண்டு ஆதரவு தருகிறோம். அதுதான் உங்களுக்கும் நல்லது. எங்களுக்கும் நல்லது.

பிரபா:- நன்றி கலைஞரே! அவசியப்பட்டால் நாம் மீண்டும் சந்திக்கலாம்!

கலைஞர்:- போனில் மட்டும்தானே. நேரில் அல்லவே?

பிரபா:- போனில்தான்!

கலைஞர்:- (நிம்மதிப் பெருமூச்சோடு) ஒட்டுக் கேட்டுத் தொலைக்கப் போகிறார்கள்.

பிரபா:- கேட்கட்டுமேன், எம்மை யார் என்ன செய்ய முடியும்?

கலைஞர்:- உங்களை யாரும் ஒன்றும் செய்யமுடியாது என்பது எனக்கும் தெரியும். எங்களை ஏதாவது செய்து விடுவார்களோ என்றுதான் பொறுப் போடு சிந்திக்க வேண்டியிருக்கிறது.

பிரபா:- உலகத் தமிழர்களின் தலைவர் இப்படியெல்லாம் கலவரப்படலாமா?

கலைஞர்:- கலவரம் பல கண்டவர்கள் நாங்கள். எங்கே கலவரம் நடந்தாலும் குரல் கொடுப் பவர்களும் நாங்கள்தான்! ஆனாலும் இங்கே நிலவரம் சரியில்லாத காரணத் தால்தான் யோசிக்க வேண்டியிருக்கிறது.

பிரபா:- போனிலும் பேச வேண்டாம் என்கிறீர்களா?

கலைஞர்:- நான் அப்படிச் சொல்லமாட்டேன். எங்கள் கழகத்தின் பொதுக்குழுவைக் கூட்டி, பொதுச்செயலாளருடனும் கலந்து பேசிவிட்டு பதில் சொல்வதுதான் ஜனநாயக முறையாக இருக்கும் என்ற காரணத்தால், நான் இதற்கு உடனடி யாக பதில் சொல்லாவிட்டாலும், நான் என்ன பதில் சொல்லுவேன் என்பது உங்களுக்கும் தெரியும் என்பதால்,

பிரபா:- புரிகிறது? புரிகிறது! நன்றி. வணக்கம்.


படிப்பகம்

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

436331

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# தூங்குவதே சுகம்

தூங்குவதில் சுகம் காணும் சோம்பேறிகள் மனிதர்களிலும் இருக்கிறார்கள். கண்ட நேரமெல்லாம் தூங்குவார்கள். அந்த தூக்க மன்னர்களையே தூக்கிச் சாப்பிடக்கூடிய தூங்குமூஞ்சிகளை உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறோம்.

படம் ஒன்று: இதன் பெயர்: பைக்கிரி. பார்வைக்கு மூஞ்சூறுபோல் காணப் படும். உலகிலேயே நம்பர் வன் முழுச் சோம்பேறி இதுதான். பாலூட்டிகளான 'பைக்கிரிகள்' இரவில் மட்டும் தான் நடமாடுகின்றன. பகல் முழுக்க [illegible] தூக்கம் தான்.



இதன் வயிற்றில் பை மாதிரி ஒன்று காணப்படும். அதில் குட்டியை வைத்திருக்கும். குட்டியும் தாயைப்போலவே பையில் ஹாயாகத் தூங்கிக் கொண்டிருக்கும். தங்களது வாழ்நாளில் 80% வீதமான நாட்களை இவை தூங்கியே நாசம் செய்கின்றன. தாயின் வயிற்றில் இருந்தே இவை தூங்க ஆரம்பிப்பதால் கருவறைப் பழக்கம் வாழ்நாள் மட்டும் என்று புதுப்பழமொழி சொல்லலாம்.

கீழே படத்தில் உள்ள பாலூட்டியும் ஒரு தூங்கு மூஞ்சிதான். குரங்கு போல இருக்கும். கரடி போல நீண்ட நகம் இருக்கும். அமெரிக்க, அவுஸ்திரேலியக் காடுகளில்தான் இது அதிகமாகக் காணப்படும்.

உண்பது, தூங்குவது, நடப்பது எல்லாமே மரக்கிளையில்தான். எப்போதாவது ஜாலிமூட் வந்து தனது துணையுடன் சந்தோசமாக இருக்கும்போதும் மரத்தில் தொங்கியபடிதான் காரியம் பார்க்குமாம். படு சோம்பேறி என்பதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டிக் கிடக்கிறது.



# தகவல் விரல் நுனியில்




தொலைத் தொடர்பில் ஏற்பட்டுள்ள வியப்பான ஒரு திருப்பம் செல்லுலார் போன்கள். தொலைபேசியை நாம் தேடியலையும் காலம் போய், தொலைபேசிகள் நம் சட்டைப் பைக்குள் நம்முடனேயே செல்லுமிடமெல்லாம் கூடவருகின்றன. பற்றரி மூலம் இயங்கக்கூடிய செல்லுலார் தொலைபேசிகள் இப்போது நம்நாட்டிலும் பரவலாகப் பாவனையில் இருக்கின்றன.

முதலில் செல்லுலார் தொலைபேசிகள் பெரியளவில் இருந்தன. கையில்தான் வைத்திருக்க வேண்டும். அதன்பின்னர் மடித்து சட்டைப் பையில் வைத்திருக்கக்கூடிய அளவில் வந்தன. அவையும் நம்நாட்டில் உண்டு. இப்போது மிக லேட்டஸ்டாக அறிமுகமாகியுள்ள செல்லுலார் தொலைபேசி உள்ளங்கைக்குள் அடக்கிவிடக்கூடிய சைஸில் இருக்கிறது. சட்டைப்பையில் இருந்தால்கூட வெளியே தெரியாது. பொக்கெட் டயரிபோல் அடக்கமாக இருக்கும். 'மோட்டரோலா' கம்பனி இதனை அறிமுகப்படுத்தியிருக்கிறது. நம்நாட்டிலும் விரைவில் பாவனைக்கு வந்துவிடும்.

உள்ளங்கைக்குள் தொலைபேசி. உலகின் எந்த மூலையில் இருந்தும் தகவல் தொடர்பை பெற்றுவிடலாம். எங்கும் போகவேண்டாம் எல்லாமே விரல் நுனிக்கு வந்துவிடுகிறது. ஓரளவுவசதியான சாதாரண மக்களும் பாவிக்கும் அளவுக்கு செல்லுலார் தொலைபேசிகள் மலிவாகும் காலமும் வந்துகொண்டிருக்கிறது. போட்டி காரணமாக தனியார் தொலைபேசி நிறுவனங்கள் கட்டணங்களை குறைத்து தமது செல்லுலார்களை விற்பனைக்கு விடவேண்டியிருக்கும். சட்டைப் பைகளுக்குள் இருந்து செல்லுலார் போன்கள் சிணுங்கப்போகின்றன.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

323657

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# எம்மால் முடியும்

இந்திய அணியின் நட்சத்திரப் பட்டியல் ஜொலிக்கும் அளவுக்கு, அதன் வெற்றிப் பட்டியல் அத்தனை பிரகாசமாக இல்லை. "சிறந்த சகல துறை ஆட்டக்காரர்கள் போதியளவில் எம்மிடமில்லை. பந்துவீசி விக்கெட்டுக்களைச் சாய்க்கவும் வேண்டும். 20-30 ரன்களை துரிதமாகச் சேர்க்கவும் வேண்டும்" என்று கூறியிருக்கிறார் கப்டன் டெண்டுல்கார்.

இந்திய அணி தொடர் தோல்விகளைச் சந்தித்துக் கொண்டிருந்த தருணத்தில் கப்டன் பொறுப்பைத் தூக்கி டெண்டுல்காரின் தோளில் வைத்துவிட்டார்கள். ஆரம்பம் கொஞ்சம் சறுக்கலாய்த்தான் இருந்தது. இலங்கையில் சிங்கர் கிண்ணம் கனடாவில் சகாரா கிண்ணம் இரண்டுமே அணிக்கு எட்டாமல் போனது.

இந்தியாவில் நடந்த டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணியை வென்று கவாஸ்கர்-போர்டர் கிண்ணத்தை இந்திய அணி பெற்றபோது டெண்டுல்காரின் முகத்தைப் பார்க்கவேண்டுமே, என்ன ஒரு பூரிப்பு! கப்டன் பதவியேற்று விளையாடிய முதல் டெஸ்ட் போட்டியில் வென்றதும், கிண்ணம் பெற்று கொடுத்ததும் இளம் கப்டனுக்கு பெருமைதான்.

'டைட்டன்' கிண்ணப் போட்டியில் தொய்ந்துபோகும் நிலையில் இருந்த அணியை நிமிர்த்தி நிறுத்தி வெற்றிப்பாதையில் கொண்டு சென்றார் டெண்டுல்கார். முயற்சிக்குப் பலனாக 'டைட்டன் கிண்ணம்' இளம் கரங்களில் தஞ்சமானது. சர்வதேச ஒருநாள் போட்டியில் டெண்டுல்கார் பெற்றுக் கொடுத்த முதல் கிண்ணம் அதுதான்! ஆனாலும், இந்திய அணி ஒரேயடியாக எழுந்துவிட்டதாகக் கூறமுடியாது.

சகல துறை ஆட்டக்காரர்கள், சிறந்த துவக்க ஆட்டக்காரர்கள் பற்றாக்குறை போன்ற குறைபாடுகள் தொடர்கின்றன. குறைகளை நிவர்த்தி செய்வது கப்டனின் கையில்தான் இருக்கிறது. (படத்தில் டைட்டன் கிண்ணத்துடன் டெண்டுல்கார்)




# நட - ராஜா

நடையில் பல ரகம் இருக்கிறது. நடையா இது நடையா? என்று பாடத்தக்க அளவில் நளின நடை நடப்பவர்களும் உண்டு. நளினம் என்று நினைத்துக்கொண்டு தெருவில் நடனம் ஆடிக்கொண்டு நல்ல நடையைக்கூட கோணல் நடையாக்கிச் செல்பவர்களும் உண்டு. சரி நமக்கேன் வம்பு. விஷயத்திற்கு வருவோம்.

படத்தில் இருக்கிறார் பாருங்கள், மிஸ்டர் ஆன்ட்ரேய் போர்லோவ். இவர் ஒரு நடை ராஜா. 'ப்பூ நடப்பது என்ன பெரிய வேலையா?' என்று அலட்சியமாக நினைக்காதீர்கள். இவரது நடை சாதாரண நடையல்ல, ஓட்டத்துக்கு ஈடான வேகமான நடை.

30 கிலோமீட்டரை 2 மணி 02 நிமிடம் 41 செக்கன்களில் நடந்து முடித்துவிட்டார். 1989 பெப்ரவரி 19இல் 'சொச்சி' என்னுமிடத்தில் அச்சாதனையைச் செய்தார். அத்தோடு விடவில்லை. அதே ஆண்டு ஆகஸ்ட் 5ம் திகதி மற்றொரு சாதனையையும் படைத்தார். ரசியாவில் லெனின் கிராட்டில் 50 கிலோமீட்டர் தூரத்தை 3மணி 37 நிமிடம் 41 செக்கன்களில் நடந்து கடந்தார். இதுவரை முறியடிக்கப்படாத உலக சாதனையாக இரண்டும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தற்போதைய ஒலிம்பிக் சாதனையாளரும் இவர்தான். ரசிய நாட்டைச் சேர்ந்தவர் இவர். நட ராஜா நட!






படிப்பகம்